விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 27 திங்கட்கிழமை (11.03.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 082

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# இலங்கை விடயத்தில் தலையிட முடியாதா?

## மத்திய அரசுக்கு கருணாநிதி கண்டனம்

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக அந்த நாட்டு அரசுக்கு நெருக்கடி கொடுக்கவியலாது என இந்திய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷிதும், காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் அபிஷேக் சிங்வியும் கூறியிருப்பது தமிழ் மக்களிடையே மிகப் பெரிய வருத்தத்தையும், வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது என தி.மு.க தலைவர் கருணாநிதி கூறியிருக்கின்றார். (20ஆம் பக்கம் பார்க்க)

## தீர்மானத்தை ஆராய விசேட குழு நியமனம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா சமர்ப்பிக்கவுள்ள தீர்மானம் தொடர்பில் ஆராய்வதற்கு விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தீர்மானம் தொடர்பில் ஆராய்ந்து குறித்த குழு பரிந்துரைகளை முன்வைக்கும் எனவும் அதன் அடிப்படையில் அரசாங்கம் அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்கும் எனவும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் உத்தேச தீர்மானத்தில், நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல், குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்துதல், குற்றச்சாட்டுகள் தொடர்பில் உண்மையைக் (20ஆம் பக்கம் பார்க்க)

## மோ.சைக்கிள் விபத்து இளம் குடும்பஸ்தர் பலி



கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதிக்கு குறுக்கே போடப்பட்டிருந்த வீதி தடுப்புடன் மோதி விபத்துக்குள்ளானதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று இரவு 9 மணியளவில் உரும்பிராய் -மானிப்பாய் வீதியில் இடம் பெற்றுள்ளது.

இதில் கோண்டாவில் குட்சட் வீதியை சேர்ந்த சின்னத்தம்பி கம்சன் (வயது 23) என்பவரே பலியானவராவார்.

அதே (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனிவா சமர்ப்பித்த தீர்மானத்தை தணிக்கும் முயற்சியில் இந்தியா!

### தெற்காசிய ஆய்வாளர் விபரிப்பு

இலங்கைத் தமிழர் விவகாரத்தை பொறுத்த வரை இதுவரை காலத்தில் இலங்கை விடயத்தில் இந்தியா ஒரு தயக்கத்துடனேயே செயல்பட்டு வந்துள்ளதாகத் தெற்காசிய விவகாரங்களுக்கான ஆய்வாளரான பேராசிரியர் சகாதேவன் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனிவா மனித உரிமைகள் ஆணையத்தில் இலங்கை குறித்த தீர்மானத்தில் கூட கடந்த தடவை அழுத்தங்களின் பேரில்தான் இந்தியா தீர்மானத்தை ஆதரித்ததே தவிர, அந்தத் தீர்மானத்தில் இருந்த வார்த் தைகளைக் தணிக்கும் வகையிலும் அது செயற்பட்டது என்றும் அவர் குறை கூறியுள்ளார்.

'இந்திரா காந்தி போல ஒரு அடிப்படையான ஒரு பலமான தலைமைத்துவம் இந்தியாவில் இல்லாத (20ஆம் பக்கம் பார்க்க)

## சாளின் மீதான தாக்குதல் தீவிர விசாரணைக்கு உத்தரவு

(யாழ்ப்பாணம்)

வலம்புரி அலுவலகச் செய்தியாளர் உதயராசா சாளின் மீதான தாக்குதல் குறித்து தீவிர விசாரணையை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்து கருணாரத்ன உத்தரவிட்டுள்ளார்.

யாழ்.நகரிலிருந்து வலம்புரி காரியாலயம் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த சாளின் மீது கடந்த வெள்ளியன்று 6 பேர் கொண்ட கும்பல் தாக்குதலை மேற்கொண்டது.

இதில் படுகாயமடைந்த சாளின் யாழ். போதனா (20ஆம் பக்கம் பார்க்க)

## ஹயஸ் வான் தீக்கிரை

பூப்புனித நீராட்டு விழாவுக்கு சென்ற ஹயஸ் வாகனத்தை இனந்தெரியாத சிலர் தீக்கிரையாக்கியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் கிளிநொச்சி புளியம்பொக்கணை நாகேந்திரபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தென்மராட்சியில் இருந்து பூப்புனித நீராட்டு விழாவுக்கு சென்ற குறித்த ஹயஸ் வாகனம் காற்றுப்போய் இடைவெளியில் நின்றுள்ளது.

வாகனத்தில் (20ஆம் பக்கம் பார்க்க)

## புலி ஆதரவாளர்களின் செயற்பாடு ஐ.நா கூட்டத் தொடரில் அதிகரிப்பு

### அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகள் யுத்த ரீதியாக பின்வாங்கினாலும், பிரிவினைவாதமாக செயற்படுவதில் தொடர்ந்தும் முன்னேறி வருவதாக சிறிலங்கா சுதந்திர கட்சியின் பொது செயலாளரும், சுகாதார அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தமது அரசியல் வாழ்க்கைக்கு 47 வருடங்கள் பூர்த்தியாகின்றமை மற்றும் நாடாளுமன்ற செயல்பாடுகளுக்கு 25 வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டுபொலநறுவை கேட்போர் கூடமொன்றில் கௌரவிக்கும் நிகழ்வொன்று நேற்று இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறுகையில், மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் விடுதலைப் புலி ஆதரவாளர்களின் செயல்பாடுகள் தற்போது மேலோங்கியுள்ளன.

யுத்தத்தாலும், பௌதிக ரீதியாகவும் அவர்கள் முறியடிக்கப் பட்டபோதும் இன்று ஜெனீவாவில் இருந்து கொண்டு இலங்கையை அழிப்பதற்குபாரிய அளவில் சூழ்ச்சிகளை மேற் (20ஆம் பக்கம் பார்க்க)



## அதிகாரப்பரவலாக்கல் தாமதிக்க தமிழ்க் கூட்டமைப்பே காரணம்

### குற்றம்சாட்டுகிறார் அமைச்சர்

அமெரிக்காவினால் வெளியிடப்பட்டுள்ள தீர்மான வரைபில், இலங்கையில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் அரசாங்கம் இன்னும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளும் இன்னும் அமுலாக்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் காரணமாகவே இன்னும் அதிகாரப் பகிர்வு விடயத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

அதிகாரப் பகிர்வு தொடர்பில் வெற்றிகரமான தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொள்ள முடியாது போனது. (20ஆம் பக்கம் பார்க்க)

## பொதுநலவாய மாநாட்டை பிரி. பகிஷ்கரிக்க வேண்டும்

### வெளியுறவு தெரிவுக் குழு கோரிக்கை

இலங்கையில் நடைபெறவுள்ள பொது நலவாய நாடுகளின் அமர்வை பகிஷ்கரிக்குமாறு விடுக்கப்பட்டு வரும் கோரிக்கைக்கு பிரித்தானிய வெளியுறவுத்துறை தெரிவுக் குழு ஆதரவு வெளியிட்டுள்ளது.

பிரித்தானிய எதிர்க் கட்சியான தொழில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிமொன் டன்ஸ்ஷேக் இதனை தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவின் வெளியுறவுத்துறை தெரிவுக்குழு; அந்த நாட்டின் மூன்று பிரதான கட்சிகளின் 11 நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்டிருக்கிறது.

இந்தக்குழு பிரித்தானியாவின் வெளியுறவு செயற்பாடுகள், நிதிகள் போன்ற விடயங்களை கண்காணிக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தொலைபேசியில் மிரட்டும் சம்பவங்கள் அதிகரிப்பு

## பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

தொலைபேசியை பயன்படுத்தி மோசடியான வகையில் வர்த்தகர்கள் மற்றும் ஏனையவர்களை அச்சுறுத்தி பணம் பறிக்கப்பட்டமை தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதை அடுத்து தீவிர விசாரணை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிறிவர்த்தன குறிப்பிட்டார்.

குற்றத்தடுப்புப்பிரிவினர், தீவிரவாத தடுப்புப்பிரிவினர், கொழும்பு குற்ற விசாரணை பிரிவினர் மற்றும் ஏனைய பொலிஸ் நிலைய விசாரணை குழுவினர் என தெரிவித்து வர்த்தகர்களின் வங்கிக் கணக்குகள் குறித்து சிலர் தகவல் திரட்டி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறன அச்சுறுத்தல்கள் விடுக்கப்படும் போது பாதிக்கப்படுவோர் கீழ்க்குறிப்பிட்டுள்ள தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொள்ளுமாறும் பொலிஸார் அறிவித்து வருகின்றனர்.

மிரட்டலுக்கு பயந்து அடங்கிப்போகாமல் அதில் இருந்து தப்பித்துக்கொள்ளுமாறு பொலிஸார் மேலும் அறிவித்துள்ளனர்.

பொலிஸ் அவசர பிரிவு 119, 011-2433 333 குற்றத்தடுப்புப்பிரிவு 011-2422176, 011-2320141-5 தீவிரவாத தடுப்புப்பிரிவு 011-2321839 கொழும்பு குற்ற விசாரணை பிரிவு 011-2685151, 0112662311, பொலிஸ் தலைமையகம் 011-2421111 மேற்குறிப்பிட்டுள்ள இலக்கங்களுக்கு உடன் அழைத்து முறைப்பாடு செய்துகொள்ளு மாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-11)

# தலிபான்களுடன் புலிகளை ஒப்பிட்ட இயக்குநரின் வீடு முற்றுகை!

(சென்னை)

சினிமா இயக்குநர் அமீர் கடந்த வாரம் வெளியான வார இதழ் ஒன்றில் தலிபான் தீவிரவாதிகளோடு விடுதலைப்புலிகளை ஒப்பிட்டு பேட்டி கொடுத்து இருந்தார். இதற்கு இந்து மக்கள் கட்சியினர் எதிர்ப்பு தெரிவித்து இருந்தனர்.

இந்த நிலையில் நேற்றுக் காலை தியாகராய நகர் அபிபுல்லா ரோட்டில் உள்ள இயக்குநர் அமீர் வீட்டை இந்து மக்கள் கட்சியினர் சென்னைமாவட்ட தலைவர் ஏழுமலை தலைமையில் முற்றுகையிட்டனர்.

தலிபான்களோடு விடுதலைப் புலிகளை ஒப்பிட்டதற்கு கண்டனம் தெரிவித்து கோஷம் எழுப்பினர்.

தேனாம்பேட்டை பொலிஸார் விரைந்து வந்து போராட்டத்தில் ஈடுபட்ட பெண் உள்பட 21பேரை கைது செய்தனர். அவர்கள் அனைவரும் அருகில் உள்ள சமூகநல கூடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (எ-11)

# ஹலால் சான்றிதழ் இனி கிடையாது

(கொழும்பு)

இலங்கையில் கடந்த சில மாதங்களாக சர்ச்சைக்குரிய விடயமாக இருந்து வந்த ஹலால் குறித்த விவகாரத்தில் இனிமேல் ஹலால் சான்றிதழுக்கு பதிலாக விற்பனைக்கு வரும் ஒவ்வொரு பொருளுக்கும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள அடிப்படைப் பொருட்களின் விபரங்களை மாத்திரம் குறிப்பிடுவது என்ற முடிபு காணப்பட்டுள்ளதாக இலங்கையின் முஸ்லிம் அமைப்பு ஒன்றை சேர்ந்தவரும் செய்தியாளருமான என்.எம். அமீன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து இரு தினங்களுக்கு முன்னதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையில் நடந்த சந்திப்பில் இலங்கை வர்த்தக சம்மேளனம், மூத்த பௌத்த தலைவர்கள் மற்றும் உலாமாக்கள் சபை ஆகியன இணைந்து இந்த முடிபை எடுத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு வழமை போல ஹலால் சான்றிதழ் பொறிப்பது என்றும் அதற்கான செலவை மறைமுகமாக இலங்கை வர்த்தக சம்மேளனம் ஏற்பது என்றும் அங்கு முறிவு காணப்பட்டதாகவும் அமீன் கூறினார்.

இதேவேளை உள் நாட்டை பொறுத்தவரை ஹலால் சான்றிதழ் வழங்குவதை நிறுத்துவது என்றும் அதற்கு பதிலாக விற்பனை செய்யப்படும் பொருட்களில் அவற்றின் மூலப் பொருட்களின் உள்ளடக்க விபரங்களை பொறிப்பது என்றும் முடிபு செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ஏற்கெனவே அச்சடிக்கப்பட்ட ஹலால் சான்றிதழ்கள் நிறைய இருப்பதால் எதிர்வரும் 6 மாதங்களுக்கு மாத்திரம் தொடர்ந்தும் அவற்றை அனுமதிப்பது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# மோட்டார் சைக்கிள்கள் மோதி சைக்கிளில் சென்ற முதியவர் மரணம்

(புளியம்பொக்கனை)

பரந்தன் - முல்லைத்தீவு பிரதான வீதியில் தர்மபுரம் சந்தைக்கு அருகே நேற்று மதியம் இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

பிரமந்தனாற்றைச் சேர்ந்த பொ.செல்வராசா (வயது 63) என்பவரே உயிரிழந்தவராவார்.

தேங்காய் மூடையுடன் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பிரஸ்தாப நபரை மோட்டார் சைக்கிளொன்று மோதியது. இதனால் கீழே விழுந்த அவரை மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதியதால் படுகாயமடைந்த அவர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது. (எ-11)

# சட்டவிரோத துப்பாக்கிகள் மீட்பு

(கொழும்பு)

புளத்சிங்கள பகுதியிலிருந்து சட்டவிரோத துப்பாக்கி 21யை மீட்டுள்ளதாகவும் சந்தேகத்தின்பேரில் 10கைது செய்யப்பட்டுள்ளதாகவும் களுத்துறை குற்றப்புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர்.

கட்டுத்துவக்கு உட்பட சட்டவிரோதமான துப்பாக்கிகளே இவ்வாறு நேற்று ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சட்டவிரோத துப்பாக்கிகளில் அதிகமானவை காட்டு விலங்குகளை வேட்டையாடுவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)

# தரக்குறைவான பெற்றோல் இறக்குமதி

(கொழும்பு)

16ஆயிரம் மெற்றிக்தொன் தரக்குறைவான பெற்றோல் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக தேசிய சேவைகள் சங்கம் மற்றும் சிலோன் பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஆகியன குற்றஞ்சாட்டியுள்ளன.

லங்காஐ.ஓ.சி. நிறுவனமே தரக்குறைவான பெற்றோலை இறக்குமதி செய்துள்ள தாகவும் அந்த பெற்றோல் திருகோணமலை துறைமுகத்தில் இறக்கப்பட்டுள்ளதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளன.

அந்த பெற்றோலின் மாதிரிகளை பரிசோதனை செய்தபோது அவை தரக்குறைந்தவை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தேசிய சேவைகள் சங்கத்தின் தலைவர் ஆனந்த பாலித்த தெரிவித்தார். (எ-11)

# இலங்கை - சீன இராணுவ உறவு அதிகரிப்பு - த ஹிந்து தகவல்

(டில்லி)

சீனா, இலங்கையுடனான இராணுவத் தொடர்புகளை அதிகரித்து வருவதாக த ஹிந்து தெரிவித்துள்ளது.

சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் லியாங் கோங்லீ இலங்கை வந்திருந்த போது, தென்னாசியப் பகுதிகளில் இராணுவத் தொடர்புகளை வலுப்படுத்த சீனா முக்கியத்துவம் வழங்குவதாகத் தெரிவித்திருந்தார்.

எனினும் இது பிராந்திய பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவே தவிர ஏனைய நாடுகளை அச்சுறுத்துவதற்காக இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையிலேயே த ஹிந்து பத்திரிகை செய்தியை வெளியிட்டுள்ளது.

இந்து சமுத்திரம் மற்றும் ஆபிரிக்கப் பிராந்தியங்களில் சீனா தமது இராணுவ பலத்தை அதிகரித்து வருவதாக, வாஷிங்டனிலும் புதுடில்லியிலும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே, சீன பாதுகாப்பு அமைச்சு இந்தக் கருத்தை வெளியிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# நஞ்சு ஊறிய கிழங்கினை உட்கொண்ட குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

நஞ்சு ஊறிய கிழங்கினை மது போதையில் உண்ட குடும்பஸ்தர் சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி குடத்தனை கிழக்கு குடத்தனையைச் சேர்ந்த கடற்தொழிலாளியான கணபதிப்பிள்ளை பாலசுந்தரம் (வயது 60) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் நஞ்சு ஊறிய கிழங்கினை குறித்த குடும்பஸ்தர் மதுபோதையில் உண்டுள்ளார்.

நஞ்சுக் கிழங்கினை உண்ட குடும்பஸ்தர் மந்திகை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்பு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந் நிலையில் நேற்று காலை 7 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இவரது மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணையை மேற்கொண்டார்.

சடலம் பிரேதபரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-6)

# கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கிணற்றிலிருந்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் ஒன்று பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது. சண்முக நாதன் தியாகராஜ் (வயது 36) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்ட வீதி அருள்மாத கோயிலுக்கு அருகாமையில் உள்ள வீட்டு கிணற்றிலேயே மேற்படி சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமானது யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-6)

பிள்ளையார் இன்

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை. மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

தோசை உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

மசாலா தோசை உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(சி-2595)

கண்ணீர் அஞ்சலி



யாழ். பல்கலைக்கழக முதுகல்விமாணி மாணவனும், முள்ளிவாய்க்கால் கிழக்கு அ.த.க. பாடசாலையின் அதிபருமாகிய கு.சிவசுப்பிரமணியம் அவர்களின் அன்புத்தாயார்

திருமதி குமரேசபிள்ளை அருந்தவம்

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம்.

அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

முதுகல்விமாணி மாணவர்கள் 2011/2012
யாழ். பல்கலைக்கழகம்.

வேலை வாய்ப்புக்கள்

Easy Lanka Jobs

நாடு முழுவதும் பல கம்பனிகளுக்கான வேலைவாய்ப்புக்கள் எம்மிடம் உள்ளது.
வயது:- 20-45 வரை
உங்களின் தகுதிக்கேற்ப வேலையை நாங்கள் உங்களுக்கு வழங்குவோம்.
மேலதிக விபரங்களுக்கு:-
071-3591932
Email:- EasyLankaJobs@gmail.com

(2134)

செல்லா சினிமா யாழ்ப்பாணம்

D.T.S மாசி A/C

01 03 2013 முதல்



அர்ஜுன், ரிச்சா மற்றும்

வெகு விரைவில்...

கடை ஏலம் விடுதல்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 26.03.2013 செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இவ் பொங்கல் உற்சவத்தின் போது வாணிபம் செய்ய விரும்புகின்றவர்களுக்கான கடை ஏலம் விடும் நிகழ்வு எதிர்வரும் 17.03.2013 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது என்பதனை அறியத் தருகின்றோம்.

முக்கிய குறிப்பு :- உணவு வாணிபங்கள், ஐஸ்கிறீம் வாணிபங்கள் என்பவற்றை மேற்கொள்ள விரும்புவோர் உள்ளூராட்சி மன்றத்தின் அவ் வாணிபத்திற்கான உரிமம் பெற்றவர்களாக இருப்பது அவசியமானது.

- ஆலய பரிபாலன சபை

(சி-2650)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அரசரிடம் பாட்டி கேட்ட கேள்வி

ஒரு ஊரிலே மகாராஜா ஒருவர் இருந்தார். அவர் மிகவும் நல்லவர்; தர்ம சிந்தனை உள்ளவர்.

அவர் எல்லோருக்கும் அனைத்து உதவிகளையும் செய்து வந்தார். யார் உதவி கேட்டாலும் "இல்லை" என்று சொல்ல மாட்டார்.

ஒரு சமயம் அவர் பெரிய காட்சிச்சாலை ஒன்றைத் திறந்து வைத்தார்.

அதில் நிறைய பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அவை அனைத்தையும் இலவசமாக மக்களுக்குக் கொடுப்பதற்காக மகாராஜா அங்கு வந்திருந்தார்.

"இந்தக் காட்சிச்சாலைக்கு யார் வேண்டுமானாலும் வரலாம்; போகலாம். எந்தப் பொருளை வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு போகலாம். பணம் செலுத்தத் தேவையில்லை. அந்த அளவிற்கு ஏற்பாடுகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அந்தக் காட்சிச்சாலைக்கு ஏராளமான மக்கள் வந்தார்கள். அவரவர்களுக்கு வேண்டியதை எடுத்துக் கொண்டு போனார்கள்.

சிலர் தங்களுக்குத் தேவையான உடுப்பு வகைகளை எடுத்துக் கொண்டு சென்றனர்.

சிலர் வந்து விலையுயர்ந்த நகைகளை எடுத்துச் சென்றனர். வேறு சிலர் நல்ல புத்தங்களை எடுத்துச் சென்றனர்.

இப்படியாக அங்கு வைக்கப்பட்டிருந்த பொருட்களை எடுத்துச் சென்றனர். அதனால் எல்லோருக்கும் முழு மனநிறைவு ஏற்பட்டத்தைக் காணக்கூடியதாக இருந்தது. அவர்கள் மகிழ்ச்சியுடன் திரும்பிச் சென்றனர்.

காட்சிச்சாலையைப் பார்க்க வந்தவர்களில் ஒரு வயதான அம்மா இருந்தார். அவர் மட்டும் அங்கிருந்து எதையும் தொடவில்லை. அவருக்கு மனநிறைவு இல்லை.

எல்லோரும் ஆச்சரியமாக அந்த அம்மாவை பார்த்தார்கள்.

ஊர் மக்களின் மனநிறைவு- இந்த அம்மாவுக்கு இல்லையா? என்ன காரணமாக இருக்கும்?" என்று அனைவரும் நினைத்தார்கள்.

அவர்கள் அந்த அம்மாவிடம் "ஏன் பேசாமல் அமைதியாக இருக்கிறீர்கள்? உங்களுக்குப் பிடித்ததை எடுத்துக் கொள்ள வேண்டியதுதானே?" என்று வினவினார்கள்.

"இங்கே இருக்கும் எந்தப் பொருளும் எனக்குத் திருப்தி அளிக்கவில்லை; நான் மகாராஜாவைப் பார்க்க வேண்டும்" என்று அவர் கூறினார்.

அங்கே இருந்தவர் ஓடிப் போய் மகாராஜாவிடம் அம்மா கூறியதை சொன்னார்.

உடனே மகாராஜா ஒரு யானை மீது ஏறிக் கொண்டு அந்த அம்மாவைப் பார்ப்பதற்காக வந்தார். யானையில் இருந்து மகாராஜா கீழே இறங்கினார்.

உடனே அந்த அம்மா ராஜாவைப் பார்த்து "ஒரு முக்கியமான விடயம் பற்றி உங்களிடம் பேச வேண்டும்" என்றார்.

அந்த அம்மா ராஜாவின் அருகில் சென்று வலது கரத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டு, "மகாராஜா! இப்போது நீங்கள் எனக்குச் சொந்தமாகி விட்டீர்கள். இந்தக் காட்சிச்சாலையில் இருக்கும் சிறிய சிறிய பொருட்களையும் விளையாட்டுப் பொம்மைகளையும் நான் விரும்பவில்லை. உங்களைப் பெற வேண்டுமென்றுதான் விரும்புகிறேன். நீங்கள் எனக்குச் சொந்தமாகி விட்டதால், இந்த இராச்சியத்தின் செல்வம் முழுவதும் இப்போது எனக்குச் சொந்தமாகி விட்டது" என்று கூறினார்.

இதைக் கேட்ட மகாராஜா மலைத்துப் போய் நின்றார். அந்த அம்மாவை அழைத்துச் சென்று கடைசி வரையில் தன் அரண்மனையிலேயே வைத்து தாய் மாதிரி கவனித்துக் கொண்டார்.

"உலக இச்சைகளையும் பொருட்களையும் துறந்து இந்தப் பரந்த பிரபஞ்சத்தின் மூலம் பரம்பொருளைப் பெற்று விட்டால், உங்களுடைய அனைத்து ஆசைகளும் பூர்த்தி ஆகிவிடும்" என்று ரிஷிகேஷ் சுவாமி சிவானந்தர் கூறியுள்ளார்.

எப்படி ஞானமுள்ள அந்த வயதான அம்மா மகாராஜாவைச் சொந்தமாகப் பாராட்டி அவருடைய செல்வத்திற்கெல்லாம் அதிபதியாக மாறினாரோ அப்படியே நீங்களும் இறைவனைப் பெற்று விட்டால் அனைத்து வசதிகளும் உங்களைத் தேடிக் கொண்டு வரும்" என்றார்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# இலங்கைக்கான தீர்மானத்தை இந்தியாவே கொண்டு வந்திருக்க வேண்டும்! -பா.ஜ.க

ஐ.நா சபையில் இலங்கை போர்க்குற்றங்கள் தொடர்பாக அமெரிக்கா தீர்மானம் கொண்டு வருகிறது. ஆனால் அந்த தீர்மானத்தை இந்தியா கொண்டு வந்திருக்க வேண்டும். இலங்கை தமிழர் மறு வாழ்வுக்காக பாரதீய ஜனதா தொடர்ந்து போராடும் என பாரதீய ஜனதா கட்சியின் மாநில தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கரூரில் வைத்து நிருபருக்கு பேட்டி வழங்குகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அப்போது அவர் கூறியதாவது , இலங்கை பிரச்சினை கவலை தரக் கூடியதாக இருப்பதாகவும் இலங்கை தமிழர்களுக்கு முழு சுதந்திரத்துடன் புனர்வாழ்வு கிடைக்க இந்தியா பொறுப்பெற்க வேண்டும் என்றும் பாரதீய ஜனதா கட்சியின் தேசிய செயற்குழு தலைவர் ராஜ்நாத் சிங் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை தமிழர்கள் மீது தாக்குதல் மற்றும் தமிழக மீனவர்கள் மீது தொடர் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக இந்தியாவில் எச்சரிக்கையை இலங்கை கண்டு கொண்டதாகவே தெரியவில்லை.

தன்னுடைய அத்துமீறல் செயல்களுக்கு இந்தியா துணையாக இருக்கும் என்று இலங்கை எண்ணிவிட்டதோ என்று அச்சம் ஏற்பட்டுள்ளது.

தமிழக மீனவர்கள் உயிர்களை, உடமைகளை காக்க இந்தியா தயாராக வேண்டும். இலங்கைஇறுதி எச்சரிக்கை விடுத்து அதை செயற்படுத்தி காட்ட வேண்டும்.

மேலும் தேர்தல்களில் தனித்து போட்டியிடும் கட்சிகள் ஏனைய தேர்தல்களிலும் அவ்வாறே போட்டியிட வேண்டும். நாட்டுக்கு நல்ல தலைமை வேண்டும் என்று விரும்பும் எந்த கட்சியுடனும் கூட்டணி வைத்து அவர்களோடு இணைய தயாராக உள்ளோம். தமிழகத்தில் நடைபெறவுள்ள கூட்டுறவு சங்க தேர்தல்களில் பாரதீய ஜனதா கட்சி போட்டியிடும் எனவும் கூறியுள்ளார். (அ-2)

# கழிவு வாய்க்கால்களை விரைவில் புனரமைக்க நடவடிக்கை எடுங்கள்

## மக்கள் கோரிக்கை

அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் இவ்வருடம் செப்பனிட்டு தருவதாக தெரிவிக்கப்பட்ட உருத்திரபுரம் கிழக்கு, உருத்திரபுரம் மேற்கு, சிவநகர் ஆகிய கிராமங்களில் உள்ள கழிவு வாய்க்கால் வேலைகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. பெய்து வரும் மழை வெள்ளத்தினால் இக்கிராமங்களின் வீதிகள் யாவும் தொடர்ந்தும் பாதிக்கப்படுவதாக இக்கிராமமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, இந்த வாய்க்கால் திருத்தம் தொடர்பாக பல தடவைகள் அதிகாரிகள் பார்வையிட்டனர்.

மேலும் பத்திரிகைகள் மூலம் தகவல்கள் வெளிக்கொண்டு வரப்பட்டன. அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் இவ் வேலைத் திட்ட பகுப்பாய்விற்கு 8 பேர் வரையிலான இளம் பொறியியலாளர்களும் அனுப்பிவைக்கப்பட்டு திட்ட முன்மொழிவையும் பெற்றுச் சென்றனர். இதேவேளை கடந்த ஆண்டு இறுதியில் இரத்தினம் பண்ணை கிராமத்தில் நடைபெற்ற கிராமத்தில் நடைபெற்ற வேலையை பார்வையிட வருகை தந்த அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அமரவீரவிடம் இவ்விடயம் பொதுமக்களால் தெரியப்படுத்தப்படுத்தப்பட்டது.

இதன்போது இது பாரிய வேலைத்திட்டம் என்பதுடன் திட்ட ஆய்வும் செய்யப்பட்டுள்ளதால் இவ்வாண்டுக்கான வேலைத்திட்டத்தில் செயற்படுத்தலாம் எனவும் உறுதியளித்திருந்தார். எனி னும் இவ்வாண்டில் இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் எவ்வித நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்படவில்லை என இக்கிராமங்களின் மக்கள் ஆதங்கப்படுகின்றனர். எனவே தொடர்ந்து பல காலமாக இக்கிராமங்களை பேரழிவுக்கு உட்படுத்தும் அவலத்தில் இருந்து பாதுகாக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க அதிபர் ஆகியோர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (அ-3-254)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 180 | 160 | 120 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 170 | 200 | 250 | 200 |
| தக்காளி | 40 | 80 | 80-100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 50 | 40 | 60 | 60 |
| கரட் | 100 | 120 | 140 | 140 |
| பூசணி | 70 | 60 | 60 | 60 |
| புடோல் | 50 | 70 | 80 | 60 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 60-90 | 80 | 80-90 | 60-100 |
| பெரிய வெங்காயம் | 80 | .70 | 100 | 90 |
| பாகற்காய் | 140 | 120 | 140 | 140 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 70 | 70 | 80 |
| பயற்றங்காய் | 140 | 80 | 100 | 120 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 90 | 60 | 80 | 100 |
| கறிமிளகாய் | 100 | 140 | 140 | 140 |
| முருங்கைக்காய் | 600 | 500 | 600 | -- |
| போஞ்சி | 90 | 120 | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | 120 | 160 | 100 | -- |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 40 | 60 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 52 | 45-50 |
| இராசவள்ளி | 100 | 100 | 120 | 100 |
| வெங்காயப்பூ | 120 | 120 | 160 | 200 |

# இராசி பலன்

*11.03.2013*
*(மாசி 27, திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.20 மணிக்கு*
*அமாவாசை பின்னிரவு 2.10 மணிவரை*
*சதயம் பிற்பகல் 12.51 மணிவரை*
*இராகுகாலம் 7.52-9.22 மணிவரை*
*சுபநேரம் 12.22-1.52 மணிவரை*
*அமாவாசை விரதம்*

**மேடம்** வருமானம் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், பயணங்களால் பலனுண்டு, குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** தொலைபேசி மூலம் பொன்னான தகவலொன்று வந்துசேரலாம், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், புதிய திருப்பங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படும்.

**மிதுனம்** கூட்டுத்தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் தீரும், பூர்வீகச் சொத்து தகராறுகள் நன்மைதரும், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பார்கள்.

**கடகம்** உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், வாழ்க்கைத்துணை வழியே சிறுசிறு கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும், உடல்நலனில் கூடுதல் கவனம் எடுக்க வேண்டிய நாள்.

**சிங்கம்** கனவு பலிதமுண்டு, மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், உடல்நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக்கும்.

**கன்னி** எதிரிகள் உதிரியாகும் நாள், ஆரோக்கியமான நாள், தொழிலில் வளர்ச்சியுண்டு, பெரியோர் பாராட்டும் வகையிலான செயல்கள் செய்யும் வாய்ப்புண்டு, தொலைபேசிமூலம் மனம் மகிழும் விதத்தில் தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறலாம், பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள், புதிய தொழில் தொடங்க எடுத்த முயற்சி வெற்றிதரும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**விருச்சிகம்** பாராட்டும் புகழும் கூடும், வருமானம் பெருக வழிவகை செய்து கொள்வீர்கள், தேவையற்ற பயம் ஏற்படலாம், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** தெய்வ அனுகூலத்தால் சிறப்புகள் வந்துசேரும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறலாம், பொருளாதார நிலை உயரும்.

**மகரம்** காணாமல்போன பொருளொன்று மீண்டும் கைக்கு கிடைக்கும் வாய்ப் புண்டு, குடும்பத்தில் கவலைகள் ஏற்படும் வாய்ப்புண்டு, நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம்.

**கும்பம்** வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், உடல்நலனில் கவனம் தேவை, மறக்க முடியாத சம்பவமொன்று நடைபெறலாம்.

**மீனம்** பயணங்களால் தேகநலன்கள் பாதிக்கப்படலாம், முன்னோர் வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் சிலரின் அன்புக்கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம், தூரதேசச் செய்திகள் மகிழ்ச்சிதரும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்குச்சந்தை, தங்கம்

# கடந்த வாரம் சந்தை நிலைவரம்

வெளிநாட்டு முதலீட்டாளர்களின் அதிகளவான பங்களிப்புடன், கடந்த இரண்டு வாரங்களில் பதிவாகியிருந்த உயர்வான பெறுமதியை கடந்த வாரம் பங்குச்சந்தை பதிவு செய்திருந்தது.

முன்னைய வாரங்களில் ஏற்பட்டிருந்த சரிவு நிலைகளிலிருந்து மீண்டு, மீண்டும் ஓரளவு உயர்வு பாதையில் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்றன.

கடந்த வாரத்தை பொறுத்த மட்டில், கொமர்ஷல் வங்கி , சம்பத் வங்கி, சிலோன் டுபாக்கோ போன்ற நிறுவனங்களின் பங்குகள் சிறந்த பெறுமதியை பெற்றிருந்தன.

சிலோன் டுபாக்கோ நிறுவனத்தின் தலைமைத்துவத்தில் மாற்றம் இடம்பெறுகின்றமை குறித்த அறிவித்தல் வெளியாகியமையை தொடர்ந்து, இந்நிறுவனத்தின் பங்குகளில் சற்று ஈடுபாடு அதிகரித்ததை அவதானிக்க முடிந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை பங்குச் சந்தை நடவடிக்கை நிறைவடையும்பொழுது, அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 5,691.39 ஆகவும், எஸ். அன்ட் பி ஸ்ரீலங்கா 20 சுட்டி 3,222.74 ஆகவும் அமைந்திருந்தன.

மார்ச் 4-ம் திகதியுடன் ஆரம்பமான கடந்த வாரத்தின் இறுதியில் மொத்த பங்கு புரள்வு பெறுமதியாக ரூ.6,742,202,997 அமைந்திருந்தது.

கடந்த வாரம் மொத்தமாக 22,599 பங்கு கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன. இதில் உள்நாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 21,212 ஆகவும் வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 1,387 ஆகவும் பதிவாகியிருந்தன.


கடந்த வார கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் மிரமர், நேஷன் லங்கா (உரிமைப்பங்குகள்), ஆசிரி சென்ரல், ஆர்பிகோ மற்றும் ஒஃபிஸ் எக்யுப்மன்ட் போன்றன முதல் ஐந்து சிறந்த இலாபமீட்டிய பட்டியலிடப்பட்ட கம்பனிகளாக பதிவாகியிருந்தன.

சிலோன் லெதர் (உரிமைப் பங்குகள்), பிசி பார்மா, சமசன் இன்டர்நட் , பேருவெல வோல்கின் மற்றும் அகலவத்தை போன்ற நிறுவனங்களின் பங்குகள் அதி களவு நஷ்ட மீட்டியதாக பதிவாகியிருந்தன.

### தங்கத்தின் விலை

கடந்த வாரம் 24 கரட் பவுணொன்று 51, 500ரூபாயை அண்மித்து காணப்பட்டதாக தங்க நகை வட்டாரங்களின் மூலம் அறியமுடிந்தது. 22 கரட் பவுணொன்று சராசரியாக 47,100 ரூபாயுக்கு விற்பனை செய்யப்பட்டிருநதது.

கடந்த வாரங்களுடன் ஒப்பிடுகையில் தங்கத்தின் விலையிலும் சற்று வீழ்ச்சி ஏற்பட்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.



இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையமாக அமைக்கப்பட்டுள்ள மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் எதிர்வரும் 18ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

இதைமுன்னிட்டு தற்போது விமான நிலையம் பொதுமக்களின் பார்வைக்கு விடப்பட்டுள்ளது. பயணிகள் வருகைப் பகுதியில் அமைந்த அலங்கார நீர்த் தடாகப் பகுதியையும் அதை மாணவர்கள் பார்வையிடுவதையும் படத்தில் காணலாம்.

# செலான் வங்கியின் கடன் பத்திர வழங்கல் ஆரம்பமாகிய தினத்திலேயே மிகைக் கோரல்

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

பெப்ரவரி 14-ம் திகதி ஆரம்பமான செலான் வங்கியின் தொகுதிக் கடன் பத்திர வழங்கலானது, வழங்கல் ஆரம்பிக்கப்பட்டு ஒரு சில மணித்தியாலங்களுக்குள்ளேயே மிகையாகக் கோரப்பட்டுள்ளது.

செலான் வங்கி பி.எல்.சி நிறுவனமானது ரூபாய் 1 பில்லியனை திரட்டிக் கொள்ளும் பொருட்டு, ஒவ்வொன்றும் ரூபாய் 100 பெறுமதியானதும் ஐந்து வருடங்களுக்கானதுமான பிணையற்ற (Unsecured) பிரதியீடான (Subordinated) மீட்கக் கூடிய (Redeemable) 10,000,000 தொகுதிக் கடன் பத்திர வழங்கலை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தது.

அத்துடன், மிகையாக வழங்கல் கோரப்படுமிடத்து மேலும் ரூபாய் 1 பில்லியனுக்கான கடன் பத்திரங்களை வழங்குவதன் மூலம் மொத்த வழங்கலை ரூபாய் 2 பில்லியனாக அதிகரித்து கொள்வதற்கான அங்கீகாரத்தையும் வங்கி பெற்றிருந்தது.

இந்நிலையில், முதற்கட்ட வழங்கலின் அளவு மற்றும் கடன் பத்திர வழங்கலை அதிகரித்துக் கொள்வதற்காக காணப்பட்ட மேலதிக தெரிவு ஆகிய இரண்டுமே (ரூபாய் 2 பில்லியன்) விநியோகத்திற்காக கோரப்பட்டது மட்டுமன்றி, தொகுதிக் கடன் வழங்கல் ஆரம்பிக்கப்பட்டு ஒரு சில மணித்தியாலங்களுக்குள்ளேயே வழங்கலானது மிகை விநியோகம் செய்யப்பட்டு விட்டது.

## துறைமுக அதிகார சபை இலாபமீட்டியுள்ளது!

இலங்கை துறைமுக அதிகார சபை 2012-ம் ஆண்டு 12.257 பில்லியன் ரூபாயை செயற்பாட்டு இலாபமாக பெற்றுள்ளதாக அதிகார சபையின் தலைவர் கலாநிதி பிரியத் பந்துவிக்ரம தெரிவித்துள்ளார்.

இலங்கை துறைமுக அதிகார சபையின் வரலாற்றில் அடைந்த அதிகூடிய இலாபம் இதுவென அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நிகழ்வு




மைக்ரோசொப்ட் சிறிலங்கா நிறுவனமும் கல்வி அமைச்சின் அறிவுடைச் சமூகத்திற்கான கல்வி செயற்றிட்டமும் (EKSP) தகவல்தொழில்நுட்பத்தை மையமாக கொண்டு இணைந்து நடத்தும் நிகழ்ச்சியான Innovative Teachers and Students இன்று 11ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாடளாவிய ரீதியில் பாடசாலைகளை இலக்காகக் கொண்டு இத்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.




# சிலோன் டுபாக்கோ நிறுவன தலைமைத்துவத்தில் மாற்றம்


JAYAMPATHI BANDARANAYAKE
Chairman

சிலோன் டுபாக்கோ நிறுவனத்தின் தலைவராக பணியாற்றி வரும் ஜயம்பதி பண்டாரநாயக்க எதிர்வரும் நிறுவனத்தின் வருடாந்த ஒன்றுகூடலுடன் தனது பதவியிலிருந்து விலகிக்கொள்ள தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளார்.

சுமார் 45 வருடகாலமாக சிலோன் டுபாக்கோ நிறுவனத்தில் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டுள்ள இவர், எதிர்வரும் 28-ம் திகதியுடன் பதவி விலகுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவரைத் தொடர்ந்து, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் தலைவராக செயலாற்றி வரும் சுசந்த ரத்நாயக்க சிலோன் டுபாக்கோ நிறுவனத்தின் தலைமைப் பதவியை பொறுப்பேற்கவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் தற்போது, சிலோன் டுபாக்கோ கம்பனியின் நிர்வாக சபையில் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு துறை 11.8 சதவீதம் வளர்ச்சி

நடப்பு ஆண்டில் இந்திய ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத் துறை 11.8 சதவீதம் வளர்ச்சி கண்டு 91 ஆயிரத்து 700 கோடி இந்திய ரூபாயாக உயரும் என பிக்கி-கே.பி.எம்.ஜி அமைப்பு தெரிவித்துள்ளது.

இது கடந்த 2011-ம் ஆண்டில் 72,800 கோடி ரூபாயாகவும், 2012-ம் ஆண்டில் 82 ஆயிரம் கோடி ரூபாயாகவும் இருந்தது.

ஊடகத் துறையில்; டிஜிற்றல் மயமாக்கல், பிராந்திய ஊடகங்களின் சிறப்பான வளர்ச்சி, வரவிருக்கும் தேர்தல்கள் போன்றவற்றால், நடப்பாண்டில் இத்துறையின் வளர்ச்சி நன்கு இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் திரைத்துறை மற்றும் புதிய ஊடகங்களின் வரவும், இத்துறையின் வலிமையான வளர்ச்சிக்கு துணைபுரியும் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

இதுபோன்றவற்றால் வரும் 2017ஆம் ஆண்டிற்குள் ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு துறை ஆண்டுக்கு சராசரியாக 15.2 சதவீதம் என்ற அளவில் சிறப்பாக வளர்ச்சி கண்டு 1,66,100 கோடி ரூபாயாக உயரும் என அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

## இலங்கையின் எயார்டெல்லை கொள்வனவு செய்ய ஆக்சியாடா ஆர்வம்

இலங்கையில் தொலைத்தொடர்பு சேவைகளை வழங்கிவரும் இந்தியாவின் பார்தி எயார்டெல் நிறுவனத்தின் அங்கத்துவ நிறுவனமான எயார்டெல் லங்கா நிறுவனத்தின் பங்குகளை கொள்வனவு செய்ய மலேசியாவின் தொலைத் தொடர்பு சேவைகளை வழங்கும் நிறுவனமான ஆக்சியாடா ஆர்வத்தை வெளியிட்டுள்ளதாக இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து ஆக்சியாடா நிறுவனத்துடன் தொடர்புகொண்டபோது, உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

இலங்கை தொலைத்தொடர்பு சந்தையில் மொத்தமாக 8-9 சதவீத சந்தைக் கொள்ளளவை எயார்டெல் லங்கா கொண்டுள்ளது.

இதேவேளை டயலொக் 40 வீதமான சந்தை கொள்ளளவை தன்னகத்தே கொண்டுள்ளது.

இலங்கை சந்தை என்பது மிகவும் சிறியளவில் காணப்படுகின்றது. எனவே இலங்கை சந்தையில் மேலதிக முதலீடுகளை மேற்கொள்வது எவ்வித பயனையும் வழங்காது, எனவே இந்த வியாபாரத்தின் பங்குகளை விற்பனை செய்துவிட்டு ஆபிரிக்க சந்தைகளில் தனது கவனத்தை செலுத்துவதன் மூலம் நிறுவனத்தின் தற்கால கடன்களை குறைத்துக் கொள்ள முடியும் என பார்தி எயார்டெல் நிறுவனத்தின் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். வெகு விரைவில் இந்த கொடுக்கல் வாங்கல் குறித்த அறிக்கை வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அமெரிக்க வேலைவாய்ப்பு அதிகரிக்கிறது



அமெரிக்காவில் வேலைவாய்ப்பு சந்தை கடந்த பெப்ரவரி மாதம் எதிர்பார்க்கப்பட்டதைவிட மேம்பட்டிருக்கிறது.

வேலையில் இருப்பவர்களின் எண்ணிக்கை2 இலட்சத்து 36ஆயிரமாக உயர்ந்தது என்றும், வேலையின்மை விகிதம் 7.7 சதவீதமாக குறைந்தது என்றும் அதிகாரபூர்வ புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

இது எதிர்வரும் மாதங்களில் நீடித்தால் அமெரிக்கப் பொருளாதாரம், நிதி நெருக்கடியிலிருந்து பலவீனமான அளவில் முன்னர் மீண்டது என்ற நிலைக்குப் பின்னர், தற்போது சற்று வேகம் பெறுகிறது என்பதைஇது கோடிகாட்டுவதாக இருக்கும் என பொருளாதார வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 125.71 | 128.87 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 188.14 | 193.78 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 163.77 | 169.36 |
| சுவிஸ் பிராங் | 132.33 | 137.41 |
| கனேடிய டொலர் | 121.25 | 125.72 |
| அவுஸ்திரேலிய டொலர் | 127.94 | 132.95 |
| சிங்கப்பூர் டொலர் | 100.31 | 103.86 |
| ஜப்பான் யென் | 1.31 | 1.36 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.33 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 34.65 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் பற்றவைத்த தீ எங்கும் பரவவேண்டும்- சீமான்

(புதுடில்லி)

சென்னை லயோலா கல்லூரி மாணவர்கள் காலவரையறையற்ற உண்ணாநிலைப் போராட்டம் என்ற தீயை பற்றவைத்துள்ளனர். இந்தத் தீ இதோடு அணைந்துவிடாமல் தமிழகத்தில் உள்ள அனைத்து மாணவர்களிடமும் பெரும் தீயாக பரவவேண்டும் என நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழர்களை திட்டமிட்டு இனப்படுகொலை செய்த இலங்கை அரசை தண்டிக்கவேண்டியும் தமிழீழ மக்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தக்கோரியும் சென்னையிலுள்ள தமிழீழ விடுதலைக்கான மாணவர்கள் இயக்கத்தைச் சேர்ந்த 8 மாணவர்கள் காலவரையறையற்ற உண்ணாநிலைப்போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அவர்களுக்கு தமிழின உணர்வாளர்களும் அரசியல் கட்சி தலைவர்கள் பலரும் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் மாணவர்களைச் நேரில் சந்தித்து ஆதரவு தெரிவித்தார்.

அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், தமிழீழத்திற்கான போராட்டம் தமிழகத்தில் வலுப்பெற்று வருகின்றது. தற்போது இந்த மாணவர்கள் காலவரையறையற்ற உண்ணாநிலைப்போராட்டம் என்ற தீயை பற்றவைத்துள்ளனர். இந்தத் தீ இதோடு அணைந்துவிடாமல் தமிழகத்தில் உள்ள அனைத்து மாணவர்களிடமும் பெரும் தீயாக பரவவேண்டும்.

அனைவரும் போராட்டத்தில் இறங்க வேண்டும். அப்போதுதான் தமிழீழ மக்களுக்கு விடிவு பிறக்கும். எவ்வளவோ போராட்டங்களுக்குப் பின்பு கடைசியாக இந்த மாணவர்கள் தங்களையே வருத்திக்கொண்டு உண்ணாநிலைப்போராட்டம் மேற்கொண்டுள்ளனர்.

இவர்களுக்கு நாம் தமிழர் கட்சி கடைசி வரை ஆதரவாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார். (அ-2)

# கஞ்சாவுடன் மூவர் கைதாகினர்

திருகோணமலை புல்மோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெத்தமரன்வாடி பகுதியில் 13 கிலோ 400 கிராம் கஞ்சாவுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் பயணித்த கார் ஒன்றை சோதனை செய்தபோது அதில் இருந்து கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் செவனகல, வெல்லவாய மற்றும் பதவிய ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என புல்மோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் குச்சவெளி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

புல்மோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# ஜெனீவா யோசனை தொடர்பில் இலங்கை அரசுடன் பேசுங்கள்

## பிளேக்கை கோரினார் சுவாமி

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்படவுள்ள யோசனை தொடர்பில் இலங்கையுடன் பேச்சுக்கள் நடத்தப்படவேண்டும் என்று ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணிய சுவாமி அமெரிக்க ஒபாமா நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக பிடிஐ செய்திச்சேவை தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையின் ஜனாதிபதியை கடந்த வாரம் சந்தித்த பின்னர் அமெரிக்காவுக்கு சென்றிருந்த சுப்பிரமணியம் சுவாமி அந்நாட்டின் தெற்காசிய பிராந்திய உதவி இராஜாங்க செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக்கை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது அமெரிக்காவின் இலங்கைக்கு எதிரான யோசனை தொடர்பில் சுப்பிரமணியம் சுவாமி தமது கருத்துக்களை வெளியிட்டார்.

அமெரிக்காவிஜ் இலங்கைக்கு எதிரான யோசனை விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களுக்கு வெற்றியாக அமைந்துவிடும் என்று சுப்பிரமணியம் சுவாமி சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உரிமை மீறல் தொடர்பில் ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் ஒன்றுக்கு எதிராக சர்வதேச ரீதியில் நியமிக்கப்பட்ட அமைப்புக்களால் நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது என்றும் அவர் வாதிட்டார்.

இதேவேளை, அமெரிக்காவின் யோசனை ராஜபக்ஷவையோ அல்லது வேறு எவரையுமோ போர்க்குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கும் வகையில் அமைந்திருக்கவில்லை என்று சுப்பிரமணியம் சுவாமி பிளேக்குடனான சந்திப்பின்பின்னரே தெரிவித்தார். (அ-2)

# மஹிந்த- ரணில் திடீர் சந்திப்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையில் அலரிமாளிகையில் கடந்த வெள்ளிக்கிழமை திடீர் சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

ஜெனீவாவில் இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அமர்வில் இலங்கை மீது அமெரிக்கா பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்கவிருந்த நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சித் தலைவரும் திடீரென சந்தித்துக் கலந்துரையாடியமை எதிர்க்கட்சிகளின் அரசியல்வாதிகளிடையே பெரும் சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. இச்சந்திப்பு தொடர்பில் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையின் அனைத்து அரச தலைவர்கள் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளும் மத்திய நிலையமாக ஜே.ஆர்.ஜயவர்தன கேந்திர நிலையத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் அரசியல் தொடர்பிலும் அது தொடர்பில் அக்கறை செலுத்தும் தரப்பினர் தொடர்பிலும் தகவல்களை அறிந்து கொள்வதற்கான கேந்திர நிலையமாக ஜே.ஆர். ஜெயவர்தன கேந்திர நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கு அனைவரும் அவதானம் செலுத்தியுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளது.

இச் சந்திப்பில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, நாடாளுமன்ற பொதுச் செயலாளர் தம்மிக்க தஸநாயக்க உள்ளிட்டோர் கலந்து கொண்டுள்ளனர். (அ-2)

# ஹலால் சான்றிதழ் இலங்கையில் இரத்து செய்யப்படும் நிலை

## உலமா சபை தெரிவிப்பு

இலங்கையின் ஹலால் சான்றிதழை தற்காலிகமாக இரத்துச் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளதாக ஜம்மியத்துல் உலமா சபைத் தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் ஜம்மியத்துல் உலமா இன்று விசேட பத்திரிகையாளர் மாநாட்டை நடத்தவுள்ளது. ஹலால் சான்றிதழ் தொடர்பில் தற்போது சர்ச்சை எழுப்பப்பட்டு வருகிறது.

இந்நிலையில் ஹலால் சான்றிதழை இரத்துச் செய்யும் அல்லது தற்காலிகமாக இரத்துச் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளதாக ஜம்மியத்துல் உலமா தரப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

பாதுகாப்பு அமைச்சுடன் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கூட்டத்தின் போது இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் தகவல் வெளியிட்டுள்ள பொதுபல சேனா அமைப்பு கடந்த வெள் ளிக்கிழமை பாதுகாப்பு அமைச்சுடன் இடம் பெற்ற சந்திப்பின்போது ஹலால் சான்றி தழை விலக்கிக் கொள்ளுமாறு ஜம்மியத்துல் உலமாவிடம் பாதுகாப்பு அமைச்சு கேட்டுக் கொண்டது.

எனினும் அதனை ஜம்மியத்துல் உலமா ஏற்றுக்கொண்டதா? என்பது குறித்து தெரியவரவில்லை என்று குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஜம்மியத்துல் உலமாவின் இணைப்பாளர் அஸ்லாம் சுபைர் ஹலால் சான்றிதழை விலக்கிக் கொள்ளும் முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களுடன் பேச்சு நடத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

# இலங்கையின் நிலைப்பாட்டை அமெ.வுக்கு விளக்கியுள்ளோம்

## இலங்கை பிரதிநிதி ரவிநாத்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மாநாட்டுத் தீர்மானம் தொடர்பான இலங்கையின் நிலைப்பாடு அமெரிக்காவிற்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஜெனீவாவிற்கான இலங்கைப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்கவினால் அமெரிக்கப் பிரதிநிதி எலீன் டொனஹோவிற்கு விளக்கப்பட்டுள்ளது.

தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை முற்று முழுதாக இலங்கை அரசாங்கம் நிராகரிக்கின்றது என ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

தீர்மானம் தொடர்பில் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தும் திட்டமில்லை. அமெரிக்கா மற்றும் அதன் நாடுகள் தற் போது நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் நல்லிணக்க முயற்சிகளுக்கு தடை ஏற்படுத்த மாட்டார்கள் என கருதுகின்றோம். நல்லிணக்க முயற்சிகளுக்கு [illegible] டுமே தவிர இலங்கையை [illegible] முயற்சிக்கக் கூடாது என்றார். (அ-2)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 1, 1 இல் செவ்<br>உயரம்: 5'10"<br>தன்கமை/தொழில்: Engineering (MCSE. CCIE) (UK Student Visa)<br>தொ.இ: B -1382 | பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவாதிரை 3<br>உயரம்: 5'3"<br>கி.பா: 27.25, 12 இல் செவ்<br>தகைமை/ தொழில்: பொறியியலாளர்<br>தொ.இ: G -1379 |
| பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவாதிரை 2<br>உயரம்: 5 1/4'<br>கி.பா: 20.25, 4 இல் செவ்.<br>தகைமை/தொழில்: O/L, மணிக்கூடு திருத்துநர், (சொந்தம் வியாபாரம்)<br>தொ.இ: B -1383 | பிறப்பு: 1984 இந்து சிவகோத்திரம்<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>உயரம்: 5'3"<br>கி.பா: 63.25<br>தகைமை/ தொழில்: மருத்துவக் கல்லூரி ஆராய்ச்சித்துறை<br>தொ.இ: G-1381 |
| பிறப்பு: 1986 இந்துவேளாளர்<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>உயரம்: 5'6"<br>தகைமை/ தொழில்: BIT, (வியாபாரம்) (Student Visa)<br>தொ.இ: B -1384 | பிறப்பு: 1991 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கேட்டை, 4 இல் செவ்<br>உயரம்: 5'1"<br>தகைமை/ தொழில்: A/L, BSc<br>தொ.இ: G -1388 |
| பிறப்பு: 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சுவாதி<br>உயரம்: 5'3"<br>கி.பா: 20<br>தகைமை/தொழில்: O/L, சாரதி (விவசாயம்)<br>தொ.இ: B -1386 | பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>உயரம்:- 5'4"<br>கி.பா: 35, 1 இல் செவ்<br>தகைமை/ தொழில்: BSc, (Hons) CIMA (ஆசிரியர் சர்வதேச பாடசாலை)<br>ஏ.பா: வைசபோசனம்<br>தொ.இ: G -1391 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சவால்கள் பல தீர்க்கப்பட்டு இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளோம்

## துணைவேந்தர் வசந்தி பெருமிதம்

(யாழ்ப்பாணம்)

மாணவர்கள் கைது செய்யப்பட்டமை, ஊழியர்கள் போராட்டம் இவைகளிலிருந்து ஒருவழியாக மீண்டு யாழ்.பல்கலைக்கழகம் 10 வருடங்களின் பின்னர் நீண்டகால சேவைக்கான விருது வழங்கும் வைபவத்தை நடத்தியமை மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என பல்கலக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நீண்ட காலமாக சேவையாற்றியவர்களுக்கு விருது வழங்கும் வைபவம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் தலைமையில் கடந்த 8 ஆம் திகதி கைலாசபதி அரங்கில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.பல்கலைக்கழகம் பல பிரச்சினைகளை எதிர்கொண்டபோதும் அக்காலப் பகுதியில் தமது உயிரையும் பொருட்படுத்தாது சேவை செய்தவர்கள் பலர் உள்ளனர். அவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு சுமார் 10 வருடங்களின் பின்பு நடைபெற்றது.

மாணவர்கள் கைது செய்யப்பட்டமை, ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டமை போன்ற பல காரணங்களினால் பட்டமளிப்பு விழா பிற்போடப்பட்டிருந்தது. இந்நிலையில் மாணவர்கள் விடுதலை செய்யப்பட்டு ஊழியர்களின் போராட்டம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டு ஒருவாறாக பல்கலைக்கழகம் இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)




நன்றி: ஜவண்ட்

# முறைசாராக் கல்வி பயிற்சி நெறிகள்

யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள முறைசாராப் பயிற்சிப் பிரிவினரால் புதிய தொழில் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கவுள்ளன. வீட்டு மின்னிணைப்பு மற்றும் பொறியியல் சார்ந்த மரவேலை ஆகிய பயிற்சி நெறிகள் 6 மாத காலத்தை கொண்டு அமையவுள்ளன.

பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் இப்பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்குமாறும் பயிற்சி நெறியைத் தொடர விரும்புவோர் மேலதிக விபரங்களுக்கு வித்தியாலய அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பொன்னாலை பிரதேசத்திற்கான போ.வ. சேவை இடம்பெற வேண்டும்

## மக்கள் கோரிக்கை

(சித்தன்கேணி)

பொன்னாலை பிரதசத்தில் தனியார் மற்றும் அரச பேருந்து சேவைகள் இடம்பெறாமையால் அப்பகுதி மக்கள் போக்குவரத்து செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவ்வாண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கு போக்குவரத்து செய்வதில் பெரும் சிரமம் ஏற்படுவதால் தமது தொழில் முயற்சிகளையும் கல்வி நடவடிக்கைகளையும் தொடர முடியாத அவலநிலை காணப்படுகிறது.

கடற்படையினரால் விடுவிக்கப்பட்ட மேற்குறித்த பிரதேசத்தில் நிர்க்கதியான நிலையில் மீள்குடியேறியுள்ள இம்மக்கள் பயணம் செய்யும்போது வாடகை வாகனங்களுக்கு அதிக பணத்தை கொடுத்தே பயணம் செய்ய வேண்டிய நிலை காணப்படுகிறது.

இக்கிராமத்திலேயே பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம், பொன்னாலை வரதராஜ வித்தியாலயம் என்பன அமைந்துள்ளதால் போக்குவரத்து சேவை முக்கியமாக இடம்பெற வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து உற்சவ காலங்களில் இடம்பெறும் 786, 782 ஆம் இலக்க பேருந்துகளை தொடர்ச்சியாக இப்பாதையூடாக பயணிப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-17)

# பொதுக்கூட்டம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஓய்வூதிய நம்பிக்கை நிதியச் சங்கத்தின் மூன்றாவது வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை பருத்தித்துறை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறவுள்ளது. அதேவேளை இவ் ஓய்வூதிய நம்பிக்க நிதிய சங்கத்தில் புதிதாக இணைய விரும்புவோர் அன்று ஓய்வூதிய அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை என்பவற்றுடன் சமுகமளிக்குமாறும் அதற்குரிய விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து புதிய உறுப்பினராக இணைந்து கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-3-10)

# பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு பிரதேச செயலக பிரிவு பகிரங்க சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல்9.30 மணிக்கு வலி.தென்மேற்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில்சங்கத்தலைவர்எம்.எக்ஸ்.சர்வானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்பொதுக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக வலி.தென்மேற்கு பிரதேச செயலர் சு.முரளிதரன், சிறப்பு விருந்தினராக கணக்காளர் திருமதி த.தவமன்னன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். யாழ். மாவட்ட பிரதிநிதிகளாக பகிரங்க சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதிய யாழ்.மாவட்ட சங்கத் தலைவர் வி.ஸ்ரீ. சக்திவேல், அதன் செயலாளர் பொ.கமலநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2-5)

# தேசிய கல்வி நிறுவகத்தில் கல்விமாணிப் பட்ட கற்கைநெறி

தேசிய கல்வி நிறுவகத்தின் ஆசிரியர் கல்வித் துறையினால் நடத்தப்படும் மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என இணைப்பாளர் சேதுராஜா அறிவித்துள்ளார்.

அரச அல்லது அரச அனுமதி பெற்ற பாடசாலைகளில் ஆசிரியர் சேவையிலுள்ள க.பொ.த (உ/த) பரீட்சையில் 3 பாடங்களில் ஒரே தடைவையில் சித்தியடைந்து ஆசிரியர் கலாசாலைப் பயிற்சி அல்லது தேசிய கல்வி நிறுவக தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி அல்லது கற்பித்தலில் தேசிய கல்வி டிப்ளோமா அல்லது பல்தொழில்நுட்ப நிலைய மனைப்பொருளியல் டிப்ளோமா அல்லது அரச அங்கீகாரம் பெற்ற விவசாய டிப்ளோமா அல்லது உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் பெற்றுக் கொண்ட உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா என்னும் சான்றிதழைப் கொண்டவர்கள் இப்பயிற்சி நெறிக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம்.

நெல்லியடி கற்கை நிலையத்தில் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபருடன் (இணைப்பாளர்) தொடர்பு கொண்டு விபரங்களையும் விண்ணப்ப படிவங்களையும் பெற்றுக் கொள்ளலாம். (அ)




# நாச்சியம்மன் ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கச்சேரி நல்லூர் வீதியிலமைந்துள்ள பாணன்குளம் நாச்சியம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் தொடர்ந்து அம்பாள் தேரில் ஆரோகணித்து வீதியுலா வரும் காட்சி நடைபெறும்.

அன்றைய தினம் மாலை 4.30 மணிக்கு திருவிளக்குப் பூசை நடைபெறும்.

எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு வசந்த மண்டபப்பூசையைத் தொடர்ந்து தீர்த்த உற்சவம் நடைபெறும்.


மறுநாள் வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு பூங்காவனம் நடைபெறும். (அ-2)

# காணி தொடர்பான கலந்துரையாடல்


(யாழ்ப்பாணம்)

பறைச்சேரிவெளி காணி உரிமையாளர்களிற்கான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பறைச்சேரிவெளி காணி உரிமையாளர்கள் அனைவரையும் சமுகம் தருமாறும் வருகை தருபவர்கள் நில அளவை வரைபடம் உள்ளிட்ட காணிகளுக்கான ஆவணங்கள், தேசிய அடையாள அட்டை போன்ற அத்தாட்சி ஆவணங்களை உடன் எடுத்து வருமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)







இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் உப தலைவராக தெரிவு செய்யப்பட்ட பொ. கெங்காதரனுக்கான பாராட்டுவிழா அண்மையில் புங்குடுதீவு தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தில் நடைபெற்றது.

இதில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் பொ.கெங்காதரனுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்வைத்த கோரிக்கையிலிருந்து நாம் பின்வாங்க தயாரில்லை

## டெசோ அமைப்பு திடீர் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**ஈழப்பிரச்சினையில் காங்கிரஸ்கட்சி மற்றும் இந்திய அரசின் போக்கினைத் தொடர்ந்து மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்க இயலாத நிலை நெருங்கிக் கொண்டுள்ளதாகவும் எக்காரணம் கொண்டும் டெசோ தன் நிலைப் பாட்டிலிருந்து பின்வாங்காது என்றும் இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக டெசோ அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

புதுடில்லியில் கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற டெசோ கருத்தரங்கிற்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகச் சில ஊடகங்கள் எழுதி வருகின்றன. நாம் முன்வைத்த எந்தக் கோரிக்கையிலிருந்தும் பின் வாங்காதவரை நமக்கு எந்தப் பின்னடைவும் ஏற்படவில்லை.

நாம் பல்வேறு கட்சிகளை அக் கருத்தரங்கிற்கு அழைத்திருந்தோம். இந்திய தேசிய காங்கிரஸ், தேசிய வாத காங்கிரஸ், தேசிய மாநாடடுக் கட்சி, லோக் ஜனசக்தி ஆகிய கட்சிகள் கருத்தரங்கில் பங்கேற்றன.

இவர்கள் அனைவரும் சென்னையில் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி நடைபெற்ற டெசா மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அவையில் உண்மை இவ்வாறிருக்க டெசோ கருத்தரங்கிற்கு பின்னடைவு என்பது எவ்விதத்தில் பொருந்தும். எனினும் காங்கிரஸ் கட்சியும் இந்திய அரசும் ஒவ்வொரு நாளும் ஈழப்பிரச்சினையில் வெவ்வேறு மாறுபட்ட நிலைப்பாடுகளை எடுத்து வருவது கவலை தருவதாக உள்ளது.

கடந்த 7 ஆம் திகதி மக்களவையில் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஐ.நா. அவையில் வரவிருக்கும் அமெரிக்க தீர்மானம் குறித்து உறுதியாகவும் தெளிவாகவும் யாதொன்றும் கூறவில்லை.

இதனை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகம் அவையிலிருந்து வெளிநடப்பு செய்ததைத் தொடர்ந்து, அ.தி.மு.க, பா.ஜ.க. ஆகிய கட்சிகள் வெளிநடப்பு செய்தன.

ஆனால், அன்று மாலை டெசோ கருத்தரங்கில் கலந்து கொண்ட இந்திய தேசிய காங்கிரசின் பொதுச் செயலாளர் குலாம்நபி ஆசாத், அமெரிக்க தீர்மானத்தை ஆதரிப்போம் என்பதாக உரையாற்றினார்.

ஆனால், கடந்த 8ஆம் திகதி மாநிலங்களவையில் குடியரசுத் தலைவர் உரை மீது நன்றி தெரிவித்து உரையாற்றி, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் எந்த உறுதியும் வழங்காமல், தமிழ் ஈழத்தலைவர்களோடு இலங்கை அரசு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று கூறியிருக்கிறார்.

காங்கிரஸ் கட்சி மற்றும் இந்திய அரசின் இப்போக்கினைத் தொடர்ந்து மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்க இயலாத நிலை நெருங்கிக் கொண்டுள்ளது. எக்காரணம் கொண்டும் டெசோ தன் நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்காது என்பதையும் இத் தருணத்தில் வெளிப்படுத்துகின்றோம்.

எனவே, இந்திய அரசுக்கு மேலும் அழுத்தம் கொடுக்க பொது வேலை நிறுத்தப் போராட்டம் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெற்றே தீரும் என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

அவ்வேலை நிறுத்தத்திற்கு ஒட்டு மொத்தத் தமிழினமும் ஆதரவு தர வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது. (அ2)

## எமது கருத்து சுதந்திரத்தை குழிதோண்டி புதைக்க முயற்சி

### வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

எமது நாட்டில் ஜனநாயகம், கருத்து சுதந்திரம் ஆகியவற்றை குழி தோண்டிப் புதைக்கவும் ஊடகங்களைப் பயமுறுத்தி காடைத்தனம் மூலம் ஊடகவியலாளர்களை நீதி வழியே செயற்படவிடாமல் தடுப்பதற்கு மேற்கொண்ட தாக்குதலே வலம்புரி அலுவலக செய்தியாளருக்கு விழுந்த அடிகளாகும் என வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் கண்டன தீர்மானம் நிறை வேற்றி வெளியிட்டுள்ளது. வலம்புரி செய்தியாளர் தாக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அச்சங்கத் தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இச்செயலை எமது சங்கம் வன்மையாகக் கண்டிப்பதுடன் இக்கோழைத் தாக்குதலை தாக்குதல்களைப் புரிந்தவர்களை உடனடியாகக் கைதுசெய்துசட்டத்தின்முன் நிறுத்தும் படியும் ஊடகவியலாளர்களின் மனப்பீதியை அகற்றுமாறும் எமது சங்கம் பொலிசாரையும் அரசாங்கத்தையும் வேண்டுகிறது என்றுள்ளது.


## நீர்வளங்கள் பற்றிய வரைபடம் ஜனாதிபதியிடம் கையளிப்பு

இலங்கையில் பாதுகாக்கப்பட வேண்டிய அனைத்து நீர் வளப் பிரதேசங்கள், கங்கைகள், ஆறு குளங்கள், அணைக்கட்டுகள், நீரோடைகள் போன்றவற்றை உள்ளடக்கிய வரைபடங்களைக் கொண்ட அல்பம் ஒன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் கையளிக்கப்பட்டது.

இதனைக் கையளிக்கும் வைபவம் நேற்றுமுன்தினம் பிற்பகல் அலரி மாளிகையில் இடம்பெற்றது.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, கமநல சேவை ஆணையாளர் நாயகம் சுனில் வீரசிங்க, கமநல சேவை முன்னாள் ஆணையாளர் நாயகம் ட.ட வன்னிய நாயக்க, நீர்முகாமைத்துவ பொறியியலாளர் பிரபாத் விதாரண ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

கமநல அபிவிருத்தித் திணைக்களம் சிங்கள, தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழியிலும் தயாரித்துள்ள கையேடு ஒன்றும் அன்றைய தினம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. (அ-2)



British Council இனால் International School Award Presentation Ceremony எனும் நிகழ்வு கொழும்பு கில்ரன் ஹோட்டலில் கடந்த 2 ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் யா/சன்மார்க்க வித்தியாலயத்திற்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

## தபால் திணைக்களத்திற்குள் மீண்டும் பிரச்சினை முளைவிடுகிறது

### தொழிற் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தபால் திணைக்களத்திற்கு மீண்டும் பிரச்சினை ஏற்பட்டுள்ளதென தபாற் தொழிற்சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

அதிவேகப் பொருள் மற்றும் கடிதம் விநியோகித்தல் தற்போது பிரச்சினை ஏற்பட்டுள்ளதென இலங்கை தபால் சேவை சங்கத்தின் தலைவர் ஜயந்த விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

விமான தபால் தனியார் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டமை இதற்கு காரணம் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இதனால் பொருட்கள் மற்றும் தபால்கள் விநியோகிக்கப்படாது குவிந்து காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து தபால்மா அதிபர் ரோஹண அபேரத்ன தெரிவிக்கையில்,

எதிர்வரும் இரண்டு தினங்களில் இப்பிரச்சினைக்கு குறித்த நிறுவனம் தீர்வு காணாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கூறியுள்ளார். (அ-2)

## பொதுபலசேனாவுக்கு எதிராக நடவடிக்கை!

### அஸ்கிரிய பீடம் எச்சரிக்கை

பொதுபல சேனாவுக்கு எதிராக முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுமானால் அந்த அமைப்புக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கண்டி அஸ்கிரிய மகாநாயக்கர் எச்சரித்துள்ளார்.

பொதுபல சேனாவின் சில நடவடிக்கைகளை அஸ்கிரிய பீடத்தினால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று அஸ்கிரிய பீடத்தின் பதிவாளர் வணக்கத்துக்குரிய ஆனமடுவ தர்மதாஸ தெரிவித்துள்ளார்.

பொதுபலசேனா அமைப்பினர் சில இடங்களில் சட்டத்தை கையில் எடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

இதனை தவிர்த்து அவர்கள் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று பதிவாளர் கோரியுள்ளார்.

இந்நிலையில் பொதுபல சேனாவின் நடவடிக்கைகள் தொடர்பில் முறைப்பாடுகள் இருந்தால் சங்க சபைக்கு முறைப்பாடு செய்ய முடியும் என்றும் அஸ்கிரிய பீடத்தின் பதிவாளர் கேட்டுள்ளார். (அ-2)

## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

### நம் வாழ்விலும் இறை நம்பிக்கை முக்கியம் பெற இறைவனை வேண்டுவோம்



ஒரு அரச அலுவலர் இயேசுவிடம் சென்று ஐயா என் மகன் இறக்குமுன் வாரும் என்றார். இயேசு அவரிடம் நீர் புறப்பட்டுப்போம். உம் மகன் பிழைத்துக் கொள்வான் என்றார். அவரும் இயேசு தம்மிடம் சொன்ன வார்த்தையை நம்பிப் புறப்பட்டு போனார். அவர் போய்க் கொண்டிருக்கும் போதே அவருடைய பணியாளர்கள் அவருக்கு எதிர்கொண்டு வந்து பிழைத்துக்கொண்டான் என்று கூறினார்கள் என கூறும் வேதாகமப் பகுதி இன்று எமக்குத் தரப்படுகின்றது.

வெளிநாட்டு கலாசார தாக்கம் இன்று நம் நகரங்களில் பரவி கிராமங்களுக்கு ஊடுருவிக் கொண்டிருக்கிறது. இதனால் பெற்றோர் பலர் நொந்து நொடிந்து போய்க் கொண்டிருக்கிறார்கள்.

கலாசார சீர்கேடு என் மகனை, மகளை நான் இழக்க செய்துவிடுமோ என ஆலயம் தோறும் எத்தனையோ பெற்றோரின் வேண்டுதல்கள் தினம் கேட்டுக்கொண்டே இருக்கின்றன. இளமையின் வேகத்தில் பெற்ற தாய், தகப்பனை மறந்து பால் ஊட்டி தாலாட்டி தூக்கித் திரிந்த பெற்றோரை மறந்து ஒட்டி ஊட்டி உறவாடிய பந்த பாசத்தை மறுத்து வாழ்வின் விளிம்பில் நின்று சாவின் பள்ளத்தாக்கில் இறங்க காத்துக்கொண்டிருக்கும் மகளுக்காக, மக னுக்காக பெற்றோரின் அழுகுரல்கள் இன்று ஆலயங்களை நிரப்புகின்றன. எத்தனையோ விதவிதமான வித்தியாசமான காரணங்களால் இன்று நம் பிள்ளைகள் உடலாலும் உள்ளத்தாலும் பொருளாதார மற்றும் ஆன்மீகத்தில் குடும்ப வாழ்வில் இறந்து கொண்டிருக்கிறார்கள்.


எனவே இறைவனில் நாம் வைத்திருக்கும் நம்பிக்கை வீண்போகாது. அதை நிலைபெற வைப்போம். நம் வாழ்விலும் நம்பிக்கை முக்கிய இடம் பெறவேண்டுவோம்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க
சுதந்திர பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# போட்டியும் பொறாமையும்



நாராயணபுரத்தில் வசித்து வந்த பூபாலன் செல்வந்தன் மட்டுமல்ல தர்மசிந்தனையாளரும்கூட. யாருக்கு எந்த உதவி தேவைப்பட்டாலும் அதை உடனே செய்துவந்து அந்த ஊர் மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார்.

ஒருநாள் காலை அவரிடம் ஓர் ஏழைச் சிறுவன் வந்தான். அவன் ஐயா! வணக்கம். என் பெயர் கிருஷ்ணன். உங்களிடம் ஏதாவது வேலைதேடி வந்துள்ளேன் என்றான்.

கிருஷ்ணா உனக்கு கல்வி கற்க விருப்பம் இருந்தால் சொல். அதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்றான்.

கிருஷ்ணன் அதற்கு மகிழ்ச்சியுடன் இணங்க பூபாலன் தன் மகன் ராமனைக் கூப்பிட்டு ராமா இவன் பெயர் கிருஷ்ணன். இவன் இனி நம்முடன் இருப்பான். இனி பாடசாலையில் சேர்ந்து உன் வகுப்பிலேயே இவனும் படிப்பான்

## அம்புலிமாமா கதைகள்


என்று சொல்லி அனுப்பினார்.

பூபாலன் வீட்டுவேலைகளைச் செய்துகொண்டே ராமருடன் கிருஷ்ணன் அதே பாடசாலையில் அதே வகுப்பில் படிக்க ஆரம்பித்தான். மிகவும் புத்திசாலியான கிருஷ்ணன் மிக நன்றாக படித்து ராமனை விட அதிக மதிப்பெண்கள் வாங்கி வகுப்பில் முதலாவதாக வரத் தொடங்கினான். இதைக் கண்ட ராமன் கிருஷ்ணன் மீது பொறாமை கொண்டான். தன் தாயிடம் இதைப்பற்றிப் புகார் செய்ய அவள் நேரே கிருஷ்ணரிடம் சென்று இனி வகுப்புத் தேர்வுகளில் ஏதாவது ஒரு கேள்வியை விட்டு விடு. ஏனெனில் ராமன்தான் வகுப்பில் முதலாவதாக இருக்க வேண்டும் என்றாள். மௌனமாக அதைக்கேட்டுக்கொண்ட கிருஷ்ணனும் அவ்வாறே செய்ய ஆரம்பித்தான். விரைவிலேயே ராமன் மீண்டும் வகுப்பில் முதலாவதாக வர ஆரம்பித்தான்.

ஆனால் இது வகுப்பு ஆசிரியரின் கண்களில் பட்டுவிட்டது. இதில் ஏதோ விடயம் இருக்கிறது என்று ஊகித்த அவர் கிருஷ்ணனை தனியே அழைத்து விசாரித்ததில் அவருக்கு உண்மை தெரிய வந்தது. உடனே கிருஷ்ணனுக்கென்று ஒரு விசேட தேர்வு நடத்தி அதில் மிக நன்றாகச் செய்த கிருஷ்ணனை உயர் வகுப்பிற்கு அனுப்பிவிட்டார். ராமனும் நமக்குப் போட்டியாக இருந்தவன் நம் வகுப்பை விட்டுப் போய் விட்டான் என்று நிம்மதியடைந்தான்.

வகுப்பாசிரியர் மூலமாக பூபாலன் நடந்த விடயங்களைக் கேள்விப்பட்டான். அவர் நீங்கள் செய்தது சரியே. அதனால் கிருஷ்ணனுக்கு நன்மையாயிற்று. ஆனால் என் மகன் ராமனுக்கு இதனால் நட்டமே தவிர நன்மையில்லை. கிருஷ்ணன் தனக்கு போட்டியென்று கருதி ராமன் மனதில் பொறாமை ஏற்பட்டுவிட்டது. இது தவறு என்று ராமன் உணரவில்லை. போட்டியென்பது இருந்தால்தான் ஒருவன் தன் திறமையையும் உழைப்பையும் மேலும் சிறப்பாகப் பயன்படுத்தி முன்னேறமுடியும். போட்டியென்பது நமது நன்மைக்கே என்று ராமனை உணரச் செய்யுங்கள் என்று கேட்டுக்கொண்டார்.

மறுநாள் ஆசிரியர் வகுப்பில் ராமன் கேட்டு உணரும் படி ஒரு கதை சொன்னார். ஒரு மன்னனுக்கு ஒரேயொரு மகன் இருந்தான். அந்த மகனை மிகச் செல்லமாக வளர்த்தார். இளவரசன் குதிரைச் சவாரியில் வல்லவன். இந்தத் திறமையை மக்கள் எல்லோரும் புகழ இளவரசனுக்கு தன்னை மிஞ்சியவர் இல்லை என்ற கர்வம் ஏற்பட்டுவிட்டது. ஒருநாள் அந்த நாட்டுக்கு மலைசாதியை சேர்ந்த ஒரு வீரன் வந்தான். அவன் இளவரசனைக் காட்டிலும் நன்றாக குதிரை சவாரி செய்யவே மக்கள் இப்போது அவனைப்புகழத் தொடங்கினர். இது கண்டு இளவரசனுக்கு அவன் மேல் பொறாமை ஏற்பட்டது. பலமுறை அந்தமலைசாதி இளைஞன் இளவரசனிடம் நட்புக்கரம் நீட்ட முயன்று இளவரசன் அதை ஏற்கவில்லை.




ஒருநாள் காட்டில் தன் நண்பர்களுடன் குதிரையில் சென்றுகொண்டிருந்த இளவரசன் அந்தப் பக்கமாக அந்த மலைசாதி இளைஞன் தற்செயலாக வர அவனைக் கண்டதுமே இளவரசன் வெறுப்பில் தன் முகத்தைத் திருப்பிக்கொண்டான். அந்தச் சமயம் பார்த்து புதர்களின் ஊடே ஒரு புலி பயங்கரமாக உறுமிக்கொண்டு வெளியே வந்தது. அதைக்கண்டு மிரண்ட இளவரசனின் குதிரை தறி கெட்டு ஓட புலி அவர்களைத் துரத்த இவ்வாறு இளவரசனின் உயிருக்கே ஆபத்து வருவதாக இருந்தது. இதைக் கண்ட இளைஞன் கடிதாய் விரைந்து அந்தப்புலியின் பின் சென்று அதனைக்கொன்று இளவரசனின் குதிரையையும் கட்டுப்படுத்தி இளவரசனைக் காப்பாற்றினான்.

தன் உயிரைக்காப்பாற்றிய இளைஞனைக்கண்டு இளவரசன் குதிரை சவாரி மட்டுமல்ல ஏனைய பல பயன்படும் விடயங்களையும் அறிந்த நீ என் உயிரைக்காப்பாற்றினாய். மிக்க நன்றி என்றுகூறி அன்றிலிருந்து பொறாமையை விட்டொழித்தான்.

இவ்வாறு கதை சொல்லி முடித்த ஆசிரியர் மாணவர்களை நோக்கி மலைசாதி இளைஞனிடம் பொறாமை கொள்ளாமல் அவனுடன் நட்புறவோடு இருந்திருந்தால் இளவரசன் அவனிடமிருந்து பல அரிய கலைகளுடன்கூட மிரண்ட குதிரையை அடக்குவது பற்றியும் அறிந்திருப்பான். ஆனால் பொறாமை வயப்பட்ட இளவரசன் தனது போட்டியாளனிடம் இருந்து இன்னும் சிறப்பாக கற்றுக்கொள்ளாமல் அவனைப் புறக்கணித்தான். நமக்குத் தெரியாத சில விடயங்களை ஏனையவர்களிடம் இருந்து கேட்டுக் கற்றுக்கொள்வது தவறில்லை. நன்மையையே உண்டாக்கும் என்று கூறி முடித்தார்.

ஆசிரியர் எதைச் சுட்டிக் காட்டுகிறார் என்பது ராமனுக்குப் புரிந்து விட்டது. மறுநாள் ராமன் தானாகவே ஆசிரியரிடம் சென்று ஐயா எனக்கும் ஒரு விசேட தேர்வு நடத்துங்கள் என்னையும் கிருஷ்ணனுடன் அதே வகுப்பிற்கு மாற்றி விடுங்கள் என்று கேட்டுக் கொண்டான். ராமனது இந்த மனமாற்றத்தைக் கண்டு ஆசிரியர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடி மேல அடி விழுந்திருந்தாத் தாங்கியிருப்பான் முத்துமணி. இடிமேல இடி விழுந்திருச்சு. எந்திரிக்க முடியல.

காடு-மேடு- மரம் மலைன்னு விரிஞ்சு கிடந்த அவன் உலகம் மோட்டு வளைங்கற அளவுல சுருங்கியே போச்சு.

சின்னச் சின்னச் சூது, சின்னச் சின்ன வஞ்சகத்துல சேத்து வச்ச பொழப்பை ஒரே அடியில அடிச்சு உடைச்சு உதறி எறிஞ்சிட்டுப் போயிருச்சு சட்டம்.

ரெண்டு வகையா இருக்கு பொழப்பு.

ஒண்ணு- சத்தியத்துல வாழுற பொழப்பு;

இன்னொண்ணு- சாமர்த்தியத்துல வாழுற பொழப்பு.

ஒரு பொழப்புக்கு வரும்; இன்

கிட்ட ஓடுதுக பிள்ளைக.

அப்பன் கால்ல விழுந்து கும்புட்டுக் காப்பி போடப் போறா லச்சுமி.

“எதுக்கும் கவலப்படாதீங்க மாப்ள. குலதெய்வம் கூட வரும்”

“தாங்கிப் புடிக்க நீங்க இருக்கும் போது எனக்கென்ன பயம் மாமா. பொழச்சுக் காமிக்கிறேன்”

“அப்படிச் சொல்லுங்க. அதான் ஆம்பளைக்கு அழகு. உங்க கவலையெல்லாம் தீர நான் ஒண்ணு வச்சிருக்கேன். இருங்க வாரேன்”

விசுக்குன்னு உள்ள போனாரு சாமியாராகிய மாமனாரு. தெம்பா நிமிந்து உக்காந்தான் முத்துமணி.

உள்ள போன ஆளு வீபூதித் தட்டோட வெளிய வந்தாரு. ஆள்காட்டி வெரல்லயும் கட்டை வெரல்லயும்

டாது. கையில கட்டுங்க காப்புக் கயிற”

உத்துப் பாத்தான் முத்துமணி.

இன்னும் கொஞ்சம் பெரிய கயிறா இருந்தா வசதியா இருந்திருக்கும். லச்சுமி காப்பி கொண்டு வர்றப்ப முத்துமணி அங்க இல்ல.

☆☆☆☆☆☆

“நான் முத்துமணி வந்திருக்கேன்னு முதலாளிக்கிட்டச் சொல்லுங்க”

புன்சிரிப்புக்கும் உடல்மொழிக்கும் சம்பந்தமே இல்லாம ஒரு பார்வை பாத்து “உக்காருங்க; சொல்றே”ன்னாரு பீ.ஏ.

ஒரு வீட்டுக்குள்ள ஒரு வேத்தாளு நொழஞ்சதும் வேலக்காரன் சிரிக்கிற சிரிப்புல தெரிஞ்சு போகும் வீட்டாளுக அந்தாளு மேல வச்சிருக்கிற மதிப்பு; ஆட்டுற நாய் வால்ல தெரிஞ்சு போகும் காட்டுற பிரியம்.

# மூன்றாம் உலகப்போர்

69

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

னொண்ணுக்கு வராதுங்கறது இல்ல; ரெண்டுக்குமே சோதனை வரும். ஆனா அதுல ஒரு வித்தியாசம் இருக்கு. சத்தியமான பொழப்பு எந்தச் சோதனை வந்தாலும் தாங்கும். சாமர்த்தியமான பொழப்பு சின்னச் சோதனை வந்தாலும் தாங்காது. குறுக்கு வழியில போறவனுக்குத் திரும்புற வழி தெரியாமப் போயிரும் பாருங்க... அப்படி.

சோகமா இருக்கிற மாதிரி காட்டிக்கிட்டுச் சந்தோசப்பட்டுச்சு சொந்த பந்தம். செல்போன்ல இருந்த நம்பரை அழிச்சுட்டாக நண்பருக. ‘உம்புத்தி போயி எம்புத்தி வா”-ன்னு மகனுக்கு மனசுக்குள்ள சேணை தொட்டுவச்சாக அப்பன் ஆத்தா ரெண்டுபேரும். வெறிச்சோடிப் போச்சு குடும்பம். வீட்டுக்குள்ள உக்காந்துக்கிட்டு இனி எந்திரிச்சுப் போக மாட்டேங்குது ஒரு இருட்டு.

கொஞ்சம் கொஞ்சமா நிமிந்து உக்கார்ந்தான் முத்துமணி.

அடிச்சு வேலியில தூக்கி எறிஞ்ச பாம்பு காத்தக் குடிச்சுக் குடிச்சுக் கொஞ்சம் கொஞ்சமா உசுர் பொழைக்கிற மாதிரி, வெறியோட எந்திரிச்சு ஒரு முடிவெடுத்துட்டான்.

வீட்டைப் பூட்டிட்டுப் பொண்டாட்டி புள்ளைகளக் கூட்டிக்கிட்டு மாமனார் வீட்டுக்குப் போறான் ஆனைமலையான்பட்டிக்கு.

☆☆☆☆☆☆

“வாங்க மாப்ள... வாங்க”

மாமனாரைப் பாத்ததும் விசுக்குன்னு போச்சு முத்துமணிக்கு. நெத்தியில சந்து இல்லாமப் பட்டையடிச்சு, புடைச்சு நிக்கிற சந்தனம் வச்சு, அதுல ஒழுகுற குங்குமம் வேற இழுகி- சட்டைக்கு வெளியில தெரியிற மாதிரி கழுத்துல பண்டினும்போட்டு- மூஞ்சி

இடுக்கி, புடிங்க வீபூதியன்னு கைய உயரமாத் தூக்குனாரு. இதுவரைக்கும் இல்லாம இது என்ன புது சாங்கியமின்னு புத்தி மாறி நின்னான் முத்துமணி.

“மாப்ள... உயிரா வளத்த என் மக தாலியறுத்து வந்து நின்னதும் வெள்ளிமலையான் கோயில்ல போயி விழுந்தேன். அவ கழுத்துல இன்னொரு தாலி ஏறிட்டா உன் கோயிருக்கு என் சொத்தையே எழுதி வைக்கிறேன்

புரிஞ்சு போச்சு முத்துமணிக்கு இப்ப மில்லுக்குள்ள தனக்குள்ள வகிசி(பெருமை).

நாற்காலி மேல அடுக்கி வச்ச நாற்காலி மாதிரியே எம்புட்டு நேரம் தான் உக்காந்திருக்கிறது? விடிய விடிய ஒண்ணா ஒக்காந்து தண்ணியடிச்ச ஆளு இன்னைக்கு வெளிய உக்காருன்னு சொல்லிட்டானே... பாப்போம்.

அவன்கூட ரொம்ப நேரமா வாய் தொறக்காம அவமானமும் கூடவே




வெள்ளிமலையானேன்னு வேண்டிக்கிட்டேன். சொன்னபடி எழுதிக் குடுத்துட்டேன் போன புதன்கிழமை. அன்னைக்கு ஆண்டவன் காலடியில இருந்து வந்த பிரசாதம் இது; எடுத்துக்குங்க. நெத்தியில பூசி நாக்குல இழுகுங்க. எங்கப்பன் வெள்ளிமலையான் கடைசி வரைக்கும் கூட வருவான்”

உக்காந்திருக்கு. எந்திருச்சுப் போயிறலாமான்ன உடம்பு ஒரு உந்து உந்துறப்ப உள்ள வரச் சொல்லிட்டாரு முதலாளி.

“வணக்கம்”

வான்னும் சொல்லல; வணக்கமும் சொல்லல. அவரு ஒயின்கிளாஸ்ல அவரா ஊத்தித் தண்ணியடிச்சுக்கிட்



“என்ன மிஸ்டர் முத்துமணி... இன்னும் எவ்வளவுநாள் அவகாசம் கேப்பீங்க?”

“இன்னும் ஒரு மாசத்துக்குள்ள...”

“நீங்க உள்ளூரு; எனர்ஜீ உள்ள இளைஞன்னுதான் உங்ககிட்ட ஒப்படைச்சோம். உங்களால முடியல. வைகையாத்து மணல் இருக்கு; முருகமலை குவாரி இருக்கு; நிலத்தடி நீர் நிறைய இருக்கு. ஜிப்சம் சர்வே நடந்துக்கிட்டிருக்கு. சிமெண்ட் பேக்டரிக்கு இதைவிடப் பொருத்தமான சூழல் இருக்க முடியாது. திட்டம் தயாரா இருக்கு; வங்கிக்கடன் ஒதுக்கியாச்சு... ஆனா நெலம் மட்டும்தான் இன்னும் அமையல. விலை நிலங்கள விக்கிற வங்களுக்கு வீட்டுக்கு ஒருத்தருக்கு வேல தர்றோம். மூணுவாரம் அவகாசம் தர்ரேன். உங்களால முடியுமா? முடியாதா?”

அவரு கலகலப்பாப் பேசிப் பாத்திருக்கானே தவிர இப்படிக் கலவரமாப் பேசிப் பாத்ததேயில்ல.

முத்துமணிக்கு விஸ்கி ஊத்தப் போன வேலைக்காரன உத்துப் பாத்து முதலாளி விகாரமாச் சிரிக்கவும் அவன் ஊத்தாம வெலகி ஓடியே போனான்.

“தயவு செய்து நாலு வாரம் கொடுங்க சார். முடிக்காம வர மாட்டான் முத்துமணி”

சிப்ஸ் வைக்க வந்த வேலைக்காரன இன்னொரு பார்வை பாத்தாரு முதலாளி. அவன் முத்துமணிக்கு வச்ச ஒயின் கிளாஸைச் சத்தமில்லாம எடுத்துட்டுப் பொத்துனாப்புல போயிட்டான்.

“நாலு வாரத்துல முடிக்கலேன்னா நீங்க வாங்குன முன்பணத்தத் திருப்பித்தர வேண்டிருக்கும். பொறுப்பும் பொக்கப்பாண்டிக்குக் கைமாறிடும். நீங்க போகலாம்”

ஊத்தித் தரலேன்னாக் கூடப் பரவாயில்ல; உக்காரக் கூடச் சொல்லலையே பணக்கார நாயி. நிலத்த முடிச்சுட்டு அவன் கூட உக்காந்து அவன் தண்ணியும் சேத்து அடிக்கல... நான் கரூத்தமாயிக்குப் பொறக்கல.

நாய் நாக்கு மாதிரி தலையத் தொங்கப் போட்டு வெளியேறிட்டான் முத்துமணி.

☆☆☆☆☆☆

பையில பலகாரமும் கையில கறியும் புடிச்சுப் பொன்னுமுத்துப்பிள்ள வீட்ல போய் உக்காந்தான் முத்துமணி.

அய்யா நீங்க வெவரமான ஆளு. மூத்த மக மூக்கச்சிந்தி வாழாவெட்டியா வந்து வருசம் அஞ்சாச்சு. அவளுக்குக் கீழ் கட்டிக் கொடுக்காத பொண்ணுக ரெண்டு வச்சிருக்கீக. அதுககூடப் படிச்ச பொண்ணுகளுக்குப் பொண்ணு பொறந்து ஏழாம் கிளாஸ் படிக்குதுக. எப்பக் கட்டிக்குடுக்கப் போறீக? நீங்க தசகூலி பாத்து விவசாயம் பண்ணிக் கஞ்சி குடிச்சுக் கடனக் கட்டி மிச்சம் புடிச்சுக் கலியாணம் பண்றதுக்குள்ள சுரைக்கா வத்திக் குடுவையாப் போற மாதிரி கிளிக முத்திக் கொழவிகளா ஆயிருவாகளா இல்லையா? பெருசா விலை கிடைக்குது; வித்துருங்க.

அவன் கத்த வித்தையெல்லாம் கரணம் போட்டுக் காமிச்ச பெறகும் தலையத் தலைய ஆட்டுனாரே தவிர ஒரு வார்த்தையும் பேசல பொன்னு முத்துப்பிள்ள.

(தொடரும்)

## “ஆட்டுற நாய் வால்ல தெரிஞ்சு போகும் காட்டுற பிரியம்”

தெரியாமத் தாடி மீசை வச்சு- காவி நிறத்துல முழங்காலுக்கு மேல முக்கா வேட்டி கட்டிச் சாமியாரா நிக்கிறாரு ஒரு காலத்துல வெள்ளையும் சொள்ளையுமா இருந்த மாமனாரு. பூசையறையில மணியாட்டிக்கிட்டு உக்காந்திருக்கா மாமியாரு.

“என்னடா இது... வீடே நெறம் மாறி நிக்குதே”ன்னு மேலயும் கீழயும் பாக்கிறான் முத்துமணி. பயந்து பாட்டி

உச்சியில பாராங்கல்லு விழுந்த மாதிரி நிலை குலஞ்சு போனான் முத்துமணி.

தலை சுத்துது; இருளுது கண்ணு.

வேலி காத்த அய்யனாரு மட்டுமில்ல; எம்மாமனாரும் சேந்துல்ல அடிச்சுட்டான் சாம்பல என் பொழப்புல.

தட்டுல கெடந்துச்சு சுத்திவச்ச ஒரு கறுப்புக் கயிறு.

“எடுங்க மாப்ள. காத்து கருப்பு அண்

டிருக்காரு முதலாளி.

வழ்க்கமா உக்காருன்னு சொல்லுவாரு; அதையும் சொல்லல இன்னைக்கு.

தட்டிலயிருந்த முந்திரிப் பருப்பையும் தன்பக்கம் இழுத்திட்டாரு லேசா.

வேலைக்காரன் கொண்டாந்து முத்துமணி பக்கத்துல ஒரு ஒயின் கிளாஸ வச்சிட்டுப் போனான் பழக்க தோஷத்துல. முதலாளியப் பாக்காம போன வேலைக்காரன முதலாளி ஒரு ஓரமாப் பாத்தாரு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் உலகெங்கும் வியாபித்துள்ளனர்

## கலைப்பீடாதிபதி வி.பி.சிவநாதன் பெருமிதம்

உலகெங்கிலும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கின்றனர். எமது பல்கலைக்கழகத்திற்கு அவ்வாறான தனித்துவமான பண்புள்ளது என யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நீண்டகாலமாக சேவையாற்றுவர்களுக்கு விருது வழங்கும் வைபவம் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசட்ணம் தலைமையில் கைலாசபதி கலையரங்கில் கடந்த 8 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள் , துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். இந்த நிகழ்வில் கலைப்பீடாதிபதி மேலும் தனது உரையில் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் பல்கலைக்கழத்திற்கு நீண்டதொரு பாரம்பரியம் உண்டு. தனித்துவமான இயல்பினையும் பண்புகளையும் யாழ்.பல்கலைக்கழகம் தன்னகத்தே கொண்டுள்ளது.

அவ்வாறானதொரு பல்கலைக்கழகத்தில் பணிபுரிவதையிட்டு நாம் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம்.

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் 7 ஆவது இடத்தில் யாழ்.பல்கலைக் கழகம் உள்ளது.

அந்த நிலைக்கு வருவதற்கு பலர் அயராது உழைத்துள்ளனர். அவ்வாறு இந்தப் பல்கலைக்கழத்தின் வளர்ச்சிக்காக உழைத்தவர்களுக்கு பாராட்டுவிழா எடுத்து அவர்களைக் கௌரவிப்பது மகிழ்ச்சியான விடயம்.

ஒவ்வொரு ஆண்டும் புதியவர்களை இணைத்துக் கொண்டு பல்கலைக்கழகம் பயணித்துக் கொண்டு இருக்கிறது. ஒவ்வொரு வரையும் வளர்த்துதெடுத்துக் கொண்டிருக்கிறது.

அதேவேளை ஒவ்வொருவரும் யாழ். பல்கலைக்கழகத்தை வளர்த்தெடுத்துக் கொண்டு இருக்கின்றனர்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் உலக அரங்கில் தனித்துவமானவர்களாக வுள்ளனர். கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கிறது எனலாம். அவ்வாறு சிறப்பு வாய்ந்தவர்களாக எமது பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளனர். இது எமது பல்கலைக்கழகத்திற்கும் அதைச் சார்ந்துள்ள எமக்கும் பெருமை சேர்க்கக்கூடிய தாகும்.

மேலும் நாம் எல்லோரும் ஒன்றிணைந்து எமக்கிடையேயுள்ள தனிப்பட்ட பகைமையுணர்வை மறந்து ஒரு சமூகத்தவர்களாக பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்காக பாடுபட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஏனைய பீடாதிபதிகளும் யாழ்.பல்கலைக்கழகத்தில் ஒற்றுமைத் தன்மை சீர்குலைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பீடத்தினைச் சார்ந்தவர்களும் ஒற்றுமையினைக் கட்டியெழுப்ப வேண்டும். ஒவ்வொரு துறைத் தலைவர்களும் தமது துறை சார்ந்தவர்களுடன் கலந்துரையாடி பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்காக பாடுபட வேண்டும்.

பல்வேறுபட்ட பிரச்சினைகளை யாழ். பல்கலைக்கழகம் கடந்த காலங்களிலும் தற்போது எதிர்கொண்டுள்ளது. நமக்குள்ளே ஒற்றுமை இருந்தால்தான் எத்தகைய பிரச்சினைகளையும் எதிர்கொள்ள முடியும் எனவும் கேட்டுக்கொண்டதோடு கவலையுடன் தமது கருத்துக்களை முன்வைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# திராவிடன் சேனை என்ற பெயரில் துண்டுப் பிரசுரம்

கிழக்கு மாகாணத்தை இஸ்லாமிய நாடுகளின் உதவியுடன் கிழக்கிஸ்தான் என முஸ்லிம் மாகாணமாக மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரும் நிலையில் அதற்குத் துணைபோகும் வகையில் தமிழர்கள் கட்டடங்களை முஸ்லிம் வர்த்தகர்களுக்கு வழங்க வேண்டாம் என மட்டக்களப்பில் பல்வேறு பகுதிகளிலும் அநாமதேய துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

திராவிடன் சேனை என்ற அமைப்பின் பேரிலேயே இந்த துண்டுப்பிரசுரங்கள் போடப்பட்டு வருகின்றன. அதில் தமிழர் தாயகப் பகுதிகளில் வியாபாரம் செய்யும் முஸ்லிம் வியாபாரிகளை உடன் வெளியேற்றுமாறு எமது அமைப்பு எச்சரிக்கின்றது.

அத்துடன் இந்த துரோகத்தனத்துக்கு துணைபோகும் தமிழ் கட்ட உரிமையாளர்களே உங்கள் சொத்தை அழிவில் இருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள் என அந்த துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிப்பட்டுள்ளது. (அ-2)

# கடலில் மூழ்கி சுவிஸ் பிரஜை பலி

பொத்துவில் உல்லாச கடற்பரப்பில் நீராடிக் கொண்டிருந்த சுவிட்சர்லாந்து நாட்டு பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றதாக பொத்துவில் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பொத்துவில் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. பொத்துவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# கற்களை அகழ்ந்து எடுக்க அனுமதி பெற்று தாருங்கள்

## மக்கள் கோரிக்கை

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்ட பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராஞ்சி கிராமத்தில் தமது வீட்டுத் திட்டத்திற்கான கற்களை அகழ்ந்து எடுப்பதற்கு தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதால் சிரமம் அடைவதாக இக்கிராம பயனாளிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக தெரிய வருவதாவது,

கிராஞ்சி பகுதியில் உள்ள காணிகள் மற்றும் பொது இடங்களில் உள்ள கற்களை உடைத்து தமது வீடு கட்டும் தேவைக்கு பயன்படுத்த மக்கள் கோரி இருந்தனர்.

இக்கற்களை உடைத்து பயன்படுத்துவதற்கு ஆளுநர் சம்மதம் தெரிவித்ததாகவும் தெரியவருகிறது.

இருப்பினும் இக்கிராம மக்கள் கற்களை உடைத்து எடுக்கும் போது கனியவள அனுமதி பெறப்படவில்லை எனவும் கற்களை உடைத்து எடுக்கக்கூடாது எனவும் இம்மக்கள் அச்சுறுத்தப்பட்டு வேறு இடங்களை சேர்ந்த பெரும்பான்மையினரால் இக்கற்கள் உடைத்து எடுத்துச் செல்லப்படுவதாகவும் இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் எடுத்து தமது வீடுகட்டும் தேவைக்கான கற்களை உடைத்து பெற்றுக் கொள்ளவும் வெளியாரால் உடைத்து கொண்டு செல்வதை தடைசெய்யவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-254)

# பாரத கொலை குறித்து ஜெனீவாவில் விளக்கம்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர கொலைச் சம்பவம் தொடர்பில் ஜெனீவாவில் விளக்கமளிக்கப்படவுள்ளது.

பாரதவின் சகோதரிகள் இருவர் இவ்வாறு ஜெனீவா மனிதவுரிமைப் பேரவை மாநாட்டில் விளக்கமளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொலை இடம்பெற்ற நாள் முதல் இது வரையில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து விளக்கமளிக்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

பாரதவின் இரண்டு சகோதரிகளும் உறவினர்களும் ஜெனீவாவிற்கு சென்று விளக்கமளிக்கவுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை மாநாட்டில் எதிர்வரும் 14 ஆம் திகதி பாரத கொலை தொடர்பில் விளக்கமளிக்க பாரத குடும்பத்தினருக்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

பாரத கொலை தொடர்பிலான வழக்கு இலங்கை நீதிமன்றல் விசாரணை செய்யப்படும் விதம் குறித்தும் விளக்கமளிக்கப் படவுள்ளது.

பாரதவின் மகள் ஹிருணிகாவின் பாதுகாப்பு நிலைமை குறித்தும் திருப்தி அடைய முடியாதென பாரதவின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# ஐ.நா.வாக்கெடுப்பு நடத்தினால் இலங்கை நிச்சயம் தோற்கும்

## ஜே.வி.பி. நம்பிக்கை

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மாநாட்டில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் இலங்கை அதில் தோல்வியைத் தழுவும் என அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை தொடர்பில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தீர்மானம் நிறைவேற்றத்திட்டமிட்டுள்ளன.

அமெரிக்காவுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்தி இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண அரசாங்கம் முயற்சித்திருக்கின்றது. இந்த அரசாங்கம் பழங்குடி அரசாங்கங்களைப் போன்று செயற்படுகின்றது. இராஜதந்திரரீதியில் நடவடிக்கை எடுக்கவில்லை.

நவநீதம்பிள்ளை பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென கோரிய போது அதனை உதாசீனம் செய்து அமைச்சர் சமரசிங்க நாடு திரும்பினார். அவ்வாறே எமது அமைச்சர்களின் இராஜதந்திர அணுகுமுறைகளாகும்.

மனித உரிமைப் பேரவை தீர்மானம் தொடர்பில் இணைக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கில் பிரதிநிதிகளை அமெரிக்காவிற்கு அனுப்பி வைத்துள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

அமெரிக்காவுடன் டீல் பேசிக் கொண்டே சோசலிச தலைவர் சாவேஸின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்வதற்காக அமைச்சர்களை பல கோடி ரூபா செலவழித்து அனுப்பி வைக்கின்றது.

மக்களின் பணமே இவ்வாறு விரயம் செய்யப்படுகின்றது என்றார். (அ-2)

# கொமர்ஷல் வங்கியால் மாணவர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கொமர்ஷல் வங்கிக் கிளையினால் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி கடந்த வருடம் பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களுக்கு நாளை [illegible] மாலை 4 மணிக்கு [illegible] பரிசில் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (அ-2)

# பேச்சுக்கள் மூலம் தீர்வில்லை அதனால் ஆயுதம் தூக்கினோம்

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு


(கொழும்பு)

பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முடியாத காரணத்தினால் ஆயுதம் ஏந்த நேரிட்டது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

காலியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

சமாதான பேச்சுவார்த்தைகளின் ஊடாக பிரச்சினைக்கு தீர்வு காண பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முயற்சிகள் தோல்வியடைந்தனைக் தொடர்ந்து முப்படையினரின் ஒத்துழைப்புடன் யுத்தம் முன்னெடுக்கப்பட்டது.

30 ஆண்டுகளாக யுத்தம் இடம்பெற்ற நாட்டில் தற்போது பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார். (அ-2)



யாழ்.பூம்புகார் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றபோது....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருச்சி புகையிரத நிலையமருகே திரண்டது காங்கிரஸ் கட்சி

## சுவாமியின் உருவப்படம் எரிப்பு

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து ஈழத் தமிழருக்கு எதிராக செயற்படும் ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமிக்கு எதிராக தமிழக காங்கிரஸ் கட்சியினர் திருச்சியில் போராட்டம் நடத்தியுள்ளனர்.

திருச்சி புகையிரத நிலையம் அருகே நேற்று முன்தினம் ஒன்று திரண்ட காங்கிரஸ் கட்சியினர் சுப்பிரமணியம் சுவாமிக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்.

இதன்போது தமிழருக்குத் துரோகம் செய்யும் சுப்பிரமணியம் சுவாமியை தமிழ்நாட்டுக்குள் விடக் கூடாது என்றும் இந்தியாவில் ஈழத் தமிழருக்கு ஆதரவாக குரல்கள் எழும் நிலையில் துரோகம் செய்து வரும் அவரை நாட்டை விட்டே வெளியேற்ற வேண்டும் என்றும் அக்கட்சியினர் வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பினர்.

அதன் பின்னர் சுப்பிரமணியம் சுவாமியின் உருவப்படத்தை *துரோகி ஒழிக* என்ற பலத்த முழக்கங்களுடன் காங்கிரஸ் கட்சியினர் எரித்தனர்.

தமிழக காங்கிரஸ் கட்சியினரும் ஈழத் தமிழருக்கு ஆதரவாக களம் இறங்கியது திருச்சியில் பரபரப்பை ஏற்படுத்தியது.(அ-2)

# மின்சார கட்டணங்களை சீர்திருத்த நடவடிக்கை

(கொழும்பு)

மின்கட்டணம் எதிர்வரும் வாரங்களில் சில சதவீதங்களால் சீர்திருத்தம் செய்யப் படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

மின்கட்டணம் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டிய விதம் குறித்து விடயத்திற்கு பொறுப்பான அமைச்சினால் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாக அந்த ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

மக்கள் கருத்தறிய எதிர்வரும் 28 ஆம் திகதிவரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி ஜயதிஸ்ஸ டி கொஸ்தா தெரிவித்துள்ளார்.

அத்துடன் எதிர்வரும் ஏப்ரல் 4 ஆம் திகதி கொழும்பில் மக்கள் சந்திப்பொன்றை நடத்தி மின்கட்டண அதிகரிப்பு குறித்து பெறப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மின்சாரத்திற்கு இவ்வருடம் செலவிடப்படும் பணம் குறித்து பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவிற்கு இலங்கை மின்சாரசபை அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

அந்த அறிக்கையை ஆராய்ந்து 39 பில், லியன் அநாவசிய செலவு கட்டுப்படுத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மின்கட்டண உயர்வு எதிர்கால திட்டம் குறித்து பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவில் இன்று விசேட கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக அவர் தெரிவித்தார். (அ-2)

# கடனட்டையில் பொருட்கள் வாங்கியவர் கைது

வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவரின் கடனட்டையை திருடிச் சென்று அதில் பொருட்களை கொள்வனவு செய்த ஹோட்டல் பணியாளர் ஒருவரை கைது செய்துள்ளதாக பலப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

பலப்பிட்டிய ஹோட்டலில் தங்கியிருந்த வெளிநாட்டைச் சேர்ந்தவரின் கடனட்டையை திருடிச் சென்று காலியிலுள்ள பல்லங்காடியில் குறித்த சந்தேகநபர் பொருட்களை கொள்வனவு செய்துள்ளார்.

குறித்த சந்தேக நபர் கடனட்டையை மூன்று சந்தர்ப்பங்களில் பயன்படுத்தி சுமார் 60 இலட்சம் பெறுமதியான பொருட்களையே கொள்வனவு செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# சாகும் வரையான உண்ணாவிரதத்தை மாணவர்கள் கைவிட வேண்டும்- கருணாநிதி

## கல்லூரி மாணவர்களை இணைத்து போராடுவோம் என்றும் அறிக்கை

(சென்னை)

இலங்கையின் போர்க்குற்றங்களுக்கு எதிராக சர்வதேச விசாரணை வேண்டும் எனவும் ஈழத்தமிழர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் எனவும் கோரி உண்ணாவிரதப் போராட்டத்தினை ஆரம்பித்துள்ள சென்னை லயோலா கல்லூரி மாணவர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு தி.மு.க. தலைவர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தாய்த் தமிழகமே ஒன்றாகத் திரண்டுள்ளது என்பதை நிரூபிக்கும் வகையில் தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சியினரும் பல்வேறு வகையான போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். இந்நிலையில் சென்னை லயோலா கல்லூரி மாணவர்கள் கறுப்புச்சட்டை அணிந்து கடந்த 8 ஆம் திகதி கல்லூரி வளாகத்திற்குள்ளேயே ஒன்று திரண்டு கையில் ஈழத்தில் நடைபெற்ற படுகொலைகளைச் சித்திரிக்கும் படங்கள் மற்றும் வாசகங்கள் எழுதப்பட்ட அட்டைகளை ஏந்தி ஈழத் தமிழர்கள் படுகொலையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தி இருக்கிறார்கள்.

அவர்கள் அங்கே பேசும் போது இந்திய எதிர்ப்புப் போராட்டத்தில் தமிழக மாணவர்கள் எந்தளவிற்கு தீவிரம் காட்டினார்களோ அதே தீவிரத்தை ஈழத் தமிழர் பிரச்சினை யிலும் காட்டுவதாக இருக்கிறோம். மத்திய அரசு கோரிக்கைக்கு இணங்கி வராவிட்டால் அடுத்த கட்டமாக தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து கல்லூரி மாணவர்களையும் ஒருங்கிணைத்து மிகப்பெரிய போராட்டம் ஒன்றை நடத்துவோம் என்றும் தெரிவித்திருகிறார்கள்.

இதேவேளை, லயோலா கல்லூரி மாணவர்கள் 8 பேர் ஈழத் தமிழர் பிரச்சினையை முன்வைத்து கடந்த 7 ஆம் திகதி 10 மணி முதல் உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகிறார்கள்.

ஈழத் தமிழர்களைப் பாதுகாக்க தாய்த் தமிழகத்திலே உள்ள ஒவ்வொரு இளைஞர்களுடைய உயிரும் முக்கியம் என்பதை உணர்ந்து சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் என்பதை மாற்றிக் கொண்டு வேறு வகை அறப்போராட்டங்களில் மாணவர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்வது பிரச்சினைக்கு மேலும் ஆக்கத்தைத் தரும் என்பதால் உண்ணாவிரதம் இருக்கும் மாணவர்கள் உடனடியாக அதனை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று மிக அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார். (அ-2)

# அரசியல் தலையீடு காரணமாக கல்வித் துறையில் சீர்கேடுகள்

## சஜித் எம்.பி.குற்றச்சாட்டு

இலங்கையின் கல்வித் துறையானது அரசியல் தலையீடுகள் காரணமாக பாரிய சீரழிவுக்கு உட்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டில் 73 சதவீதமான மாணவர்களின் மதிய உணவினை இல்லாதொழித்திருப்பதாகவும் நாட்டில் இலவசக் கல்வி நடைமுறையில் இருக்கின்றது. ஆனால், தற்காலத்தில் மாணவர்களிடமிருந்து பணம் அறவிடப்படுவது எதற்காக என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். அத்துடன் அம்பாந்தோட்டை ஜனாதிபதி ராஜபக்ஷவின் மாவட்டமாகும். அங்கு இயங்கும் ஒரு பாடசாலையில் மாணவர்களிடமிருந்து நான்காயிரம் ரூபா பாடசாலை நிர்வாகத்தினால் கோரப்பட்டுள்ளது. இந்த பணத்தை திரட்டிக் கொள்ள முடியாத நிலையில் தந்தையொருவர் தனது குடும்ப ஜீவனோபாயத்துக்கான படகினை விற்று பணத்தை செலுத்தியுள்ளார். எனவே, இன்று ஒட்டுமொத்த கல்வித்துறையும் பாரிய சீரழிவினை எதிர்கொண்டிருக்கின்றது. அதுமாத்திரமின்றி கல்வித்துறை முற்றுமுழுதாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# மரண அறிவித்தல்



மண்ணில் 09.11.1938

விண்ணில் 08.03.2013

புங்குடுதீவு மடத்துவெளியை பிறப்பிடமாகவும் பெருங்காடு முதலாம் வட்டாரம்,
யாழ்ப்பாணம் மற்றும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான இளைப்பாறிய அதிபர்

## சிவசம்பு வரராஜசிங்கம் அவர்கள்

அமரர் சிவசம்பு வரராஜசிங்கம் அவர்கள் 08. 03. 2013 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார் அன்னார் காலம் சென்றவர்களான சிவசம்பு அமராவதி தம்பதிகளின் அன்பு மகனும் காலம் சென்றவர்களான கந்தையா மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும் ஞானம்மா இளைப்பாறிய ஆசிரியை (கனடா) அவர்களின் அருமைக் கணவரும் மங்கையற்கரசி காலம் சென்ற மனோன்மணி, கனகாம்பிமை முன்னாள் ஆசிரியை (கனடா) தனபாலசுந்தரம் முன்னாள் ஆசிரியர் (கனடா) காலம் சென்ற கைலாயநாதன் திருஞானம் கிராமசபை அலுவலகர் (வன்னி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் திலீபன் (கனடா) கவிதா (கனடா) கலையரசி (கனடா) எழிலரசி (அமெரிக்கா) றாஜி ஆகியோரின் பாசமிகு அப்பாவும் சுகந்தினி (கனடா) செந்தில்முருகன் (கனடா) பாலநாயகம் (கனடா) தயாநிதி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும் குலசேகரம்பிள்ளை திருநாவுகரசு (கனடா) சண்முகநாதன் - C.O (கனடா) ஞானவல்லி முன்னாள் ஆசிரியை (கனடா) சந்திரகுமாரி ஆசிரியை காலம் சென்றவர்களான தனலட்சுமி ஏரம்பு (அதிபர்) மற்றும் இராசம்மா(நோர்வே) சந்திரசேகரம் இளைப்பாறிய எழுதுனர் (கனடா) ஆகியோரின் அருமை மைத்துனரும் எழிலி பொழிலன் இனியன் மதுசன் மதுசா ஆரணி எழிலன் கிஷோக் ஆகாஷ் ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் காலம் சென்றவர்களான சுப்பிரமணியம் சுந்தரமூர்த்தி சின்னம்மா (ஆசிரியை) மற்றும் ஞானம்மா ஆகியோரின் சகலனும் ஆவார்

**அன்னாரின் பூதவுடல் 16. 03. 2013 சனிக்கிழமை மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை**
"Highland Funeral Home" 3280 Sheppard Ave East, Scarborough இல்
**பார்வைக்கு வைக்கப்பட்டு அதே இடத்தில்**
**17. 03. 2013 ஞாயிற்றுக் கிழமை பகல் 9.00 மணி முதல் 11.00 மணிவரை இறுதிக் கிரிகைகள் நடைபெற்று தொடர்ந்து 12.00 மணியளவில்**
இலக்கம் 256 Kingston Road அமைந்துள்ள
Saint John Norway Cemetery & Crematorium இல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்

| | | |
|---|---|---|
| ஞானம்மா - | மனைவி | 647-620-6651 |
| திலீபன் - | மகன் | 647-700-6401 |
| கவிதா செந்தில் - | மகள் | 905-201-8576 அல்லது 416-618-3651 |
| உஷா தயா - | மகள் | 315-806-3788 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யுத்தக்குற்றச் செயல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டுமென கோரி 14 லட்சம் இந்தியர்களால் கையொப்பமிடப்பட்ட மகஜர் ஒன்று சர்வதேச மன்னிப்புச் சபையால் பிதமர் மன்மோகன் சிங்கிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது.**

**சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்திய நிறைவேற்றுப் பணிப்பாளர் *ஆனந்த பத்மநாதன்* இந்த மகஜரை மத்திய அமைச்சர் வீ.நாராயண சாமியின் ஊடாக பிரதமர் மன்மோகனிடம் ஒப்படைத்தார்.**

**சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்திய நிறைவேற்றுப்பணிப்பாளர் ஆனந்த பத்மநாபனுடனான வெவ்வி வருமாறு.**



# 14 இலட்சம் கையெழுத்துகளுடன் மகஜர்

நோ ஃபயர் ஸோன்: *தி கில்லிங்; ஃபீல்ட் ஆஃப் சிறீலங்கா* படத்தை ஜெனீவாவில் உள்ள ஐ.நா அலுவலக அரங்கத்தில் திரையிட விடமாட்டோம் என்று இலங்கை அரசு கூறியிருந்தது. அதை மீறி படம் திரையிடப்பட்டுள்ளது எப்படி சமாளித்தீர்கள்?

அந்தப்படம் நாங்கள் தாயரித்தது அல்ல. பிரிட்டிஷ் செய்தியாளர் **கேலம் மெக்ரே** இயக்கியுள்ளார். எங்களுக்கு கிடைத்த பல ஆவணங்கள், படத்துணுக்குகளை அவருக்கு கொடுத்தோம். பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். படத்தின் முன்னோட்டம் ஊடகங்களில் வெளியானது 83 நிமிடங்கள் ஓடக்கூடிய முழுப்படத்தை திரையிடவிடாமல் தடுக்க இலங்கை அரசு முயற்சி செய்தது. **சர்வதேச மன்னிப்புச்சபை அமைப்புக்கு ஐ.நா. பார்வையாளர் அந்தஸ்து இருப்பதை சுட்டிக்காட்டி, அந்த இடத்தை பயன்படுத்தும் உரிமையை நிலைநாட்டினோம்.**

மனித உரிமை மன்றம் சர்வதேச நிலவரம் குறித்து விவாதிக்கும் இந்த தருணத்தில், ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுக்கு படத்தை திரையிட்டுக் காட்ட தாயரிப்பாளர்களும் ஆர்வலர்களும் விரும்பினார்கள்.

இலங்கையின் பிரதிநிதி படத்தை பார்த்தாரா?

ஐ.நா.வுக்கான இலங்கை தூதர், படம் முடிந்த பின்னர் அரங்குக்கு வந்து **அந்தப் படம் இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச அளவில் நடத்தப்படும் பொய் பிரச்சாரத்தின் ஒரு பகுதி** என்று தன் கருத்தை தெரிவித்தார். இலங்கை அரசாங்கத்தற்கு தகவல்களும் வெளியிட்டு வரும் அமைப்பு சர்வதேச மன்னிப்பு சபை. கடைசிக்கட்ட போரில் பலியானவர்களின் எண்ணிக்கை இந்தளவுக்கு அதிகமாக இருப்பதற்கு விடுதலைப்புலிகளும் காரணம் என்பதை மறுப்பதற்கில்லை. அதேசமயம் சட்ட வரையறை களுக்கு உட்பட்டு மட்டுமே செயல்பட உறுதிமொழி எடுத்துக் கொண்டுள்ள சீருடை அணிந்த அரச படையினர், அதற்கு முற்றிலும் மாறாக மனித உரிமைகளை மீறிய குற்றத்தை மன்னிக்க முடியாது, அவர்களை நீதியின், முன்னால் நிறுத்த வேண்டிய கடமை அனைவருக்கும் இருக்கிறது.

ஜெனீவாவில் படத்தை திரையிட்டு பேசிய இயக்குனர் மேக்ரேயும், விடுதலைப் புலிகளும் போர்க்குற்றம் புரிந்திருக்கிறார்கள். வயதில் குறைந்தவர்களை படையில் சேர்த்து துப்பாக்கி ஏந்த வைத்துள்ளனர். அப்பாவி மக்கள் தப்ப முடியாமல் தடுத்து அவர்களை கேடயமாக பயன்படுத்திக் கொண்டுள்ளனர். எனவே நடந்த கொடுமைக்கு அவர்களும் காரணம் என்று கூறியிருக்கிறார். இது, ஒரு தலைப்பட்சமான பிரசாரம் என்று கண்டிக்கும் இலங்கை அரசின் கோபத்தை ஆற்றும் முயற்சியா?

அப்படி எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. இது தமிழ்மொழி பேசும் மக்களுக்கு, தமிழர்களுக்கு, எதிரான போர் குற்றங்கள் என்ற ரீதியில் அணுகுவது சரியல்ல. தமிழ்

**நேரத்தில் தலையிட வேண்டிய அவசியம் ஏற்பட்டதே.** சாதாரண நாடு என்றால் வாய் மூடி இருக்கலாம்.

பொருளாதாரத்திலும் ஆயுத பலத்திலும் வல்லரசாக காட்டிக்கொள்ள ஆசைப்படுகிறோம். ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவன்சிலில் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

இந்த நிலையில் உலகின் எந்த பகுதியிலும் நல்லது கெட்டது நடந்தாலும் அதில் இந்தியா ஒரு நிலைப்பாடு எடுக்கவேண்டும். அது உலகத்துக்கு தெரிவிக்கப்பட வேண்டும். அதன் அடிப்படையில் தான் உலகம் இந்தியாவை மதிப்பிடும்.

இலங்கையில் நடந்தது என்ன என்பது உலகுக்கு தெரியும். இப்போது இலங்கை என்ன செய்ய வேண்டும் என்பதை ஐ.நா. சொல்கிறது. பல நாடுகள் சொல்கின்றன. பக்கத்து நாடான இந்தியா வாய்திறக்காமல் மௌனம் சாதிப்பது எப்படி பொருத்தமாக இருக்க முடியும்.

மேலும், போர் குற்றம் போன்ற நிகழ்வுக்கு பின்னர் சம்பந்தப்பட்ட நாடு இறையாண்மை என்ற கவசத்தின் பின்னால் ஒளிந்து கொள்ள முடியாது. சர்வதேச சட்டம் அதைத்தான் சொல்கிறது.

உலகத்துக்கு வழிகாட்ட ஆசைப்படும் அமெரிக்கா மட்டும்தான் எங்கே எது நடந் வர மாட்டார்கள் அவர்கள் நினைத்தாலும் வரமுடியாது.

கண்ணுக்கு கண் என்று பழிவாங்க துடிக்காவிட்டாலும், தப்பு செய்துவிட்டு சாதாரணமாக நடமாடுகிறானே என்ற உறுத்தல் நிச்சயம் இருக்கும். குறைந்தபட்சம் ரெண்டு அடியாவது கொடுத்தால்தான் நிம்மதி. தெரியாமல் இடித்தாலும் ஒரு ஸாரியாவது சொல்ல வேண்டும் என்று எதிர்பார்ப்பது போல?

அப்படித்தான்.

அதனால்தான் இலங்கை அரசு தானாகவே ஒரு குழுவை அமைத்து போர்க் குற்றங்களை விசாரிக்க முன்வந்ததை உலகம் வரவேற்றது. எல்.எல்.ஆர்.சி. என்று பெயரிட்ட அந்த கமிஷனின் விசாரணையும் அறிக்கையும் வெறும் கண் துடைப்பு என்று தெரிய வந்த பிறகுதான் ஐ.நா. தலையிடவேண்டும் என்ற கோரிக்கை வலுத்தது.

**பங்களாதேஷில் 40 ஆண்டுக்கு பிறகு இப்போது போர் குற்றவாளி களுக்கு தீர்ப்பும் தண்டனையும் வழங்கப்படுகிறது. கம்போடியாவிலும் அதுதான் நடக்கிறது.**

தாமதம் ஆகிறது என்பதற்காக விசாரணையே வேண்டாம் என்று தீர்மானிக்க முடியாது. குற்றவாளி இறந்த பிறகுகூட தண்டிக்கலாம். பாதியில் நிற்பதல்ல நீதிக்கான பயணம்.

முதல் தீர்மானம் எந்த பலனையும் அளிக்காத நிலையில் இந்த தீர்மானம் மீது இந்தியா

சார்ந்ததே தவிர, இலங்கை அரசுக்கு எதிராக பிரசாரம் நடத்தும் தேவை எங்களுக்கு இல்லை.

ஐ.நா. மனித உரிமைகள் மன்றத்தில் இதே விடயத்துக்காக முன்பு ஒரு தீர்மானம் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது. 22 ஆம் திகதி இன்னொரு தீர்மானம் வரும் போது அதில் வாக்கெடுப்பு இருக்காது என்று பேச்சு அடிபடுகிறது.

சென்றமுறை தீர்மானத்துக்கு ஆதரவாக 24 நாடுகளும் எதிராக 15 நாடுகளும் வாக்களித்தன. 8 நாடுகள் பங்கேற்கவில்லை. இந்தத்தடவை கடுமையான எதிர்ப்பை இலங்கை சந்திக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இந்தியா அழுத்தம் கொடுத்தால் இலங்கை அரசு வழிக்கு வர வாய்ப்பிருக்கிறது. அதைத்தான் அவரிடம் மனுவாக கொடுக்க இருக்கிறோம்.

இன்னொரு நாட்டின் இறையாண்மையை கேள்விக்குறியாக்கும் வகையில் அதன் உள் விவகாரங்களில் தலையிடமாட்டோம் என்று இந்தியா உட்பட பெரும்பாலான நாடுகள் ஒரு கொள்கையை பின்பற்றி வருகின்றன. மகிந்த ராஜபக்சவும் அதையே திருப்பி பாடுகிறார்.

இந்தியா கோடு தாண்டும் என்று நம்புகிறீர்களா?

தாண்டித்தான் ஆகவேண்டும். சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து இந்தியாவின் கொள்கை இன்னொரு நாட்டின் உள்விவகாரத்தில் தலையிடக்கூடாது என்பதுதான். ஆனால், **அன்றைய கிழக்குப் பாகிஸ்தானில் மனித உரிமைகள் மிகவும் மோசமாக மீறப்பட்ட**

மேற்கத்தேய நாடுகளுக்கும் மற்றய நாடுகளுக்கும் அடிப்படையில் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. குறிப்பாக இந்திய துணைக்கண்டத்தில் சமூகப் பார்வையும் மதிப்பீடுகளும் தனித்தன்மை கொண்டவை. பெரிய தப்பு நடந்தாலும் சரி, நடந்தது நடந்து விட்டது. இனி நடக்க வேண்டியதை பார்ப்போம் என்று அடுத்த கட்டத்துக்கு நகரும் மனப்போக்கு பிரதானமாக இருக்கிறது.

நடந்த தப்புக்கு காரணமானவர்களை கண்டுபிடித்து வழக்குப் போட்டு, நீண்ட விசாரணை நடத்தி தீர்ப்பு வழங்கி, அதற்கு அப்பீல் போய், அதற்குமேலும் சென்று, கடைசியில் மன்னிப்பு என்றோ மரணம் என்றோ பயனற்ற முடிவை எட்டுவதைவிட மறப்போம் மன்னிப்போம் என்று நகர்வதுதான் புத்திசாலித்தனம் என்று நினைக்கிறார்கள்.

இந்தியாவில் மட்டுமின்றி பங்களாதேஷ் பாகிஸ்தான். நேபாள் எல்லாவற்றிலும் வெகுஜன கலவர குற்றவாளிகள் ஒருவர்கூட அதுவரை தண்டனை அனுப்பவில்லை. சர்வதேச மன்னிப்புச்சபையால் இதை எப்படி மாற்ற இயலும்?

கலாசார வேறுபாடு வேறு, சட்டத்தின் ஆட்சி என்பது வேறு, எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது என்பது கலாசார அடிப்படையில் உருவான சித்ததாந்தம். நீங்கள் சொல்வது நேரடியாக பாதிக்கப்படாதவர்களுக்கு வேண்டுமானால் பொருந்தாலாம். சித்திரவதை, கொலை, பலாத்காரம் போன்ற குற்றங்களால் பாதிக்கப்படடவர்கள் அவ்வளவு சீக்கிரம் மறப்போம் மன்னிப்போம் மணநிலைக்கு

# குற்றவாளிகள் தண்டிக்கப்படும் வரை உண்மையான அமைதி சாத்தியமில்லை

எதிராகவும் விடுதலைப்புலிகளுக்கு சாதகமாகவும் மனித உரிமை அமைப்புக்கள் செயல்படுவதாக ஜனாதிபதி ராஜபக்ச கூறுகிறார். இந்தியாவிலும் கூட சர்வதேச மன்னிப்புச்சபை மீதான மக்களின் பார்வை ஒரே மாதிரி இல்லை. லாக்கப் மரணம், போலீஸ் என்கவுண்டர், தூக்குத் தண்டனை போன்ற நிகழ்வுகளில் அரசுக்கும் அதன் துறைகளுக்கும் எதிரான நிலைப்பாட்டையே சர்வதேச மன்னிப்புச் சபை எடுப்பதாக ஒரு குற்றச்சாட்டு உண்டு. குண்டு வைப்பது போன்ற பயங்கரவாத செயல்களில் ஈடுபடும் அமைப்புகளுக்கு எதிராகவோ, அவர்களால் பாதிக்கப்படும் அப்பாவி மக்களுக்கு ஆதரவாகவோ சர்வதேசமன்னிப்புச்சபை குரல்கொடுப்பதில்லை என்கிறார்களே?

விடுதலைப்புலிகளும் குற்றம் செய்துள்ளனர் என்று ஆரம்பத்திலேயே சுட்டிக்காட்டி நாட்டில் சில தலைவர்கள் அப்படி சித்தரிக்கிறார்கள். இது உண்மையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நலனுக்கு உகந்ததல்ல. அடிப்படை மனித உரிமைகள் மீறலாகத்தான் அணுகவேண்டும். மக்களின் வாழ்வதற்கான, கற்பதற்கான, உழைப்பதற்கான, பிழைப்பதற்கான உரிமைகளை நசுக்கியுள்ளனர்.

இராணுவமும் விடுதலைப்புலிகளும் அவரவர் நிலையில் நின்று இந்த குற்றத்தை புரிந்துள்ளனர்; அதை நேர்மையுடன் அங்கீகரிக்கும் போதுதான் நீதிக்கான போராட்டத்தில் தமிழர் அல்லாத ஏனைய மக்களின் ஆதரவும் நல்லெண்ணமும் கிடைக்கும். இனம் சார்ந்த, மொழி சார்ந்த பிரச்சினையாக இதை பார்ப்பது பரந்த கண்ணோட்டம் ஆகாது. விரும்பும் பலன்களையும் தராது.

அதையும் தவிர, சர்வதேச மன்னிப்புச் சபை இந்தியாவின் முயற்சிகள், இந்திய அரசு தாலும் கருத்து சொல்கிறது. ஜனநாயகம், மனிதஉரிமைகள் நசுக்கப்படுவதாக குரல் கொடுக்கிறது. இராணுவ ரீதியாக தலையிடவும் செய்கிறது. அப்படியெல்லாம் இந்தியாவால் செயல்பட முடியுமா? அமெரிக்காவுக்கு அதற்கான தகுதி இருப்பதாக சர்வதேச மன்னிப்பு சபை நம்புகிறாதா?

**நிச்சயமாக இல்லை. அமெரிக்காவில் மனித உரிமைகள் சிறப்பாக மதிக்கப்படுவதாக நாங்கள் கூறவில்லை. அவர்களின் மீறல்களும் உலகம் அறிந்தவை.** அமெரிக்காவை இந்தியா பின்பற்ற வேண்டும் என்பதும் எங்கள் கோரிக்கை அல்ல. குற்றங்கள் நடந்திருக்கின்றன. அதற்கு ஆதாரங்கள் உள்ளன. சட்டப்படி விசாரணை நடத்தி குற்றம் செய்தவர்களை தண்டிக்கச் சொல்கிறோம். ஒரு காரியத்துக்கு யாராவது பொறுப்பேற்க வேண்டும்.

வின் நிலை மாறும் என்று எப்படி எதிர்பார்க்கிறீர்கள்?

கடந்தமுறை நமது நாடாளுமன்றத்தில் இந்த விவகாரம் வந்தபோது காணப்பட்ட சூழலுக்கும் இப்போதைய சூழலுக்கும் வேறுபாடு தெரிகிறது. இலங்கை நிலவரம் மோசமாகி வருவதை அனைவரும் உணர்கிறார்கள். நாட்டின் தலைமை நீதிபதியை தூக்கி எறியும் துணிச்சல் கொண்ட ஒரு ஜனாதிபதியிடம் பெரும்பான்மை மக்களுக்கே நீதி கிட்டவில்லை என்று இங்குள்ளவர்கள் பேசத் தொடங்கியுள்ளனர்.

தமிழர்கள் மட்டுமின்றி அனைத்து இந்திய மக்களின் எதிர்பார்ப்பும் இலங்கை அநீதிக்கு பரிகாரம் காண்பதில்தான் இருக்கிறது என்பதை மத்திய அரசு உணரும்போதுதான் அது ஜெனீவாவில் எதிரொலிக்கும் என்று நம்பகிறேன்.

நன்றி: இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்மடுநகர் மூலிகை பண்ணை 'சீராக இயங்கவில்லை

(புளியம்பொக்கணை)

கரைச்சி பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட கல்மடுநகர் கிராமத்தில் உள்ள மூலிகைப் பண்ணை சீராக இயங்கவில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கல்மடு கிராமத்தில் அரசாங்கத்தால் மூலிகைப் பண்ணைக்கென 100 ஏக்கர் வரையான நிலம் ஒதுக்கப்பட்டு கடந்த காலத்தில் சிறப்பாக இயங்கி வந்த மூலிகைப் பண்ணை யுத்தத்தின் பின் சீராக இயங்கவில்லை என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் மூலம் இப்பண்ணைக்கு கட்டடங்கள் அமைக்கப்பட்ட போதும் மூலிகை தொடர்பான அபிவிருத்திகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் பணியாளர்கள் வேலைக்கு அமைர்த்தப்படவில்லை எனவும் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே, உரியதரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து இப்பண்ணையை இயங்கவைக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-263)

# கிராம அபி.சங்க கட்டடம் படையினரின் கட்டுப்பாட்டில்

## பெற்று தருமாறு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்ட சிலாவத்தை கிராம சேவையாளர் பிரிவில் கிராம அபிவிருத்தி சங்க கட்டடம் இன்மையால் அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகள் எதனையும் முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு மீள் குடியேற்றம் செய்யப்பட் 475 குடும்பங்கள் இக்கிராமத்தில் வாழ்ந்துவரும் நிலையில் இங்குள்ள கிராம அபிவிருத்திச்சங்க கட்டடம் முல்லைத்தீவு இராணுவ பாவனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதால் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடம் இல்லாத நிலை காணப்படுகிறது.

இதனால் இம்மக்கள் அபிவிருத்தி தொடர்பான எந்தவொரு செயற்பாடுகளையும் ஒன்றுகூடி தீர்மானித்து முடிவெடுக்க முடியாதநிலை காணப்படுகிறது.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு கிராம அபிவிருத்தி சங்க கட்டடத்தை விடுவிக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-267)

# புகைத்தலால் வருடத்தில் 21 ஆயிரம் பேர் மரணம்

## சுகாதார அமைச்சு

(கொழும்பு)

இலங்கையில் புகைத்தல் காரணமாக வருடாந்தம் 21 ஆயிரம் பேர் வரையில் மரணிப்பதாக சுகாதார அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

புகைப்பதால் ஏற்படும் நோய்கள் காரணமாக பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவோருக்கு அவர்களது குடும்பங்கள் பெருந்தொகை பணத்தை செலவிட நேரிடுகின்றது.

சிகரெட் புகையை கர்ப்பிணித் தாய்மார்கள் சுவாசிப்பதால் வருடாந்தம் ஏற்படுகின்ற கருக்கலைப்புக்களின் எண்ணிக்கையை இதுவரை மதிப்பிட முடியாமற் போயுள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

அத்துடன் புகைப்பிடித்தலை தடுப்பதற்கு பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (அ-2)

# இந்திய பிரதமருக்கு அஞ்சல் அட்டை அனுப்பும் போராட்டம்

தமிழர் எழுச்சி இயக்கமும் தமிழர் பெண்கள் செயற்களமும் இணைந்து இந்திய பிரதமருக்கு அஞ்சல் அட்டை அனுப்பும் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். குறித்த போராட்டம் சென்னை யில் உள்ள தலைமை தபால் நிலைய அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐ.நா.மனித உரிமை ஆணையக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக தமிழர்களின் கோரிக்கையை வலியுறுத்தியே நடத்தப்பட்டது.

இதில் பாடசாலை மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், பெண்கள், தமிழின உணர்வாளர்கள் என சுமார் 200 பேர் பங்கேற்றனர்.

அவர்கள் எழுதிய அஞ்சல் அட்டையில் ஐ.நா. மனித உரிமைஆணையக் கூட்டத்தில் அமெரிக்கா கொண்டுவரும் கண்துடைப்பு தீர்மானங்களுக்கு மாற்றாக தமிழர்களின் கோரிக்கையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டிய தீர்மானங்களாக,

தமிழின அழிப்புச் செய்த இலங்கை அரசுடனான அனைத்து உறவுகளையும் உடனடியாக நிறுத்திடு. தமிழர் பகுதிகளை சிங்கள மயமாக்குவதை நிறுத்துவதோடு, அங்கு குவிக்கப்பட்டிருக்கும் சிங்கள இராணுவத்தை உடனே வெளியேற்று, இலங்கையில் நடந்த போர்க் குற்றம் மற்றும் இன அழிப்பு பற்றிய சுதந்திரமான பன்னாட்டு போர்க்குற்ற விசாரணை நடத்திடு, உலகம் முழுவதும் வாழ்கின்ற ஈழத்தமிழர்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்திடு ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இந்த கடிதங்கள் அனுப்பப்பட்டன. (அ-2)

# பி.செ.கடமையாற்றும் சாரதிகளுக்கு நிரந்தர நியமனம் கிடைக்கவில்லை

(முல்லைத்தீவு)

முல்லை. மாவட்ட செயலகம், புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று, மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேச செயலகங்களில் சாரதிகளாக கடமையாற்றுவோருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை என விசனம் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற நேர்முகத் தேர்வில் சித்தியடைந்த 10 இற்கும் மேற்பட்ட சாரதிகளுக்கே நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.

மன்னார், கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட போதும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு மட்டும் நிரந்தர நியமனம் வழங்காது புறக்கணித்தது ஏன்? என சாரதிகள் ஆதங்கப்படுகின்றனர்.

போர்ச்சூழ் நிலையிலும் வெயிலிலும் மழையிலும் தொடர் சேவை செய்யும் தம்மை புறக்கணித்தது ஏன் என கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென சாரதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-267)




★ *1702*-முதல் ஆங்கில நாளிதழான த டெய்லி குராண்ட் (The Daily Courant) லண்டனில் வெளியிடப்பட்டது.

★ *1801*-ரஷ்யாவின் முதலாம் பவுல் கொல்லப்பட்டான். அவனது மகன் முதலாம் அலெக்சாண்டர் மன்னனானான்.

★ *1861*-அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பு புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தியது.

★ *1902*-காங்கேசன்துறையில் இருந்து சாவகச்சேரி வரையான 21 மைல் நீள புகையிரதப் பாதை அமைக்கப்பட்டது.

★ *1905*- காங்கேசன்துறை முதல் மதவாச்சி வரை புகையிரதப் பாதை அமைக்கும் பணி முடிவடைந்தது.

★ *1917*-முதலாம் உலகப் போர்: பக்தாத் ஜெனரல் ஸ்டான்லி மோட் தலைமையிலான ஆங்கிலோ- இந்தியப் படைகளிடம் வீழ்ந்தது.

★ *1918*-ரஷ்யாவின் தலைநகரம் பெத்ரோகிராட்டில் இருந்து மொஸ்கோவுக்கு மாறியது.

★ *1931*-சோவியத் ஒன்றியத்தில் வேலைக்கும் சோவியத் ஒன்றியத்தைப் பாதுகாக்கவும் ஆயத்தமாயிரு என்ற இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

★ *1958*-ஐக்கிய அமெரிக்காவின் பி-47 விமானம் அணுகுண்டு ஒன்றைத் தவறுதலாக வீழ்த்தியதில் தெற்குக் கரோலினாவில் பலர் காயமடைந்தனர்.

★ *1990*-லித்துவேனியா சோவியத்திடம் இருந்து தன்னிச்சையாக விடுதலையை அறிவித்தது.

★ *2007*-தென் அமெரிக்காவின் வடகிழக்கில் உள்ள கயானா விண்வெளி ஏவுதளத்தில் ஏரியன் - 5 ரொக்கெட் ஏவப்பட்டு வெற்றிகரமாக அது இன்சாட் - 4B என்ற இந்திய செய்மதி யையும் ஸ்கை நெட்- 5A என்ற பிரித்தானியாவின் துணைக் கோளையும் சுமந்து சென்றது.

★ *2011*-2011 செண்டை நிலநடுக்கமும் ஆழிப்பேரலையும் ஜப்பானின் ஒன்சூ தீவில் வடகிழக்குப் பகுதியில் 8.9 புள்ளிகள் பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டு ஆழிப்பேரலையாக உருவெடுத்தது. பெரும் எண்ணிக்கையானோர் உயிரிழந்தனர்.

**பிறப்பு**

★ *1920*- நிக்கலாஸ் புளொம்பேர்ஜென், நோபல் பரிசு பெற்றவர்

**இறப்புக்கள்**

★ ***1955*-அலெக்சாண்டர் பிளெமிங், நுண்ணுயிர் கொல்லியான சிதைநொதியைக் கண்டுபிடித்தவர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1881)**

★ *2002*-ஜேம்ஸ் டோபின், நோபல் பரிசு பெற்றவர் (பி.1918)

★ *2006*-சிலபதான் மிலொசேவிச், சேர்பியா, யூகொஸ்லாவியா ஜனாதிபதி (பி.1941)

**சிறப்பு நாள்**

★ உலக சிறுநீரக தினம்.

**அலெக்சாண்டர் பிளெமிங்**



பிளெமிங் 1881 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி அன்று ஸ்கொட்லாந்து நாட்டில் பிறந்தார். அவரது இளமைக் கல்வி இயற்கையெழில் சூழ்ந்த மலைப் பகுதியில் அமைந்தது. அங்குதான் இயற்கையை ரசிக்கவும் எதையும் கூர்ந்து நோக்கி அறியவும் அவர் பயிற்சி பெற்றார்.

பின்னாளில் அவர் பென்சிலின் என்ற அற்புத மருந்தைக் கண்டுபிடிக்க இப்பயிற்சியே உதவி செய்தது. பின் மருத்துவக் கல்லூரியில் படிப்பை முடித்த பின்னர் நோய்க்கிருமிகளுக்கெதிரான ஆராய்ச்சியில் இரத்தத்தைப் பரிசோதித்து நோயை எளிதில் கண்டறியும் ஒரு மேம்பட்ட முறையை பிளெமிங் அறிமுகப்படுத்தினார். தொடர்ந்து பல ஆய்வுகளின் மூலம் காளானில் இருந்து தயாரிக்கப்படும் பென்சிலினை கண்டுபிடித்தார். இது மிகவும் சிறந்த கண்டுபிடிப்பாக அமைந்ததுடன் பல உயிர்களை காக்க உதவியது. இதன்மூலம் பென்சிலினைக் கண்டு பிடித்து நவீன நச்சுமுறி மருந்துகள் யுகத்தைத் தொடங்கி வைத்த பெருமைக்குரிய விஞ்ஞானியாக அலெக்சாண்டர் மிளெமிங் விளங்குகிறார். இதையடுத்து 1945 ஆம் ஆண்டில் அலெக்சாண்டர் பிளெமிற்கு மருத்தும் அல்லது உடலியங்கி யலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. இவ்வாறு மருத்துவ விஞ்ஞானத்தில் பெரும் பங்களித்த பிளெமிங் 1955 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் திகதி உயிர்துறந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வருட இறுதிக்குள் 10 ஆயிரம் வீடுகளை கட்டிமுடிக்க தீர்மானம்

## இரு அரசாங்கங்களும் உறுதி

(யாழ்ப்பாணம்)

இந்த வருட இறுதிக்குள் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்தில் 10 ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்படும் என கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் யாழிலுள்ள துணைத்தூதரகம் ஊடாக அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கபட்டுள்ளதாவது,

இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்களினால் இணைந்து நடைமுறைப்படுத்திவரும் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் 43 ஆயிரம் வீடுகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. இரண்டு அரசாங்கங்களினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தெரிவு முறைக்கேற்ப வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலுமிருந்தும் முதற்கட்ட வேலைத்திட்டத்திற்கு ஏற்கனவே 8 ஆயிரத்து 700 பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

பயனாளிகளுக்கான முதற்கட்டத் தவணைப் பணத்தை இந்திய அரசாங்கம் வழங்கியுள்ளது. வடமாகாணத்தில் 10 ஆயிரம் வீடுகளை அமைத்து முடிக்கும் இலக்கை இந்த வருட முடிவுக்குள் அடைய இரு அரசாங்கங்களும் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளன. முறைமைகளுக்கு அமைவானதும் நீதியானதும் பாரபட்சமற்றதுமானதும் வெளிப்படையானதுமான முறையில் வீட்டுத்திட்ட பயனாளிகளுக்கான தேர்வை நடத்துவதற்குச் சம்மதித்து அவ்விதமே நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இந்த முறைமையானது அரசியல் கட்சிகள், சிவில் சமுதாய அமைப்புக்கள் , பாதிக்கப்பட்டோர் உள்ளிட்ட இதில் சம்பந்தப்பட்ட யாவருடனும் விரிவான பேச்சுவார்த்தைகள் நடத்திய பின்னரே முடிபு செய்யப்படுகின்றன.

இந்தத் தெரிவு முறைமையின் கீழ் முதற்படியாக வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலுமுள்ள மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட கிராமங்கள் அடையாளம் காணப்படுகின்றன. அதன் பின்னர் அக்கிராமத்திலுள்ள தற்போது நிரந்தரமாகத் தங்கள் கிராமத்தில் வசிப்பதற்குத் திரும்பியுள்ள இலங்கையின் எந்தப்பாகத்திலும் சொந்த வீட்டைக் கொண்டிராத நேரடியாக அல்லது மறைமுகமாக வேறு எந்த நிரந்தர வீடமைப்பு உதவியையும் பெற்றிராத தற்போது நிரந்த வீடொன்று தேவை ப்படும் அந்தக் கிராமத்தில் வசித்த அல்லது அங்கு நிரந்தரமாக வசித்தோரின் வழித் தோன்றல்களானோர்கள் முதலாவது பயனாளிகள் தெரிவுப்பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

அவர்களுக்கு வழங்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் மூலம் அவர்கள் பற்றிய விபரங்கள் சேகரிக்கப்படும். அவர்களால் வழங்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படுகின்றன. பயனாளிகள் இவ்விதமாகக் புள்ளியடிப்படையில் வழங்கப்பட்டு ஒரு நியம வெட்டுப்புள்ளியின் அடிப்படையில் இறுதியான பயனாளிகள் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

பயனாளிகள் முன்மொழிவுப் பட்டியல் பெறப்பட்ட புள்ளிகளுடனும் ஏனைய விபரங்களுடன் பொது இடங்களில் பார்வைக்கு வைக்கப்படும். அந்தப் பகுதியைச் சேர்ந்தோர் யாராவது முறைப்பாடுகள் ஏதாவது இருந்தால் அவற்றைச் செய்வதற்கு இரு வார கால அவகாசம் வழங்கப்படுகின்றது.

அந்தப் பகுதிப் பாராளுமன்ற அங்கத்தவருக்கும் இந்தப் பட்டியல் அனுப்பிவைக்கப்படுகின்றது. ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் பிரதேச செயலாளராலும் அமுலாக்க முகவர்களாலும் விசாரணை செய்யப்படுகின்றன. ஆதாரத்துடனான முறைப்பாடுகள் செய்யப்படாத பயனாளிகள் மட்டும் இறுதிப் பட்டியலில் உள்வாங்கப்படுவார்கள். இதுபோன்ற வழமையான முறையீடுகள் கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்திற்கோ அல்லது யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய உதவித் தூதராலயத்திற்கோ செய்யப்படலாம். அத்தகைய முறைப்பாடுகள் முறையான விசாரணைக்குட்படுத்தப்படும்.

எனவே, வீடமைப்பு உதவிக்கான பயனாளிகளின் இறுதிப் பட்டியல் கடுமையான முறைமையின் கீழ் அடையாளம் காணப்பட்டு சரிபார்க்கப்பட்டு முறைப்பாடுகள் பரிசீலிக்கப்பட்ட பின்னரே ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

எனவே, தெரிவில் காட்டப்படும் பாரபட்சம் சம்பந்தமான முறைப்பாடுகள் ஆதாரமற்றவையாகும். ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகள் மற்றும் வீடமைப்புத் திட்டத்தின் முன்னேற்றம் சம்பந்தமான விபரங்களை இந்திய உயர் ஸ்தானிகராலயம் இணையத்தளம் (http:/www.hcicolombo.org/index.php?option=com pages&id=170) மூலம் தெரிந்து கொள்ளலாம்.

மேலும் இந்திய அரசாங்கம் இந்தத் திட்டத்திற்காக 270 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது. இதன் முன்னோடித் திட்டத்தின் கீழ் வட மாகாணத்தில் ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன. வட மற்றும் கிழக்கு மாகாணங்களில் 43 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கான இரண்டாவது கட்டம் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

ஒவ்வொரு பயனாளியும் நான்கு தவணைகளில் புதிய வீட்டு நிர்மாணத்திற்காக இலங்கை ரூபா 5 இலட்சத்து 50 ஆயிரமும் வீட்டுத் திருத்த வேலைகளுக்காக மூன்று தவணைகளில் இலங்கை ரூபா 2 இலட்சத்து 50 ஆயிரமும் பெற்றுக் கொள்வார். அவர்களுக்கான கொடுப்பனவு அவர்களுடைய சேமிப்பு வங்கிக் கணக்கில் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் நேரடியாக வைப்புச் செய்யப்படும் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

# அமெ.வின் ம.உ. மீறல்களை ஏன் கண்டு கொள்ளவில்லை?

## அமைச்சர் யாப்பா கேள்வி

அமெரிக்காவின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது. இலங்கையின் அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப்படையினரால் பொதுமக்கள் கொல்லப்பட்டமையை அவர் இந்தக்குற்றச்சாட்டுக்காக சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் பெரும்பாலான நாடுகள் அமெரிக்காவின் செயற்பாடுகளை கண்டுகொள்ளாமல் இலங்கை போன்ற நாடுகள் மீதே குற்றச்சாட்டுக்களை சுமத்துவதாக யாப்பா குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிராக ஜெனீவா மாநாட்டில் அமெரிக்கா இரண்டாவது நகல் அறிக்கையை கடந்த வெள்ளிக்கிழமை முன்வைத்தமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார். (அ-2)

# பொதுநலவாய மாநாட்டை பிரி. பகிஷ்கரிக்க வேண்டும்

## வெளியுறவு தெரிவுக்குழு கோரிக்கை

இலங்கையில் நடைபெறவுள்ள பொது நலவாய நாடுகளின் அமர்வை பகிஷ்கரிக்குமாறு விடுக்கப்பட்டு வரும் கோரிக்கைக்கு பிரித்தானிய வெளியுறுவுத்துறை தெரிவுக் குழு ஆதரவு வெளியிட்டுள்ளதாக பிரித்தானிய எதிர்க்கட்சியான தொழில்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிமொன் டன்ஸ் ஷேக் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பிரித்தானியாவின் வெளியுறவுத்துறை தெரிவுக்குழு அந்த நாட்டின் மூன்று பிரதான கட்சிகளின் 11 நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்டிருக்கிறது.

இந்தக்குழு பிரித்தானியாவின் வெளியுறவு செயற்பாடுகள், நிதிகள் போன்ற விடயங்களை கண்காணிக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயத்தில் பிரித்தானிய அரசாங்கம் இன்னும் உரிய கவனத்தை செலுத்தவில்லை.

இந்த நிலையில் பிரித்தானிய அரசாங்கம் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை பகிஷ்கரிக்க வேண்டும் என்று வெளியுறவுக்குழுவாகிய நாம் கோருகிறோம்.

2011 ஆம் ஆண்டு இலங்கையின் தங்காலையில் பிரித்தானிய பிரஜை கொல்லப்பட்டதன் விசாரணை முன்னேற்றத்தை கண்காணிப்பதற்காக கடந்த வாரம் இலங்கை சென்றிருந்த கொல்லப்பட்டவரின் சகோதரருடன் டன்ஸ்ஷேக்கும் இலங்கைக்கு சென்றிருந்தார். (அ-2)

# மேர்வினின் கருத்துக்கு ஆளும்கட்சியினர் எதிர்ப்பு

அமைச்சர் மேர்வின் சில்வாவின் நடவடிக்கைகளுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மீண்டும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.


கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனாவிற்கு எதிராக மேர்வின் சில்வா கருத்து வெளியிட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தின் போது அமைச்சர் மேர்வினுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட வேண்டுமென முதலில் தீர்மானிக்கப்பட்ட போதிலும் பின்னர் கூட்டத்தின்போது எதிர்ப்பை வெளியிடுவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களினால் இந்த எதிர்ப்பு வெளியிட்படவுள்ளது. அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் மகனும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வைத்தியலங்காரவின் மகனும் மோதிக்கொண்ட சம்பவம் தொடர்பில் அமைச்சர் கருத்து வெளியிட்டிருந்தார்.

தாயின் வயிற்றில் ஒன்பது மாதங்கள் இருக்க முடியுமாயின் ஏன் பொலிஸ் வாங்கில் எட்டு மணித்தியாலம் அமர்ந்திருக்க முடியாது. மகனின் செயற்பாடுகள் மூலம் தந்தையின் தரம் வெளிப்பட்டுள்ளது என மேர்வின் சில்வா குறிப்பிட்டிருந்தார்.

இதன்மூலம் அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிற்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாகவும் இவ்வாறான கருத்துக்களை அமைச்சர் மேர்வின் சில்வா எதிர்காலத்தில் வெளியிடக்கூடாது எனவும் சிரேஷ்ட அமைச்சர்கள் கோரவுள்ளனர். (அ-2)


பரந்தன் இந்து மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிபர் நல்லதம்பி உரைநிகழ்த்துவதையும் நிகழ்வுகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு கண்டாவளை கிராமசேவை அலுவலர் நந்தகுமார் சான்றிதழ் வழங்குவதையும் வினோத உடைப் போட்டி நிகழ்வில் வெற்றியீட்டிய மாணவருக்கு கிளிநொச்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பிரதாப்சிங் விஷ்ணு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீதான பிரேரணையை மலேசியா ஆதரிக்க வேண்டும்

## மலேசிய மனிதவுரிமை அமைப்பு வலியுறுத்தல்

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரவுள்ள பிரேரணைக்கு மலேசியா ஆதரவளிக்க வேண்டும் என மலேசியாவின் மனித உரிமை அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

மலேசியாவின் மனித உரிமை அமைப்பான சுவராம் அமைப்பின் தலைவர் கே. ஆறுமுகம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இந்த விடயத்தில் மலேசியா குருட்டுக் கண்கொண்டு பார்க்காமல் இலங்கைக்கு எதிராக வாக்களிக்கவேண்டும்.

விடுதலைப்புலிகளுக்கு இடையிலான யுத்தத்தில் இலங்கையில் பல அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இலங்கை மனித உரிமை மேம்பாட்டு விடயங்களில் திருப்தியடையமுடியாது என ஐ.நா. மனித உரிமை ஆணையகம் தெரிவித்துள்ளதாகவும் இலங்கையில் பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதால் மலேசியா இலங்கைக்கு எதிராக வாக்களிக்க வேண்டும்.

இலங்கையில் தமிழர்களுக்குப் பின்னர் புதிதாக முஸ்லிம்கள் இலக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும் முஸ்லிம்கள் இவ்வாறான இன்னல்களை எதிர்நோக்கிவரும் நிலையில் மலேசியா இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்கக்கூடாது.

இலங்கையில் 8 முஸ்லிம் பள்ளிகள் தாக்கப்பட்டுள்ளதாகவும் முஸ்லிம் மக்களுக்கு எதிராக பௌத்த அமைப்புக்கள் போராட்டம் நடத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# வீட்டுக்குள் தீ; பெண் கருகி பலி

அரலங்கவில பிரதேச வீடொன்றில் இடம்பெற்ற தீயினால் பெண் ஒருவர் பலியாகியுள்ளார்.

இச்சம்பவம் அரலங்கவில பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

25 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் தீ ஏற்பட்ட போது குறித்த பெண் தனியாக இருந்துள்ளார். இதனையடுத்து பெண்ணின் சடலம் அம்பாறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

தீ ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில் அரலங்கவில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# ஐந்து மீனவர்கள் கைது

தடைசெய்யப்பட்ட மீன்பிடி கருவிகளுடன் கடற்தொழிலுக்கு சென்ற 5 மீனவர்கள் நேற்று முன்தினம் புல்மோட்டை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட அவர்கள் நேற்று முன்தினம் புல்மோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் பயன்படுத்திய படகுகளும் கையகப்படுத்தப்பட்டுள்ளன. நேற்று காலை அவர்கள் திருகோணமலை நீதவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட விருப்பதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார். (அ)

### அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம்

(சித்தன்கேணி)

யாழ்.வட்டு இந்துக் கல்லூரியின் அபிவிருத்தி சங்க வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி அதிபர் சி.தனஞ்சயன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

புதிய நிர்வாக தெரிவு இடம்பெறவுள்ளமையால் அனைவரையும் தவறாது சமுகம் அளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-17)

# அரசியலில் பெண்களின் வீதத்தை அதிகரிக்க நடவடிக்கை-பிரதமர்

அரசியலில் பெண்களின் வீதத்தை அதிகரிக்கச் செய்வதற்காக அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகள் ஏனையோருக்கு சிறந்த முன்மாதிரியாகுமென பிரதமர் தி.மு. ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி பிரதமர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். இந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது;

நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்து 65 வருடங்கள் கடந்துள்ள நிலையில் மாறிமாறி வந்துள்ள அனைத்து அரசாங்கங்களும் பெண்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் சமவுரிமை வழங்குவதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

அரசியலில் பெண்களின் வீதத்தை அதிகரிக்கும் அரசின் முயற்சி உலகிற்கு முன்மாதிரியானது. உலகிலே முதலாவது பெண் பிரதமரை உருவாக்கி ஆண், பெண் சமத்துவத்தையும் சமூகத்தன்மையையும் நிலைநாட்டுவதில் எமது தேசம் முக்கிய இடம்வகிக்கின்றது.

துரித நகரமயமாக்கல் மற்றும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற நவீன தொழில்நுட்பம் என்பன காரணமாக அதிலே அதிக பிரதி நிதித்துவத்தை பெண்கள் வகித்து வருகின்றனர். இலங்கை வாழ் பெண்களுக்கு உரிய இடத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக பல்வேறு திட்டங்களை ஆரம்பித்துள்ளன.

அவற்றிலே பாடசாலை மாணவர்களுக்கு முறையான கல்வி, இளைஞர்களுக்கு உயர் கல்வி மற்றும் முறையான தொழில்பயிற்சி என்பனவற்றினைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்வின் தலைமையிலான தற்போதைய அரசு பாரிய பங்களிப்பு செலுத்தி வருகிறது.

மகளிருக்காக தினத்தை ஒதுக்கி அன்றைய தினத்திலே பல்வேறு நிகழ்ச்சிகளையும் கொண்டாட்டங்களையும் ஏற்பாடு செய்வதற்குப் பதிலாக பெண்களுக்கு கௌரவம், பாதுகாப்பு மற்றும் அமைதியான சூழல் என்பனவற்றினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஏற்ற நீண்ட கால தேசிய நிகழ்ச்சித் திட்டம் ஒன்றினை ஆரம்பிக்க வேண்டியதே இன்றைய தேவையாகும்.

அதற்குத் தேவையான வசதிகளை அரசாங்கம் வழங்குவதற்கு தயாராக உள்ளதாகவும், நாட்டு மக்கள் அனைவரும் இதற்கு பங்களிப்புச்செய்ய வேண்டும் எனவும் தனது செய்தியில் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

### மாத்தளை மனித புதை குழி விவகாரம்

# ஐ. நாவின் உதவிகளை நாடுவது குறித்து தீர்மானிக்கவில்லை

## ஜே.வி.பி தெரிவிப்பு

மாத்தளை மனித புதைகுழி தொடர்பான விசாரணை நடத்துவதற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பின் உதவிகளை பெற்றுக் கொள்வதா என்பதனை இன்னமும் தீர்மானிக்கவில்லை என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்துவதற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்பட உள்ளதாக தன்னார்வத் தொண்டு நிறுவனமொன்று அறிவித்துள்ளது.

உத்தியோக பூர்வமாக குறித்த தன்னார்வத் தொண்டு நிறுவனம் கோரிக்கை விடுக்கவில்லை எனவும் எனவே இது தொடர்பில் கருத்து வெளியிட முடியாதென ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மாத்தளை வைத்தியசாலை வளாகத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட மனித எலும்புக் கூடுகளும் மண்டையோடுகளும் அண்மையில் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இயற்கை காரணங்களினால் உயிரிழந்தவர்களது சடலங்களாக இது தோன்றவில்லை எனவும் இவை கொலை செய்யப்பட்டவர்களின் சடலங்களாகவே காணப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தமது அமைப்பின் கிளர்ச்சியாளர்களின் சடலங்களாக இருக்கக்கூடுமெனவும் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் ஜே.வி.பி. கோரியுள்ளது. (அ-2)

# டில்லியை விடவும் தமிழகம் இலங்கைக்கு முக்கியமானது

## கிரியெல்ல எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

புதுடில்லியை விடவும் தமிழகம் இலங்கைக்கு முக்கியமானது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.


கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

புதுடில்லியை விடவும் தமிழகம் இலங்கைக்கு முக்கியமானது என்பதே ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் நிலைப்பாடாகும். தென்னிந்தியாவுடனான உறவுகளில் விரிசல் ஏற்பட அரசாங்கமே காரணம்.

தென்னிந்தியாவுடன் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கங்கள் சுமுகமான உறவுகளைப் பேணி வந்தது. ஆயினும் இவ் அரசாங்கம் நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையில் செயற்பட்டு வருகிறது.

இந்தியாவின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ள முடியாவிட்டால் ஐரோப்பாவிடமிருந்து உதவிகள் கிடைக்கும் என எதிர்பார்க்கமுடியாது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தால் தமிழகத்துடனான உறவுகளில் விரிசல் ஏற்பட்டிருக்காது என்றார். (அ-2)



சர்வதேச கல்வியகம் நோர்வே ஆசிரியர் சங்கம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகியன இணைந்து நடத்திய சர்வதேச மகளிர் தினம் கடந்தவெள்ளிக்கிழமை மு/ மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வு பெற்ற வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் நிற்பதையும் துணுக்காய் வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றனுக்கு பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவிக்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களை படங்களில் காணலாம். (படங்கள் : -மல்லாவி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கும் குழந்தை திருமணம்; ஐ.நா. மக்கள் தொகை நிதியம் தகவல்

குழந்தை திருமணத்திற்கு 14 கோடிக்கும் அதிகமான சிறுமிகள் 2011 தொடக்கம் 2020ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் உட்படுத்தப்படுவார்கள் என ஐ.நா. மக்கள் தொகை நிதியம் தெரிவித்துள்ளது.

குழந்தை திருமண பழக்கம் தொடர்ந்தால் ஆண்டுக்கு 14.2 மில்லியன் சிறுமிகளுக்கு குழந்தை திருமணம் நடக்கும் அல்லது தினமும் 39 ஆயிரம் சிறுமிகளுக்கு திருமணம் நடைபெறும்.

வளர்ந்து வரும் நாடுகளில் இளைஞர் சமுதாயத்தின் எண்ணிக்கை பெருகிவருவதால் குழந்தை திருமண எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

இது குறித்து ஐ.நா. மக்கள் தொகை நிதியத்தின் தலைவர் பாபாடுண்டே ஒசோடிமெஹின் கூறுகையில், குழந்தை திருமணம் என்பது மனித உரிமை மீறலாகும். சிறுமியாக இருக்கையில் திருமணம் செய்து கொடுத்தால் அவரின் திறமைகள் வெளிப்படாமலேயே போகும். இளம் வயதில் திருமணமாகும் சிறுமிகள் கணவரால் கொடுமைக்கு ஆளாக்கப்படுகின்றனர்.

15 தொடக்கம் 19 வயது வரை உள்ள சிறுமிகள் கர்ப்பம் மற்றும் பிரசவத்தின்போது ஏற்படும் பிரச்சனைகளால்தான் அதிகம் இறக்கின்றனர். அதுவே சரியான வயதில் திருமணம் செய்து சிறிது காலம் கழித்து குழந்தை பெறும் பெண்கள் ஆரோக்கியமாக உள்ளனர் என்று உலக சுகாதார அமைப்பு அதிகாரி பிலாவியா பஸ்ட்ரியோ தெரிவித்துள்ளார்.

குழந்தை திருமண பிரச்சினையை உடனே கவனிக்காவிட்டால் எதிர்வரும் 2015 ஆம் ஆண்டுக்குள் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதத்தை குறைப்பது மற்றும் பிரசவ மரணத்தை வெகுவாகக் குறைக்கும் ஐ.நாவின் குறிக்கோள்கள் தோல்வியடையும்.

தெற்கு ஆசியா மற்றும் வட ஆபிரிக்க நாடுகளில்தான் அதிக அளவில் குழந்தை திருமணம் நடக்கிறது. உலக அளவில் குழந்தை திருமணங்கள் அதிகம் நடக்கும் 10 நாடுகளின் விபரங்கள் வருமாறு,

நைஜர் - 75 சதவீதம், சாட் மற்றும் மத்திய ஆபிரிக்கா - 68 சதவீதம், வங்கதேசம் - 66 சதவீதம், கினியா - 63 சதவீதம், மொசாம்பிக் - 56 சதவீதம், மாலி - 55 சதவீதம், புர்கினா பாசோ மற்றும் தெற்கு சூடான் - 52 சதவீதம், மாளவி - 50 சதவீதம் ஆகும் என கூறினார். (அ-2)

# ஆப்கானில் குண்டுவெடிப்பு; 8 குழந்தைகள் உயிரிழப்பு

கிழக்கு ஆப்கானிஸ்தானின் கோஸ்ட் மாகாணத்தில் நேற்று நிகழ்த்தப்பட்ட தற்கொலை படைத் தாக்குதலில் 8 குழந்தைகள் உட்பட 9 பேர் பலியானதோடு மேலும் 10 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள பன்னாட்டு படைகளை குறிவைத்து நிகழ்த்தப்பட்ட குறித்த தாக்குதலில் ஈடுபட்ட நபர் தனது உடலில் இருந்த குண்டினை வெடிக்கச் செய்ததில் 8குழந்தைகள் மற்றும் ஒரு பொலிஸார் பலியாகியதோடு மேலும் 10 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# அமெரிக்க பொருளாதாரத்தில் இந்தியாவின் தாக்கம் இருக்கிறது

## மோடி தெரிவிப்பு

அமெரிக்க பொருளாதாரத்தில் இந்தியாவின் தாக்கம் இருப்பதாக மோடி தெரிவித்துள்ளார்.

வெளிநாடு வாழ் இந்தியர்களுக்காக வீடியோ கலந்துரையாடல் மூலம் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் பேசுகையில், 19ஆம் நூற்றாண்டு ஐரோப்பிய நாடுகளுக்கு என்றால் 21ஆம் நூற்றாண்டு இந்தியாவினுடையது என்று பெருமை கொள்கிறேன்.

இந்திய நாட்டின் எதிர்கால திட்டங்களுக்கு இளைஞர்களின் பங்கு முக்கியமாக இருக்கிறது. எனவே, அவர்கள் நாட்டின் நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்கிறார்கள்.

குஜராத் மாநிலம் அதிகளவு முன்னேற்றமடைந்து வளர்ச்சிக்கு வழிகாட்டியாக இருப்பதால் மாநிலத்தின் வளர்ச்சியை அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகள் கண்காணித்து வருகின்றன. மாநிலத்தின் நிர்வாகம் உலக நாடுகளை கவர்ந்துள்ளது என்று மோடி குறிப்பிட்டுள்ளார். (அ-5)

# எகிப்து கலவரத்துடன் தொடர்புடைய 21 பேருக்கு மரண தண்டனை தீர்ப்பு

எகிப்தில் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற பிரீமியர் லீக் காற்பந்து போட்டியின்போது கலவரம் ஏற்படுத்தியதாக கைது செய்யப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட 21 பேரின் மரண தண்டனை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த மாதம் அம்மரண தண்டனை அறிவிப்பு வெளியிடப்பட்டதை தொடர்ந்து இந் நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து வன்முறை வெடித்தது.

இந்நிலையில் 21 பேரின் மரண தண்டனையை மீள் பரிசீலனை செய்த எகிப்து நீதிமன்றம் மீண்டும் இவர்களிற்கான மரண தண்டனையை உறுதி செய்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

போர்ட் செட் நகரில் நடந்த ஆட்டத்தில் எகிப்தின் முன்னணி அணிகளில் ஒன்றான அல் அலி கழக அணியை உள்ளூரைச் சேர்ந்த அல் மஸ்ரி அணி வீழ்த்தியது.

இந்த வெற்றிக் கொண்டாட்டத்தின்போது இரு தரப்பு ரசிகர்களுக்குமிடையே ஏற்பட்ட மோதலில் 70இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

எகிப்து காற்பந்து வரலாற்றில் நடந்த மிக மோசமான இந்த வன்முறை தொடர்பாக பலர் கைது செய்யப்பட்டனர். கடந்த மாதம் 21 ஆம் திகதி இவ் வழக்கை விசாரித்த நீதிமன்றம் 21 பேருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

இதையடுத்து இந்த தீர்ப்புக்கு எதிராக போர்ட் செட் நகரில் நடந்த போராட்டத்தில் வன்முறை வெடித்தது. பொலிஸ் தடியடி மற்றும் துப்பாக்கி சூட்டில் பலர் உயிரிழந்தனர். பின்னர் அங்கு இராணுவம் குவிக்கப்பட்டு நிலைமை கட்டுப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் 21 பேரின் மரண தண்டனைக்கு எதிரான மனுவை விசாரித்த எகிப்து நீதிமன்றம் மரண தண்டனையை நேற்று மீண்டும் உறுதி செய்து அதிரடி தீர்ப்பு வழங்கியது.

மேலும் காற்பந்து கலவரத்துடன் தொடர்புபட்ட 5 பேருக்கு ஆயுள் தண்டனையும் நகரின் முன்னாள் பாதுகாப்புத்துறை தலைவர் எஸ்ஸாம் சன்மார்க், பொலிஸ் உயர் அதிகாரி உள்ளிட்ட 10 பேருக்கு தலா 15 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர 6 பேருக்கு தலா 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், 2 பேருக்கு 5 ஆண்டு சிறையும், ஒருவருக்கு 12 மாத சிறை தண்டனையும் விதித்து நீதிபதி தீர்ப்பு அளித்தார்.

இவ்வழக்கில் 28 பேர் விடுதலை செய்யப்பட்டனர். மேலும் இந்த தீர்ப்பையடுத்து மீண்டும் கலவரம் ஏற்படாமல் தடுப்பதற்காக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-5)


# சிறையிலிருந்து மீண்டது ஐ.நா. அமைதிக்குழு

சிரியப் போராளிகளால் கடந்த வாரமளவில் சிறை பிடிக்கப்பட்ட ஐ.நா. அமைதிக்குழு உறுப்பினர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் அசாத்தின் அரசை எதிர்த்து கிளர்ச்சியாளர்கள் போரிட்டு வருவது தீவிரமடைந்து வரும் நிலையில் இதன் தொடர்ச்சியாக கடந்த 6 ஆம் திகதி புதன்கிழமை சிரியாவிற்கு சென்ற ஐ.நா. அமைதிக் குழுவைச் சேர்ந்த 30 பேரில் 21 பேர் சிரியப் போராளிகளால் சிறை பிடிக்கப்பட்டனர்.

இவர்களை விடுவிக்கக் கோரி பேச்சுவார்த்தை நடந்து வந்தது. இதைத் தொடர்ந்து சிரிய ஜனாதிபதி பஷார் அசாத்துக்கு உலகளவில் கிடைத்த எதிர்மறை விளம்பரத்தால் பணயக் கைதிகள் 21 பேரையும் கிளர்ச்சியாளர்கள் நேற்று முன்தினம் விடுவித்தனர்.

அவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் மதியம் சிரியாவிலிருந்து ஜோர்டான் நாட்டுக்குப் பத்திரமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (அ-5)



ஆப்கானிஸ்தானின் ஜலாலாபாத்துக்கு வந்த அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் சக்ஹெலவை வரவேற்கப் படுவதைப் படத்தில் காணலாம்.

# நெல்சன் மண்டேலா மருத்துவமனையில்

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா சிகிச்சைகாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

இவர் தென்னாபிரிக்க அரசின் இனவெறிக் கொள்கைக்கு எதிராகப் போராடியவர்.

இவர் பித்தப்பை மற்றும் நுரையீரல் தொற்று போன்ற பிரச்சினைகளுக்காக கடந்த மாதம் சிகிச்சை மேற்கொண்டுள்ளார்.

தற்பொழுது மீண்டும் நேற்று முன்தினம் பிரிட்டோரியாவில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து பிரதமர் மாளிகையின் தகவல் அதிகாரி மாக் மகராஜ் கூறுகையில், வயதின் காரணமாக மருத்துவ சிகிச்சைக்குப்பின்னர் நடைபெறும் சாதாரண பரிசோதனைகளுக்காகவே மண்டேலா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (அ-2)

# 28 இந்திய மாலுமிகள் விடுவிக்கப்பட்டனர்

(மும்பை)

சோமாலிய கடற் கொள்ளையர்களால் கடத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 37 இந்திய மாலுமிகளில் 28 பேர் விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு மார்ச் மாதம் சோமாலிய கடற் பகுதியில் சென்று கொண்டிருந்த ரோயல் க்ரேஸ் என்ற வர்த்தகக் கப்பலும் மே மாதம் சிமிரினி என்ற வர்த்தக கப்பலும் சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டது. இந்த இரு கப்பல்களிலும் 28 இந்திய மாலுமிகள் இருந்தனர். அவர்களை மீட்க மத்திய அரசு பேச்சுவார்ததை நடத்தி வந்தது.

இந்நிலையில் ஓராண்டுக்குப் பின்னர் இந்திய மாலுமிகள் 28 பேரையும் கடற்கொள்ளையர்கள் விடுதலை செய்தனர். ஆனால் அவர்கள் இன்னும் பாதுகாப்பு பகுதிக்கு வந்து சேரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. கப்பல் துறை, வெளியுறவுத்துறை, உள்துறை மற்றும் கப்பல்துறை இயக்குநர் மற்றும் முக்கிய நிறுவனங்களும் இணைந்து மேற்கொண்ட முயற்சிகள் காரணமாக இரண்டு கப்பல்களும் வெள்ளிக்கிழமை விடுவிக்கப்படும் என்றும் இந்த வாரமளவில் இரு கப்பல்களும் இந்தியா வந்து சேரும் என்றும் கப்பற்துறை அமைச்சர் ஜி.கே.வாசன் அறிவித்திருந்தார்.

இதேவேளை மேலும் 9 இந்திய மாலுமிகள் கடற்கொள்ளையர்களின் பிடியில் இருப்பதாகவும் அவர்களை பாதுகாப்பாக மீட்டு வர அரசு முயற்சி மேற்கொண்டு வருவதாகவும் வாசன் தெரிவித்துள்ளார். (அ-5)

# ஒபாமாவின் அண்ணனுக்கு பன்னிரண்டு மனைவிகளாம்

கென்யா நாட்டிற்கு ஜனாதிபதியாக வருவதே எனது இலட்சியம் என ஒபாமாவின் சகோதரர் மாலிக் ஒபாமா கூறியுள்ளார்.

ஒபாமா அண்ணன் மாலிக் ஒபாமா, சமீபத்தில் கென்யாவின் சியாயா பகுதி ஆளுநர் போட்டியில் தோல்வி அடைந்தார். இருப்பினும் தனது தம்பியான ஒபாமாவைப் போல நிச்சயம் ஒருநாள் கென்யாவிற்கு ஜனாதிபதி ஆக வருவேன் என உறுதி கூறுகின்றார்.

மாலிக் ஒபாமாவிற்கு 12 மனைவிகள் என்பதும் சமீபத்தில் 17 வயது பெண்ணொருவரை திருமணம் முடித்துக்கொண்டதாகவும் தன்னை மாலிக் தினசரி அடித்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டி கொடுமைப்படுத்துவதாக அப்பெண்மணி குற்றம் சாட்டியுள்ளார்.



இதேவேளையில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் மனைவி மிச்சேல்மிகவும் அருமையான பெண் என்று மாலிக் ஒபாமா கூறுகிறார்.

அண்ணன், தம்பி இருவரும் அடிக்கடி கையடக்க தொலைபேசியில் தங்களது உறவை பரிமாறிக் கொள்வதாகவும் வருடத்திற்கு ஒருமுறை வோஷிங்டன் சென்று ஒபாமாவை சந்தித்து வருவதாகவும் தகவல் வெளியாகியிருக்கிறது. (அ-2)

# நெரிசலில் சிக்கி பக்தர்கள் பலி

உத்தரப் பிரதேச மாநிலத்தில், சிவராத்திரி விழா நெரிசலில் சிக்கி இரண்டு பக்தர்கள் பலியாகினர். பாரபங்கி என்ற இடத்தில் உள்ள சிவன் கோவிலில் சிவராத்திரியை முன்னிட்டு ஏராளமான பக்தர்கள் இந்தக் கோவிலில் திரண்டுள்ளனர். அப்போது பக்தர்களுக்கு வழங்கப்பட்ட தீர்த்தத்தைப் பெறுவதற்காக அனைவரும் முண்டியடித்துச் சென்றுள்ளனர். இந்த நெரிசலில் சிக்கிய இருவர் சம்பவ இடத்திலேயே மூச்சுத் திணறிப் பலியாகினர். மேலும் காயமடைந்த பலர் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணுற அடுக்கிய விறகின் வெண்தணல்
நுண்ணிய தீ புகில் ஒன்றும் இல்லையாம்.
~ திருநாவுக்கரசர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஊடகத்துறைக்குள் இருக்கும் ஒற்றர்கள் விசாரிக்கப்பட வேண்டும்

வலம்புரியின் அலுவலகச் செய்தியாளர் உதயராசா சாளின் இனந்தெரியாத ஆறு பேர் கொண்ட குழுவால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவது தெரிந்ததே.

அடிகாயத்தின் தாக்கம் காரணமாக அவர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நிலையில்,

தாக்கப்பட்ட சம்பவத்திற்கு விசமத்தனமான காரணம் கற்பிக்கும் முயற்சியில் சிலர் ஈடுபட்டுள்ளனர்.

இத்தகைய முயற்சிகள் போக்கிலித்தனமானவை. வலம்புரியின் உயிரைக் குடிப்பதற்கு பகீரத முயற்சி செய்து அது முடியாது என்று தோற்றுப் போனவர்கள்,

தமக்கு விழுகின்ற அடியில் தமிழ்த் தேசிய சாயத்தைப் பூசி, தாங்கள்தான் தமிழ்த் தேசியத்திற்காக குரல் கொடுப்பதாக பிரசாரமும் செய்கின்றனர்.

என்ன செய்வது! அப்பாவித் தமிழ் மக்களில் சிலர் அதனை நம்பினர்.

ஆனால், வலம்புரியை வேடதாரிகள் யாரும் அசைக்கவும் முடியாது. அரக்கவும் முடியாது.

சாவினைத் தோள் மீது நாங்கள் சுமப்போம். சாவிற்கும் அஞ்சாமல் சாவினுள் வாழ்வோம் என்று ஒரு கவிஞன் பாடினானே! அந்தத் துணிவோடு போக்கிலிகளை –அவர்களின் அநியாயங்களை கத்தைகத்தையாக எழுதிக் குவிப்போம்.

நாங்கள் அஞ்சப் போவதில்லை. ஒரு செய்தியாளன் வீதியில் வைத்துத் தாக்கப்படுகின்றான்.

ஆறு பேர் கொண்ட குழுவின் அடியில் அவன் வீழ்ந்து கிடக்கின்றான்.

இதே செய்தியாளன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தை பொலிஸார் அடக்க முற்பட்டபோது,

அதன் நிகழ்வுகளை புகைப்படமாக்குகையில் தாக்கப்படுகின்றான். நிலத்தில் வீழ்த்தி அறையப்படுகின்றான்.

இவையெல்லாம் அறியப்பட்டிருந்தும் செய்தியாளர் சாளின் தாக்கப்பட்டதற்கு இயற்றல் காரணம் கூறுகின்றவர்கள் இருப்பார்களாயின், அவர்கள் முதலில் விசாரிக்கப்பட வேண்டும்.

இந்த விசாரணை அவசியமும் அவசரமும் ஆகும்.

ஏனெனில் இவர்கள் செய்தியாளர்கள் என்ற பெயரில் ஊடகத்துறைக்குள் ஊடுருவியுள்ள ஒற்றர்கள்.

செய்தியாளர் தாக்கப்பட்டவுடன் அதற்கான காரணத்தை ஒருவர் கூறுவாராக இருந்தால் அவர் யாராக இருக்க முடியும்? எனவே இத்தகையவர்கள் தகுந்த முறையில் விசாரிக்கப்பட வேண்டும்.

வலம்புரிச் செய்தியாளர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் யார் யாரை விசாரிக்க வேண்டும் என்பதை யாழ்ப்பாணப் பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் வலம்புரி எடுத்துக் கூறவுள்ளது. அதேநேரம் ஏற்கெனவே யாழ்ப்பாணத்தில் பத்திரிகைத் துறையில் பணியாற்றுகின்றவர்கள் தாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் ஒரு விரிவான விசாரணை முன்னெடுக்கப்படுமாக இருந்தால் பல திடுக்கிடும் உண்மைகள் வெளிவரும்.

சிலவேளைகளில் தமது இலாப நோக்கம் கருதிய தாக்குதல்களாகவும் அவை இருக்கலாம் என்ற அதிர்ச்சித் தகவல்களுக்கும் இடம் உண்டு.

இது தொடர்பில் வலம்புரி தொடர்ந்தும் குரல் கொடுக்கும். தாக்கப்பட்டவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள்; அவர்களுக்கு கிடைத்த நிவாரணங்கள் தொடர்பான பேட்டிகளும் தயாராகிக் கொண்டு இருக்கின்றன.

# சுப்பிரமணிய சுவாமியின் பேச்சை அமெரிக்கா கணக்கில் எடுக்காது

## மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

ஈழத்தமிழர் பிரச்சினையில் தலையிடுவதற்கு இந்திய ஜனதாக் கட்சியின் தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமிக்கு மக்கள் வழங்கிய ஆணை என்ன? தரகு அரசியல் செய்யும் இவரது பேச்சை அமெரிக்கா ஒரு பொருட்டாக கருதாது.

அத்துடன் இலங்கை தொடர்பில் அமெரிக்கா தனது கொள்கையையும் மாற்றிக்கொள்ளாது என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இலங்கை மீது கொண்டு வரப்படவுள்ள பிரேரணை தொடர்பில் அரசாங்கத்துடன் அமெரிக்கா பேச்சு நடத்தி ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்று இந்திய ஜனதாக் கட்சியின் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி அமெரிக்காவிடம் வலியுறுத்தியிருந்தார்.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனிதவுரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை அரசாங்கமே விசாரணை நடத்த வேண்டும் என்றும் சர்வதேசத்தால் நியமிக்கப்படும் குழுவினால் விசாரணை நடத்தப்பட முடியாது என்றும் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்திருந்தார்.

இந் நிலையில் சுப்பிரமணிய சுவாமியின் இலங்கை மற்றும் அமெரிக்க விஜயம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள போதே மனோ கணேசன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, இந்திய ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமியின் இலங்கை விஜயமே எமக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. சில வேளைகளில் இந்திய அரசின் ஏவலை ஏற்று அவர் இலங்கை வந்திருக்கலாம். ஆனால் இங்கு வந்து இலங்கை அரசாங்கத்தின் ஏவலை ஏற்று அமெரிக்கா சென்றுள்ளார். இவ்வாறு ஏவல் அரசியல் செய்பவரே இந்த சுப்பிரமணிய சுவாமி.

ஈழத்தமிழர் பிரச்சினையில் தலையிடுவதற்கு இவருக்கு மக்கள் வழங்கிய ஆணை என்ன? 50 வாக்குகளைக் கூட பெற்றுக்கொள்ள முடியாத ஒரு அரசியல்வாதிதான் இவர்.

கடந்த பல மாதங் களுக்கு முன்னர் சுப்பிரமணிய சுவாமி இலங்கை வந்திருந்த போது விடுதலை புலிகளின் மீதுள்ள எதிர்ப்பை அடிப்படை யாகக் கொண்டு ஈழத்தமிழர்கள் பிரச் சினையை அணுக வேண்டாம் என்று நான் அவரிடம் கூறினேன்.

இதை ஏற்றுக்கொண்ட அவர், தமிழர் பிரச்சினைக்குதீர்வுகாணதாம்ஒத்துழைப்பு வழங்குவார் என்று கூறினார்.

ஆனால் இப்போ அதை மறந்து தரகு அரசியல் செய்துகொண்டிருக்கிறார் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

### மாணவர்களின் உண்ணாவிரதம்

## டெசோ அமைப்புச் சென்றதால் கொதித்தெழுந்தனர் உணர்வாளர்கள்

(சென்னை)

இலங்கை இனப்படுகொலையைக் குறித்து சர்வதேச விசாரணை கோரியும் தமிழீழத்திற்கான பொது வாக்கெடுப்பு நடத்தக் கோரியும் லயோலா கல்லூரி மாணவர்கள் மேற்கொண்டு வரும் கால வரையற்ற உண்ணா விரதம் மூன்றாவது நாளாக தொடர்கிறது.

நேற்று சற்று சோர்வடைந்த நிலையில் மாணவர்கள் காணப்பட்டனர். மேலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலாளர் டி.ராஜா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய கட்டுப்பாட்டுக் குழுத்தலைவர் ஆர்.நல்லகண்ணு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் நாடு மாநிலக் குழுவின் துணைச் செயலாளர் தோழர் சி.மகேந்திரன், காந்திய மக்கள் இயக்க நிறுவுனர் தமிழருவி மணியன், இயக்குநர் களஞ்சியம் ஆகியோர் அங்கு சென்று மாணவர்களுக்கு ஆதரவுகளை தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து டெசோ அமைப்பின் உறுப்பினர்களான விடுதலை சிறுத்தைகள் திருமாவளவன், வன்னி அரசு, சுப.வீரபாண்டியன், தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் இளங்கோவன் மற்றும் பல உறுப்பினர்கள் அங்கு சென்றனர்.

மாணவர்கள் இருக்கும் மேடைக்குச் சென்ற சுப.வீரபாண்டியன், மாணவர்களிடத்தில் உண்ணாவிரத கோரிக்கையை மாற்றியமைக்குமாறு வேண்டுகோள் விடுத்தார். இதனை அறிந்த உணர்வாளர்கள் அவருக்கு எதிராக கோசங்களை எழுப்பினர்.

இந்தியாவின் கைக்கூலிகளே வெளியேறு! தமிழனத் துரோகிகளே வெளியேறு! சோனியாவின் கைப் பொம்மைகளே வெளியேறு! என்று அவர்கள் கோசங்கள் இருந்தன.

அவர்கள் சுப.வீரபாண்டியனைத் தான் எதிர்த்து கோஷம் போட்டார்கள். ஆனால் ஆத்திரமடைந்த சுப.வீரபாண்டியனோடு வந்த சிலர் அங்கிருந்த உணர்வாளர்கள் மற்றும் மாணவர்கள் மீது அடிக்கச் சென்றதால் அவர்களுக்கிடையே தள்ளுமுள்ளும் கைகலப்பும் ஏற்பட்டது. (எ-11)

## குருமன்காடு காளிகோவில் வீதி மக்களால் புனரமைக்கப்படுகிறது

(வவுனியா)

வவுனியா நகரசபை எல்லைக்குட்பட்ட காளிகோவில் வீதி அப்பகுதி மக்களால் புனரமைக்கப்படுகின்றது. இது தொடர்பாக தெரிய வருவதாவது,

வவுனியா நகரசபை எல்லைக் குட்பட்ட குருமன்காடு காளிகோவில் வீதியானது திருநாவற்குளம், புதுக்குளம், மரக்காரம்பளை, கிடாச்சூரி, தரணிக்குளம், கல்மடு உள்ளிட்ட பல கிராமங்களுக்கான பிரதான பஸ் போக்குவரத்துப் பாதையாக விளங்குகின்ற அதேவேளை பாடசாலை மாணவர்களும் தொழிலுக்கு செல்வோரும் தினமும் பயன்படுத்துகின்ற பாதையாகும்.

இப்பாதையானது ஒரே குன்றும் குழியுமாக காணப்படுவதால் தினமும் சிறுசிறு விபத்துக்கள் இடம்பெற்று வந்துள்ளது.

இதனால் இவ்வீதியை உடனடியாக புனரமைக்குமாறு வவுனியா நகர சபையிடம் பல தடவை தெரிவித்த போதும் இன்றுவரை புனரமைக்கப்படாமையால் அக்கிராமத்தைச் சேர்ந்த மக்கள் அவ்வீதியினை புனரமைத்துள்ளனர். நகரசபை புனரமைக்காமையால் அதிருப்தியடைந்த அப்பகுதி மக்கள் எமது வீதியை நாமே பாதுகாப்போம் எனக் கூறி புனரமைக்கின்றனர். (அ-2,250)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### செயலின் பிரிவுகள்



உடலியக்கத்தால் இயற்கையாக எழும் துன்பங்களைப் போக்கிக் கொள்ள உணவு, உடை, வீடு வாழ்க்கைத் துணை இவைகள் ஒவ்வொருவருக்கும் தேவைப்படுகின்றன.

இந்தத் தேவைகளைத் தேட, பெற, வைத்திருக்க, அனுபோகிக்க பிறர்க்களித்து உதவ, ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமையுண்டு.

இயற்கையான இந்த உரிமையின் அடிப்படையில் மனிதனின் உடல் வலிவு, அறிவாற்றல் என்ற இருவகையும் பயன்படுத்துகின்றன. இவ்வாறு பயன்படுத்தும் முறையை பொதுவாகச் செயல் என்று சொல்கிறோம்.

மனிதனுடைய செயல் அதற்கு உரிய நோக்கங்களைக் கொண்டு பிரிக்கப்பட்டதில் அவை தொழில், கடமை, தியாகம், தொண்டு என நான்கு வகையாகி விட்டன.

தன் உடலில் இன்பம்,பணம், பாசம், என்ற மூவகை குறிக்கோள்களைக் கொண்டு ஒருவர் புரியும் செயல் தொழில் எனப்படும்.

தான் வாழ்வதற்காக உதவியுள்ள சமுதாயத்திற்கு பிரதிபலனாக ஒவ்வொருவரும் கட்டாயமாகச் செய்ய வேண்டியவை என்று வாழ்க்கை அனுபவத்தில் தேர்ந்த அறிஞர்களால் வரையறுத்துக் கூறப்பட்ட, உடல், குடும்பம், பந்து, ஊர், தேசம், உலகம் என்று அறுவகை நலன்களுக்காகவும் புரிய வேண்டிய செயல்கள் கடமை எனப்படும்.

குறிப்பிட்ட ஒரு நோக்கத்திற்காகவோ, ஒரு மனிதனுக்காகவோ மனிதக்குழு ஒன்றிற்காகவோ, உணர்ச்சி வயப்பட்டுத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் செயல் தியாகம் என்று சொல்லப்படும்.

இயற்கை நிலையினையும், எண்ணத்தின் நிலையினையும் இன்ப துன்ப இயல்பினையும் அறிந்த பேரறிவின் எல்லையில் நிலைத்து தான் தனது என்று குறுகி நிற்கும் எல்லையைக் கடந்து தன்னை உலக மக்களின் வாழ்வின் நலத்திற்காகவே அர்ப்பணித்து எண்ணம், சொல், செயல் என்ற மூன்று வித ஆற்றல்களைப் பயன்படுத்தும் பெரு நோக்கச் செயல் தொண்டு என்று மிகவும் சிறப்பாகக் கருதப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈ.டீ.எஸ்.வி.க. இளைஞர் கழகத்துடன் இணைந்து நடத்தும் கிரிக்கெட் போட்டி

(மானிப்பாய்)

ஈ.டீ.எஸ். விளையாட்டுக்கழகம் சண்டிலிப்பாய் இளைஞர் கழகத்துடன் இணைந்து நடத்தும் அணிக்கு 9 பேர் பங்குபற்றும் 12 பந்துப்பரிமாற்றம் கொண்ட லீக் முறையிலான துடுப்பாட்ட சுற்றுப்போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இதன் முதல் போட்டியில் உடுவில் சலஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து களமிறங்கிய விக்டோரியன்ஸ் விளையாட்டுக்கழகம் 29 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய விக்டோரியன்ஸ் விளையாட்டுக் கழகம் 8 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் விக்டோரியா விளையாட்டுக்கழகம் சார்பாக அதிகபட்ச ஓட்டங்களாக யசிந்தன் 23 ஓட்டங்களையும் வீசி 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் உடுவில் சலஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் சார்பில் ரஹீம், பிரியந்தன் தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 69 என்னும் இலக்கு நோக்கி துடுப்பெடுத்தாடிய உடுவில் சலஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் 39 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்து தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் உடுவில் சலஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் சார்பில் பிரியந்தன் 14 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் விக்டோரியன்ஸ் விளையாட்டுக்கழகம் சார்பாக பிரதீப் 12 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளைக் கைப்பற்றினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக விக்டோரியன்ஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த யசிந்தன் தெரிவானார்.2ஆவது போட்டியில் ஏ.பி விளையாட்டு க்கழகத்தை எதிர்த்து விக்டோரியன்ஸ் விளை யாட்டுக்கழகம் மோதியது. இப்போட்டியில் 29 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஏ.பி.விளையாட் டுக்கழக அணி வெற்றிபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்படுத்தாடிய ஏ.பி விளையாட்டுக்கழகம் சகல இலக்குகளையும் இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் ஏ.பி.விளையாட்டுக்கழகம் சார்பாக ரஜீ 25 ஓட்டங்களையும் சாஜித் 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் உடுவில் சலஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் சார்பில் ராஜ் 2 இலக்கினைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 80 என்னும் இலக்கு நோக்கி துடுப்பெடுத்தாடிய உடுவில் சலஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் 50 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்து தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் உடுவில் சலஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் சார்பில் இன்பராஜ் 22 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் ஏ.பி.விளையாட்டுக்கழகம் சார்பாக ஜனுதாஸ் 4 இலக்குகளைக் கைப்பற்றினார். இப்போட்டியின் ஆட்டநாயகனாக ஏ.பி.விளையாட்டுக் கழகத்தை சேர்ந்த றஜீ தெரிவானார்.

3ஆவது போட்டியில் பிரம்படி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து களமிறங்கிய உடுவில் சலஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் 14 ஓட்டங்கள் மேலதிகமாகப் பெற்று வெற்றியை தனதாக்கிக்கொண்டது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய உடுவில் சலஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் 7 இலக்குகளை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் உடுவில் சலஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் சார்பாக ஜஸ்டீன் 21 ஓட்டங்களையும் திவாகர் 13 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் பிரம்படி விளையாட்டுக்கழகம் சார்பில் மயூரன் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 77 என்னும் இலக்கு நோக்கி துடுப்பெடுத்தாடிய பிரம்படி விளையாட்டுக் கழகம் 62 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்து தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் பிரம்படி விளையாட்டுக் கழகம் சார்பில் கஜன் 10 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் உடுவில் சலஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் சார்பாக திவாகர் 2 இலக்குகளைக் கைப்பற்றினார். 3 ஆவது போட்டியின் ஆட்டநாயகனாக உடுவில் சலஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகத்தை சேர்ந்த திவாகர் தெரிவானார். (அ-5-23)

# குருதி வழங்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

A நெக்கெற்றிவ் நோயாளிகள் நோயாளர் விடுதியில் தங்கியிருப்பதால் அவர்களுக்கு வழங்குவதற்கு இரத்த வங்கியில் அவ்வகை குருதி வகைக்கு தட்டுப்பாடு நிலவுவதால் வழங்க முடியாதுள்ளது.

எனவே, இவ்வகை குருதியுடைய குருதிக் கொடையாளர்கள் உடனடியாக இரத்த வங்கிக்கு சமுகம் கொடுத்து இரத்ததானம் செய்து உயிரைக்காப்பாற்ற முன்வர வேண்டுமென யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் வைத்திய பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (அ-3)

# தாச்சிச் சுற்றுப்போட்டி

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டு சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் தாச்சிச் சுற்றுப் போட்டிகள் கடந்த 3 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் நேற்று முன்தினம் இணுவில் அண்ணா விளையாட்டுக்கழகத்தை எதிர்கொண்டு களமிறங்கிய மானிப்பாய் வெஸ்ரொம் விளையாட்டுக்கழகம் 8:5 என்ற புள்ளி வித்தியாசத்தில் வெற்றி கொண்டு அடுத்த சுற்றிற்கு தெரிவாகியுள்ளது.

இன்றைய 5 ஆம் நாள் தாச்சிப் போட்டியில் இரவு 8 மணிக்கு சண்டிலிப்பாய் உதயதலியார் விளையாட்டுக் கழகத்தை எதிர்கொண்டு புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகம் தாச்சிக்கோடு களமிறங்கவுள்ளது.

இதேவேளை, நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த அளவெட்டி பாரதி விளையாட்டுக்கழககத்திற்கும் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக்கழகத்திற்கும் இடையிலான போட்டி இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ளது. (அ-5)

# 60 ஓட்டங்களால் வெற்றிபெற்றது பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிக்குமிடையிலான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட போட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி 60 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன் அடிப்படையில் துடுப்பாட களமிறங்கிய பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி 47.4 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 192 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி சார்பில் அதிகூடிய ஓட்டங்களாக டிவாகர் 4 நான்குகள் அடங்கலாக 53 ஓட்டங்களையும் இந்திரஜித் 3 ஆறுகள் , 3 நான்குகள் அடங்கலாக 42 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சார்பில் டில்ஷான் 9.1 பந்து பரிமாற்றங்களில் 34 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை கைப்பற்றினார்.

பதிலுக்கு 193 எனும் வெற்றியிலக்கு நோக்கி துடுப்பாடக் களமிறங்கிய மானிப்பாய் இந்துக் கல்லூரி சகல இலக்குகளையும் இழந்த நிலையில் 132 ஓட்டங்களையே பெற்றிருந்தது. துடுப்பாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சார்பில் அதிகூடிய ஓட்டங்களாக பிரதீபன் 2 ஆறுகள் , 3 நான்குகள் அடங்கலாக 38 ஓட்டங்களையும் சேந்தன் 29 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி சார்பில் அஸ்மி 22 ஓட்டங்களுக்கு 5 இலக்குக ளையும் ஜிவிதாஸ் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் சகல துறை ஆட்ட வீரராகவும் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அணியின் டிவாகர் சிறந்த களத்தடுப்பாட்டக்காரராக மானிப்பாய் இந்துக் கல்லூரி வீரன் சஜீவன், சிறந்த பந்து வீச்சாளராகவும் போட்டியின் சிறப்பாட்டக்காரராகவும் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி வீரன் அஸ்மி ஆகியோர் தெரிவாகினர். மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் ஆ.சிவனேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக விளையாட்டுத்துறை இணைப்பாளர் நா. எதிர்வீரசிங்கம் கலந்து கொண்டார்.. வீரர்களுக்கான பரிசில்களை பிரதம விருந்தினர் வழங்கி வைத்தார். (அ-23)

## கரப்பந்தாட்ட போட்டியில்
# சண்டிலிப்பாய் இந்துவின் வசமானது வெற்றிக்கிண்ணம்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்ற ஆண்களிற்கான காற்பந்தாட்டப் போட்டியில் இறுதிப் போட்டிகளில் 3 பிரிவுகளின் வெற்றிக் கிண்ணத்தையும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி தனதாக்கி கொண்டது.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்ற 15 வயது பிரிவினருக்கு இடையேயான போட்டியில் இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியை எதிர்த்தாடிய சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 2:0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தை அபகரித்துக் கொண்டது.

இப்போட்டியில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலை 3 ஆம் இடம் வரையில் முன்னேறியது.

17 வயதுப் பிரிவிற்கான கரப்பந்தாட்ட போட்டியிலும் புனித கென்றியரசர் கல்லூரியை எதிர்த்தாடிய சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 2:1 என்ற புள்ளி வித்தியாசத்தில் புனித கென்றியரசர் கல்லூரியை பின்தள்ளி வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

இப்போட்டியிலும் ஆனைக்கோட்டை பாலசுப்பிர மணியம் வித்தியாசாலை 3 ஆம் இடம் வரையும் முன்னேறி நகர்ந்தது.19 வயது பிரிவிற்கான இறுதிப் போட்டியில் மாதகல் புனித ஜோசப் மகா வித்தியாலயத்தை எதிர்த்தாடிய சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 2:0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று வெற்றி அணியாக கிண்ணத்தை கைப்பற்றியது.

இப்போட்டியிலும் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலை 3 ஆம் இடமாகத் தெரிவு செய்யப்பட்டது. (அ-5-23)






வடமராட்சி வலயக்கல்வி பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான 17 வயது வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டி அண்மையில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் முதலாம் இடத்தை [illegible] மகளிர் கல்லூரி அணியினரையும் இரண்டாம் இடத்தை பெற்ற பருத்தித்துறை மெதடிஸ்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது டெஸ்ட்

# போராடுகிறது பங்களாதேஷ் அஷ்ரபுல், ரஹீம் சதம்



இலங்கை - பங்களாதேஷ் அணிகள் மோதும் முதலாவது டெஸ்ட் போட்டி காலியில் நடைபெற்று வருகிறது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று தமது முதல் இன்னிஸ்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 570 ஓட்டங்களைக் குவித்து தனது ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

இலங்கையின் துடுப்பாட்டத்தில் திரிமன்னே, சண்டிமல் ஆகியோர் ஆட்டமிழக்காமல் 155, 116 ஓட்டங்களையும், குமார் சங்கக்கார 142 ஓட்டங்களையும் எடுத்தனர்.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்ஸுக்காக ஆடிய பங்களாதேஷ் அணி நேற்று முன்தினம் 2-ம் நாள் ஆட்டநேர முடிவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்களை எடுத்திருந்தது.

களத்தில் மொஹமட் அஷ்ரபுல் 65 ஓட்டங்களுடனும், மொமினுல் ஹேக் 35 ஓட்டங்களுடன் இருந்தனர்.

போட்டியின் 3-ம் நாளான நேற்றைய தினம் தமது இன்னிங்ஸை தொடர்ந்த பங்களாதேஷ் அணி, தமது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

எனினும் அணி 170 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது மொமினுல் ஹேக் 55 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து வந்த மகமதுல்லா ஓட்டம் எதுவும் எடுக்காமல் அணியின் எண்ணிக்கை 177 இருந்த போது ஆட்டமிழக்க,


தொடர்ந்து களமிறங்கிய அணித்தலைவர் முஷ்பிகுர் ரஹீம் களத்தில் நின்ற மொகமட் அஷ்ரபுல்லுடன் இணைந்தார்.

இருவரும் இணைந்து இலங்கை பந்துவீச்சாளர்களின் பந்துவீச்சை நேர்த்தியாக எதிர்கொண்டு துடுப்பெடுத்தாடினர்.

தொடர்ந்தும் சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய இருவரில் மொஹமட் அஷ்ரபுல் தமது 6-வது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இவர் அடித்த 6 சதங்களில் 5 சதங் கள் இலங்கை அணிக்கு எதிரானது என்பது குறிப்பிடத்தக்கது.

இவரைத் தொடர்ந்து அணித்தலைவர் முஷ்பிகுர் ரஹீமும் டெஸ்ட் போட்டிகளில் தமது 2-வது சதத்தைப் பூர்த்தி செய்தார்.




இவர்கள் இருவரினதும் சிறப்பான ஆட்டத்தின் காரணமாக நேற்றைய ஆட்ட நேரம் முடிவுக்கு வந்த போது பங்களாதேஷ் அணி 4 விக்கெட்டுக்களை மாத்திரமே இழந்து 438 ஓட்டங்களை எடுத்தது.

மொஹமட் அஷ்ரபுல் 189 ஓட்டங்களுடனும், முஷ்பிகுர் ரஹீம் 152 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் இலங்கை சார்பில் மென்டிஸ், ஹேரத், குலசேகர, எரங்க ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். போட்டியின் 4-ம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# பாகிஸ்தானை வீழ்த்தியது தென்னாபிரிக்கா



தென்னாபிரிக்க - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் போட்டியில் தென்னாபிரிக்க அணி 125 ஓட்டங்களால் இலகுவாக வெற்றி பெற்றுள்ளது.

தென்னாபிரிக்காவின் புளும்பொன்டின் நகரில் நடந்த இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களின் முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 315 ஓட்டங்களைக் குவித்தது.

தென்னாபிரிக்கா சார்பில் துடுப்பாட்டத்தில் கொலின் இங்ரம் ஆட்டமிழக்காமல் 105 ஓட்டங்களையும், ஏபிடி வில்லியர்ஸ் 65 ஓட்டங்களையும், சிமித் 30 ஓட்டங்களையும், ஹசிம் அம்லா 43 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பில் சஜீட் அஜ்மல் 2 விக்கெட்டுக்களையும், ஹபீஸ், ஜுனைட்கான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

316 என்ற கடினமான வெற்றியிலக்குடன் துடுப்பாட்டத்தைத் தொடங்கிய பாகிஸ்தான் அணிக்கு நஷீர் ஜாம்சட் - மொஹமட் ஹபீஸ் ஆகியோர் சிறந்த தொடக்கத்தை வழங்கினர்.

தொடர்ந்து வந்த வீரர்களும் ஓரளவுக்கு ஓட்டங்களைக் எடுத்த போதும் அது எதிரணி நிர்ணயித்த இலக்குக்கு போதுமானதாக அமையவில்லை.

இறுதியில் பாகிஸ்தான் அணியின் ஆட்டம் 36.2 ஓவர்களில் நிறைவுக்கு வர அந்த அணி 190 ஓட்டங்களை மாத்திரமே எடுத்திருந்தது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் சார்பில் அணித்தலைவர் மிஷ்பா உல் ஹக் 38 ஓட்டங்களையும், அதிரடியாக ஆடிய சஹீட் அப்ரிடி 16 பந்துகளில் 2 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 34 ஓட்டங்களையும், யுனுஸ் கான் 30 ஓட்டங்களையும், ஹபீஸ், ஜாம்ஷட் ஆகியோர் தலா 25 ஓட்டங்களையும் அதிகபட்சமாக எடுத்தனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் கிளைன்வெல்ட் 5.2 ஓவர்களில் 22 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், மக்லரைன் 7 ஓவர்களில் 30 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ஹைறல் அப்போட், ரிசொற்சோபே ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.



போட்டியின் ஆட்டநாயகனாக தென்னாபிரிக்காவுக்கு சதம் அடித்து கைகொடுத்த கொலின் இங்ரம் தெரிவானார்.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதல் போட்டியின் முடிவில் தென்னாபிரிக்க அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இரு அணிகளுக்கும் இடையிலான 2-வது ஒருநாள் சர்வதேசப் போட்டி எதிர்வரும் 15-ம் திகதி செஞ்சூரியனில் நடைபெறவுள்ளது.



உடுவில் கோட்டமட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி அண்மையில் இணுவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் 17 வயது ஆண்களுக்கான போட்டியில் இணுவில் மத்திய கல்லூரியும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இதில் இணுவில் மத்திய கல்லூரி அணி 25:18, 25:20 என்ற செற் அடிப்படையில் வெற்றி பெற்று 17 வயதுப்பிரிவில் சம்பியன்னானது. மூன்றாம் இடத்தை இணுவில் இந்துக்கல்லூரி பெற்று கொண்டது.



உடுவில் கோட்டமட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி அண்மையில் இணுவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது இதில் 15 வயது ஆண்களுக்கான போட்டியில் இணுவில் இந்துக் கல்லூரியும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரியும் மோதிக்கொண்டன. இதில் இணுவில் இந்துக்கல்லூரி அணி 25:14, 25:18 என்ற செற் அடிப்படையில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியை தோற்கடித்த 1 5வயதுப் பிரி வில் சம்பியனானது மூன்றாம் இடத்தை சிறிமுருகன் மகா வித்தியாலயம் பெற்றுக்கொண்டது.



உடுவில் கோட்டமட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி அண்மையில் இணுவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் 19 வயது ஆண்களுக்கான போட்டியில் இணுவில் மத்திய கல்லூரியும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரியும் மோதிக்கொண்டன.

இதில் சுன்னாகம் ஸ்கந்தவரேதயாக்கல்லூரி அணி 25:16, 25:22 என்ற செற் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது. மூன்றாம் இடத்தை இணுவில் இந்துக்கல்லூரி பெற்று கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென்னை மாணவர்களின் உண்ணாவிரதம் தொடர்கிறது

சென்னை லயோலா கல்லூரி மாணவர்களின் உள்ளிருப்புப் போராட்டம் மற்றும் உண்ணாவிரதப் போராட்டம் 3-வது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

8-ம் திகதி காலை முதல் சென்னை நுங்கம்பாக்கம் லயோலா கல்லூரி மாணவர்கள் இலங்கை அரசாங்கத்தை கண்டித்தும், இந்தியாவைக் கண்டித்தும் உள்ளிருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும், இலங்கை மீது சர்வதேச போர்க் குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும், ஈழத்தில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும், சிங்கள தூதரகத்தை தமிழகத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும், இலங்கையின் மீது பொருளாதாரத் தடை கொண்டுவர. இந்தியா ஒத்துழைக்க வேண்டும், உலகத் தமிழர்களைப் பாதுகாக்க தமிழக அரசு வெளியுறவுத்துறை அமைக்க வேண்டும், தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை நிறுத்த வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தும் மாணவர்கள் போராட்டம் மேற்கொண்டனர்.

இதில் 8 மாணவர்கள் இக்கோரிக்கைகள் நிறைவேறும் வரை சாகும் வரை உண்ணாநிலைப் போராட்டத்தில் குதித்துள்ளனர். பல தலைவர்களும், சமூக ஆர்வலர்களும், மாண வர்களும் பெரும் திரளாக வந்து தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர். (ஏ-11)

## இலங்கை ...

நேற்று ஞாயிறன்று வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் அவர் மற்ற நாடுகளின் உள்நாட்டு விடயங்களில் தலையிட முடியாதென்றால், தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கல் பிரச்சினையில் ஜவஹர்லால் நேருவும், வங்கதேசப் பிரச்சினையில இந்திரா காந்தியும் தலையிட்டது எங்ஙனம் என வினவியிருக்கிறார்.

இந்நிலையில் போர்க் குற்றங்கள் தொடர் பாக இலங்கை அதிபர் மஹிந்த மீது சர்வதேச விசாரணை வேண்டுமென்ற கோரிக்கை குறித்து மத்திய அரசு தன் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டே ஆகவேண்டும்.

ஈழத்தமிழர் நலனில் அது அக்கறை காட்டவேண்டும் என்பதை வலியுறுத்தியே எதிர்வரும் மார்ச் 12 அன்று பொது வேலை நிறுத்தத்திற்கான அழைப்பு எனக் கருணாநிதி கூறியிருக்கிறார்.

இதனிடையே இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக பொதுவாக்கெடுப்பு வேண்டும் .

இலங்கைக்கு எதிரான அமெரிக்க தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் போன்ற கோரிக்கை களை வலியுறுத்தி சென்னை லயோலா கல்லூரி மாணவர்கள் 8 பேர் மேற்கொண்டுள்ள உண்ணா நோன்பு மூன்றாவது நாளாக நேற்று ஞாயிறன்றும் தொடர்ந்து. வருவதுடன் அதற்கான ஆதரவும் பெருகி வருவததாக தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஏ-11)

## ஜெனிவா சமர்ப்பித்த ...

காரணதினால் அங்கே அதிகார வர்க்கத்தின் தகவல்களின் அடிப்படையில் பயந்தாங் கொள்ளித்தனமான முடிபுகளை அது எடுப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

இலங்கையில் நடந்த் சம்பவங்கள் என்னவென்று இந்தியாவுக்கு நன்றாக தெரியும். ஒரு தார்மீக அடிப்படையில் என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இந்தியாவுக்கு யாரும் சொல்லிக்கொடுக்கவும் தேவையில்லை இத்தகைய தீர்மானங்கள் காரணமாக இலங்கை இறங்கி வரத் தொடங்கியிருப்பதாகவும் சுட்டிக்காட்டுகிறார்.

இலங்கை விடயத்தில் அந்த நாட்டுக்கு எதிராக வாக்களித்தால், அதனால் இந்தியாவுக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படாது.

அதனை இந்தியத் தரப்பு புரிந்து கொள்ள வேண்டும் என்றும் கூறுகிறார்.

உண்மையில் இலங்கையில் இந்தியா எந்த விதமான போரையும் நடத்தவில்லை நீங்கள் நடத்துங்கள் என்று இலங்கைக்கு கூறிவிட்டு வாயை மூடிக்கொண்டு இருந்தது என்பது உலகிற்கே தெரிந்த விடயம். ஜனாதிபதி ராஜபக்ஷ அவர்கள் தானே போரை நடத்தியதாக ஏற்கெனவே கூறிவிட்டதால் , இந்தியா மீது இந்தப் போர் குறித்த பழி வந்து விடும் என்று அது பயப்படத்தேவையில்லை என்றும் கூறினார்.

அதேவேளை, இந்தத் தடவை கூட இலங்கைக்கு எதிராக வரக்கூடிய தீர்மானத்தை தணிக்கும் முயற்சியில் இந்தியா ஈடுபடலாம் என்றும் அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

## பொதுநலவாய...

விடயத்தில் இன்னும் பிரித்தானிய அரசாங்கம் உரிய கவனத்தை செலுத்தவில்லை என்று சிமொன் டன்ஸ் ஷேக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், பிரித்தானிய அரசாங்கம் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை பகிஷ்கரிக்க வேண்டும் என்று வெளியுறவுக் குழு கோரியுள்ளதாக டன்ஸ்ஷேக் குறிப்பிட்டுள்ளார்.

2011ஆம் ஆண்டு இலங்கையின் தங்காலையில் பிரித்தானிய பிரஜை கொல்லப்பட்டதன் விசாரணை முன்னேற்றத்தை கண்காணிப்பதற்காக கடந்த வாரம் இலங்கை வந்திருந்த கொல்லப்பட்டவரின் சகோதரருடன் டன்ஸ்ஷேக்கும் வந்திருந்தார். (ஏ-11)

## சாளின் மீதான...

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்நிலையில் நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்து கருணாரத்ன, தாக்குதல் மேற்கொண்டவர்கள் குறித்து தீவிர விசாரணைகளை மேற்கொண்டதுடன் தாக்குதல் சம்பவம் குறித்து பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கும் தகவல் வழங்கினார்.

அத்துடன் தாக்குதல் இடம்பெற்ற இடத்துக்குச் சென்றும் விசாரணை மேற்கொண்டதுடன் சந்தேகத்துக்கிடமானவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் குறித்தும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளைபடுகாயமடைந்துயாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் சாளினுக்கு, முழுநேர பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

## புலி ஆதரவாளர்களின்...

கொண்டு வருகிறார்கள். சர்வதேச வல்லரசுகளுடன் கைகோர்த்து செயல்படுகின்றனர்.

எனவே நாங்கள் தெளிவாக புரிந்து கொள்ளவேண்டும்; எஞ்சியுள்ள கடல்கடந்த நிலையில் செயல்படும் தமிழீழ விடுதலைப் புலி தலைவர்களின் நிலைப்பாடுகளை எங்களால் மாற்ற முடியாமல் போய்விட்டது.

அதனால் அவர்களின் செயல்பாடுகளை முறியடிக்க அர்ப்பணிப்புடனும், உயிர் தியாக நோக்கிலும் செயல்பட வேண்டும்.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற பாரிய கப்பல்,சூழல் காற்றில் சிக்கியிருந்த போது, அனைத்து தடைகள் மற்றும் இடையூறுகளையும் கடந்து கப்பல் தலைவரைப் போல அதனை பாதுகாத்துள்ளேன் என்றும் அமைச்சர் கூறியுள்ளார். (ஏ-11)

## ஹயஸ் வான்...

சென்றவர்கள் வாகனத்தை நிறுத்திவிட்டு அருகில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியுள்ளனர்.

இந்நிலையில் ஹயஸ் வான் இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. (ஏ-11)

## மோ.சைக்கிள்...

இடத்தினைச் சேர்ந்த பி.செல்வகுமார் (வயது 29) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பிரஸ்தாப நபருக்கு திருமணமாகி 8 மாதங்கள் மட்டுமே எனத் தெரிவிக்கப்பட்டது. (ஏ-11)

## தீர்மானத்தை ஆராய...

கண்டறியும் பொறிமுறை ஒன்றை உருவாக்குதல் போன்ற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த உத்தேச தீர்மானம் தொடர்பில் ஆராய்ந்து எவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது தீர்மானிக்கப்படும் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஏ-11)

## அதிகாரப் பரவலாக்கல் ...

இதற்காக தெரிவுக்குழு ஒன்று நாடாளுமன்றத்தில் நியமிக்கப்பட்டிருந்தபோதும்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதில் அங்கம் வகிக்கவில்லை.

அவர்கள் பல்வேறு நிபந்தனைகளை முன்வைத்து தீர்வு குறித்த செயற்பாடுகளை தாமதிக்கச் செய்தனர்.

இதற்கு இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூறவேண்டிய அவசியம் இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இதற்குப் பொறுப்பாளிகள் என்றார்.

இதற்கிடையில் அமெரிக்காவின் பிரேரணையில் வலியுறுத்தப்பட்டுள்ள மற்றுமொரு விடயமான கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரை அமுலாக்கம் தொடர்பில் கருத்துக் கூறுகையில்,

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஒரே இரவில் அமுலாக்கிவிட முடியாது என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இதற்காக குறுங்கால மற்றும் நீண்டகால அடிப்படையில் அவற்றை அமுலாக்குவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவும் - இந்தியாவும் இலங்கைக்கு முக்கியமான நாடுகளாக உள்ள நிலையில், இந்தப் பிரேரணையில் அந்த நாடுகளுடனான இராஜதந்திர உறவுகளில் சிக்கல் ஏற்படுமா என்று கேள்வி எழுப்பப்பட்டது.

இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையிலான இராஜதந்திர ரீதியான உறவுகளில் இது பாதிப்பை ஏற்படுத்தாது.

இந்த நாடுகளுடனான இராஜதந்திர உறவு சிறந்த நிலையில் உள்ளது.

சில சந்தர்ப்பங்களில் இந்தியாவின் நிலைப்பாட்டுக்கோ அல்லது அமெரிக்காவின் நிலைப்பாட்டுக்கோ இலங்கையால் இணங்க முடியாமல் போகலாம்.

அது இந்த நாடுகளுக்கு இடையிலான உறவை நேரடியாகப் பாதிக்காது என்று தெரிவித்தார்.

இதேவேளை இந்தியா ஒரு வேளை இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்குமாக இருந்தால், இந்தியா தொடர்பில் இலங்கைஎந்தநிலைப்பாட்டில் இருக் கும் என்று கேள்வி எழுப்பப்பட்டது.

இந்திய அரசிற்கு இருக்கின்ற பிரச்சினைகளை இலங்கை புரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இந்தியகாங்கிரஸ் அரசு தனியான கட்சி ஒன்று இல்லை. அது பல்வேறு கட்சிகளின் கூட்டாக உள்ளது.

இந்த நிலையில் அரசாங்கத்தின் மீது பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. அதனால் இந்திய அரசாங்கம் இலங்கையுடனான உறவு குறித்து மாத்திரம் இன்றி, தொடர்ந்து ஆட்சி நடத்துவது தொடர்பிலும் சிந்திக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (ஏ-11)


**Diploma In Spoken English**

அதிநவீன ஆங்கில பாடநெறியை
சில மாதங்களில் கற்று
சிறந்த பேச்சாளர்களாக மாறுங்கள்
மிகப்பெறுமதியான U.K சான்றிதழ்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
செவ்/வியாழன் 04.15 - 06.30 P.M
**12.03.2013 @ 4.15 P.M**
சனி/ஞாயிறு 01.00 - 03.30 P.M
**16.03.2013 @ 01.00 P.M**
பதிவுகள் இடம்பெறுகின்றன
FEEL THE BRILLIANT FUTURE
**E-CITY**
COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT
ஆனைப்பந்தி, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்
(வீரகாளி அம்மன் கோவில் அருகில்)
**0774924166 /0770610271**



**காணி விற்பனைக்கு**

பூநகரி-மன்னார் வீதியில் இருந்து பள்ளிகுடா வீதிக்கு திரும்பும் இடத்தில் உறுதியுடன் உள்ள 01 ஏக்கர் காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-0713011842 (2097)


## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி இராசரத்தினம்



பிள்ளையார் கோவிலடி, தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி இராசரத்தினம் 10.03.2013 அன்று இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் (ஓய்வுபெற்ற மாவட்ட காணிப்பதிவாளர்) அன்பு மனைவியும், இராஜமகேஸ்வரன் (பொறியியல் விரிவுரையாளர் - UK), மதிதெனி, இரஞ்சினி (U.K), Dr.மாலினி(Scotland), பாலகுமார் (பொறியியலாளர் Norway), இராஜ்குமார் (வைத்திய உதவியாளர் -Norway), இராகினி(Canada), இந்திரகுமார்(U.K)ஆகியோரின் அன்புத் தாயாரும், சரவணபவன், காலஞ்சென்ற அரசரத்தினம், சதானந்தன் (Scotland), சுதன் (Canada), சந்திரவதனி (U.K), கௌரி (Norway), ஜானகி (Norway), கலைமதி (U.K) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிரேஷ், மயூரேஷ், கார்த்திகா, நிர்த்திகா, நசிக்கேத்தா, நிவேதிதா, இளங்கோ, துர்கா, கிஷான், அபிநாஷ், சகானா, பிரணீத், நீரஜா, தனுஷன், தர்மிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அட்சயன், அபிசரண், மகதி, சாஸ்வத சாய், அர்ஜன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் புதன்கிழமை (13.03.2013) அன்று அன்னாரின் இல்லத்தில் காலை 10 மணியளவில் இடம்பெற்று தாவடி மயானத்தில் அந்தியேட்டிக் கிரியைகள் இடம்பெற்று அதன்பின்னர் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பிள்ளையார் கோவிலடி,
தாவடி.

தகவல்:
சரவணபவன்( மருமகன்)
021 222 5442

(சி-2648)


**Pc MATE SYSTEMS**
Computer Sales & Repair
உங்களது கணினியில் ஏற்படும்
Software/Hardware/Virus
பிரச்சினைகளுக்கு சிறப்பாகவும் மிக விரைவாகவும் தீர்வைப்பெற்றுக்கொள்ள எங்களை நாடுங்கள் ,
மலிவு விலையில்
Core 2 duo, Dual Core , LGA HT
Branded Computers 0779689045
478 Mother Board
LGA DDR2 Board
DDR/DDR2 Rams
IDE/SATA HDD
LCD Monitors
Computers
எமது புதிய கிளை
746B பருத்தித்துறை வீதி
நல்லூர்



**FRENCH LANGUAGE CENTRE**
யாழில் சர்வதேச தரத்தில் French கற்பிக்கும் ஒரே ஒரு நிறுவனம்
**FRENCH CLASSES**
Canada, French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட, International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்...
ஆசிரியர் : Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்).
Batch 1 - 16.03.13 Sat 11am
Batch 2 - 18.03.13 Mon 3pm
No. 23, Palaly Road, ஆரியகுளம்.
(அப்பலோ வைத்தியசாலை முன்பாக)
Batch 1 - 19.03.13 Tue 11am
No, 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)
T.P. 0779 789 456
இணைவு : BCLL English Courses Deutsch, Sinhala வகுப்புக்களும்...


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org